மஞ்சரி

விஜய - மாசி

பிப்ரவரி, 1954

புது வருஷப் பலன்கள்

ஊர் சுற்றும் பாங்க்

பல்வலி போக்கும் பச்சிலை

பொற் கொல்லன் (அரபிக் கதை)

மார்கழி இரவு (இந்தியக் கதை)

-6-

அணா

வாள் வேண்டாம்

வாளை நீக்கிவிடு. வாள் இல்லாமலே நாடுகளைக் காப்பாற்ற முடியும். பேனாவைக் கொண்டு வா.

—லார்டு லிட்டன்.

மஞ்சரி

ஆசிரியர், பதிப்பாளர்: என். ராமரத்தினம்

நிர்வாக ஆசிரியர்: கி. ஜ. ரங்கநாதன்

பாஷை ஆசிரியர்கள்:

கி. வா. ஜகந்நாதன்
கா. ஸ்ரீ. ஸ்ரீ.
த. நா. ஸேனாபதி
வி. எச். சுப்பிரமணிய சாஸ்திரி
கௌரி அம்மாள்
கி. தாமோதரன்
கி. சாவித்திரி அம்மாள்
சீதா தேவி
'ஆர்வி'
மோ. ஸ்ரீ. செல்லம்

ஓவியர்கள்: ஸாமி, மகான், சுசி, சுப்பு.

மஞ்சரி, தபால் பெட்டி நெ. 604, மயிலாப்பூர், சென்னை 4. பிரதி மாதமும் முதல் தேதி வெளிவரும். தனிப் பிரதி விலை 6 அணா. வருஷ சந்தா ரூ. 4/8. கலைமகள் சந்தாதார்களுக்கு மட்டும் ரூ. 4/-. சந்தாத் தொகையை 'ஸர்க்குலேஷன் மானேஜர்' என்ற விலாசமிட்டு அனுப்புக. விலாச மாற்றங்களைத் தங்கள் பழைய விலாசத்துடன் சந்தா எண்ணையும் குறிப்பிட்டுத் தெரிவியுங்கள். மஞ்சரியிலுள்ள எல்லாக் கட்டுரைகளும் கதைகளும் பதிப்புரிமை பெற்றவை.

ஆண்டு 7] ஸ்தாபிதம்: நவம்பர் '47 :: பிப்ரவரி 1954 [இதழ் 2

மஞ்சரி

மாதத்தின் சுவையான மலர்க்கதம்பம்

ஊரும் உலகமும்

★

"அன்பு, மரியாதை, நல்ல உணவு இவைகளால் என்னைக் கொன்றுவிட்டீர்களே!" என்று வேடிக்கையாகச் சொல்லிவிடை பெற்றார் ஸிலோன் பிரதம மந்திரி கொத்தலைவாலா. "இங்கிருந்து வரப் போகிறவர்களை நானும் இதே மாதிரி நடத்தப் போகிறேன்" என்றார். அவர் வந்த காரியம் அவருக்குத் திருப்திகரமாக நிறைவேறியது. இந்தியப் பிரதம மந்திரி நேருவுடன் ஸிலோன் இந்தியர் விஷயமாக அவர் பேசிய பேரம் வெற்றி பெற்றது. இரு நாடுகளுக்கும் ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது. ஒப்பந்தப்படி சுமார் நான்கு லட்சம் இந்தியரை ஸிலோன் பிரஜைகளாக இரண்டு வருஷத்துக்குள் ரெஜிஸ்டர் செய்துகொள்ளுவார்கள். ஸிலோனில் மொத்தமுள்ள ஒன்பது லட்சம் இந்தியரில் மீதிப் பேரின் நிலைமை அந்தரமாக இருக்கிறது. அவர்களை மீண்டும் இந்தியாவுக்கு அனுப்பப் பலவந்தம் உபயோகிக்க மாட்டார்களாம்; தூண்டுதல்தான் செய்வார்களாம். ரெஜிஸ்டராகும் பிரஜைகளுக்குத் தனித் தொகுதி ஏற்படுத்துவார்களாம். பரஸ்பரம் நல்லெண்ணத்தோடு செய்துகொண்ட ஒப்பந்தம் தான் இது. என்றாலும், ஸிலோன் இந்தியர்களுக்கு இது திருப்தி தரும் என்று தோன்றவில்லை.

*   *   *

தன் காவலில் இருந்த இருதரப்புக் கொரியா யுத்தக் கைதிகளையும் அந்த அந்தத் தரப்பினரிடம் ஜனவரி 22-ஆந் தேதியோடு நடுநிலைமை இந்தியத் துருப்புகள் ஒப்புவித்துவிட்டன. இப்படி ஒப்புவித்தாலும், யுத்தக் கைதிகளை விடுதலை செய்யாமல் இரு தரப்பினரும் அரசியல் மகாநாட்டைக் கூட்டி ஒரு சமரசத்துக்கு வரவேண்டும் என்று தீர்ப்புக் கூறினார் நடுநிலைக் கமிஷன் தலைவர் திம்மையா. இதை அமெரிக்கர் ஒப்புக்கொள்ளவில்லை. இப்படி ஒப்புவித்திருக்கவே கூடாது என்கிறார்கள் சீனர்கள். யுத்தக் கைதிகள் பிரச்னையில் சமரசம் ஏற்படாமல் இப்படி முறிந்ததால், மீண்டும் போர் தோன்றுமோ என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் ஐரோப்பியப் பிரச்னையில் ஒற்றுமை காண அமெரிக்கா, பிரான்ஸ், பிரிட்டன், ருஷியா இந்த நான்கு வல்லரசு மகாநாடு நடைபெறு

கிறது. உலகம் முழுவதிலுமே அமைதி நிலவுவதற்குரிய முயற்சிகளைச் செய்ய அந்தரங்க சுத்தியோடு வல்லரசுத் தலைவர்கள் முன் வந்தாலொழிய மூன்றுவது உலக யுத்த அபாயம் இருந்து கொண்டேதான் இருக்கும்.

* * *

எல்லைப் புறக் காந்தி கபார் கான், அவருடைய சகோதரரும் பிரிக்காத இந்தியாவில் எல்லைப் புறப் பிரதம மந்திரியுமான டாக்டர் கான் சாகேப் இருவரையும் மற்றும் பல அரசியல் கைதிகளையும் பாகிஸ்தான் சர்க்கார் விடுதலை செய்த செய்தி மகிழ்ச்சிக்குரியது. இந்தியா, பாகிஸ்தான் இரண்டும் விடுதலை பெற்றதற்குக் காரணமான பெருந்தலைவர்களுள் இருவர் எல்லைப்புறச் சகோதரர். மகாத்மா காந்திக்கு அடுத்தபடியாகக் கொண்டாடப் பெற்ற ஒருவர் கபார்கான். நாடு விடுதலை பெற்றதும் எல்லைப்புறச் சகோதரர் சிறைப்பட்டது பாரத நாட்டு மக்களுக்குப் பெருந் துயரளித்தது. இப்போதாவது அவர்களைப் பாகிஸ்தான் சர்க்கார் விடுதலை செய்ததே, அதற்கு நாம் மகிழ வேண்டியதுதான். ஆயினும், கபார்கான் எல்லைப்புறத்தில் வசிக்கக்கூடாதென்றும் மேற்குப் பஞ்சாபிலேயே இருக்க வேண்டும் என்றும் தடை விதித்திருப்பது நமக்குச் சற்று வருத்தமாய்த்தான் இருக்கிறது. சீக்கிரம் அவருக்கு முழு விடுதலை கிடைக்க வேண்டும்; பாகிஸ்தானுக்கு அவர் பெருஞ் சேவை புரியவேண்டும்; இந்தியா - பாகிஸ்தான் உறவு, உற்ற நட்பாக மாற அவர் உதவ வேண்டும் - இதுவே நம் ஆசை.

* * *

பாகிஸ்தானில் கராச்சிக்கு 75 மைல் தூரத்தில் நடுக் காட்டில் சில நாளைக்கு முன் நேர்ந்ததைப் போன்ற கோர ரெயில் விபத்து, இதுவரைக்கும் உலகிலேயே வேறெங்கும் நேர்ந்திராதென்று தோன்றுகிறது. தடம் விட்டுக் கீழே இறங்கி நின்ற எண்ணெய் வண்டி ஒன்றின்மீது பாகிஸ்தான் மெயில் மோதியிருக்கிறது. எண்ணெய் பற்றிக்கொண்டது. தீ பிரயாணி வண்டிகளுக்குத் தாவியது. அப்படியே சுமார் 200 பிரயாணிகள் தீக்குள் அகப்பட்டு உயிரோடு கொளுத்தப் பெற்று மாண்டார்கள். மாண்டவரில் பெரும் பகுதியினர் பெண்களும் குழந்தைகளுமே. அதே மெயிலில் பிரயாணம் செய்துகொண்டிருந்த பாகிஸ்தான் அயல் விவகார மந்திரி ஜபருல்லா கான் ஏதோ சிறு காயங்களோடு தப்பிப் பிழைத்தார். பாகிஸ்தானில் நேர்ந்த இந்தப் பயங்கர விபத்தைப்பற்றிக் கேட்டு உலகெங்குமே எவரும் வருந்தியிருப்பர். பிசகு யார் மீதோ? யார்மீதும் இல்லையோ? எப்படியானாலும் சரி: ரெயில் பிரயாணம் இவ்வளவு அபாயமுள்ளதாக இராதபடி முன்னெச்சரிக்கை ஏற்பாடுகளை வகுப்பது நிபுணர்கள் கடமை; அவற்றை மிகுந்த பொறுப்புடன் அநுஷ்டிப்பது ரெயில்வே ஊழியர்களின் கடமை. பாகிஸ்தானில் துக்கமுற்ற குடும்பங்களுக்கெல்லாம் பாரத மக்களின் ஆழ்ந்த அநுதாபம் உரியதாகும்.

புது வருஷப் பலன்கள்

★

இந்தப் பிரபலமான ஜோஸ்யப் பத்திரிகை 1954-இல் உலகம் முழுவதற்குமே பலன்கள் கூறியிருக்கிறது. இந்தியாபற்றிய பகுதியைமட்டும் இங்கே தந்திருக்கிறோம்.

சாந்திர மான ஜய வருஷம் 1954-ஆம் வருஷம் ஏப்ரல் மாதம் மூன்றாம் தேதி மாலை மணி 6-19-க்குப் பிறக்கிறது. இந்த வருஷத்துக்குரிய நாயகர்கள்; அரசன்-சூரியன்; மந்திரி-செவ்வாய்; சஸ்யாதிபதி-சுக்கிரன்; தான்யாதிபதி-குரு; மேகாதிபதி-செவ்வாய்; ரஸாதிபதி-சூரியன்; உலோகங்களின் அதிபதி - சுக்கிரன்; வியாபார மந்திரி- சந்திரன்; சேனாதிபதி-செவ்வாய்; பசு நாயகன் - யமன். குருவும் சனியும் இந்தக் கூட்டத்தில் இல்லை. பாபக்கிரகமான செவ்வாய் மந்திரியாகவும் சேனாதிபதியாகவும் இருப்பது கவனிப்பதற்குரியது. இந்த நாயகர்கள் தரும் பலன்களையும் வருஷப் பிறப்பின் போது அமையும் கிரகநிலைகளையும் கொண்டு ஆராய்ந்தால் ஓரளவு பின் உள்ள நிகழ்ச்சிகளைச் சோதிட நூலின் துணைகொண்டு அறியலாம்.

இந்தியாவில் வங்காளத்தில் அமைதியற்ற நிலை இருக்கும். காஷ்மீர் பிரச்னையில் முன்னேற்றம் ஒன்றும் இராது. மகாராஷ்டிரத்தில் பாஷாவாரி மாகாண சம்பந்தமான கிளர்ச்சிகள் பல இடங்களில் உண்டாகும்.

சாந்திர மான மாதங்களாகிய சைத்திரத்திலும் (ஏப்ரல், மே), வைசாகத்திலும் (மே, ஜூன்) பருத்தி, பருத்திக் கொட்டை, நெல், தாமிரம் இவற்றின் விலை உயரும். நூல், மற்றத் தானியங்கள், கொப்பரை ஆகியவை நிறையக் கிடைக்கும். வைகாசி மாதத்தின் இறுதியில் எள், எண்ணெய்கள், வெண்ணெய் ஆகியவற்றின் விலையில் திடீர் மாறுதல் உண்டாகும். ரெயில் விபத்துக்களும் ரஸ்தாக்களில் விபத்துக்களும் பல ஏற்படும். திருட்டும் அதிகமாகும். தொழிற்சாலைகள் உள்ள பெரிய நகரங்களில் தீ விபத்துக்கள் நேரும். ஆனி மாதத்தில் வெல்லம், சர்க்கரை, எள், கர்ப்பூரம், வெண்ணெய் இவற்றின் விலை ஏறும். வெள்ளி, பித்தளை, தாமிரம் இவற்றின் விலை இறங்கும். ஆடி மாதத்தில் பெருங்காற்றினாலும் உஷ்ண அலைகளாலும் தொல்லைகள் விளையும். ஆவணியில் வெள்ளியும் தங்கமும் சிறிது விலை ஏறும். புரட்டாசியில் ஜுரங்களும் வேறு நோய்களும் உண்டாகும். மார்கழி மாதம் பருத்தி, மிளகு, பட்டு, கம்பளி, தங்கம் இவை திடீரென்று விலை

காப்பிரைட்: தி அஸ்ட்ராலாஜிகல் மகஸீன் (ஆங்கிலம்: 1954 வருஷ மலர்), பங்களூர்.

ஏறும். தை, மாசி மாதங்களில் அமைதிக்குப் பங்கம் நேரும். மாசி பங்குனியில் கால நிலையால் பயிருக்குச் சேதம் உண்டாகும்.

இரண்டாம் வீட்டில் சனி இருப்பதால், அரசாங்கத்தின் வருமானம் குறையும்; பொருளாதார மந்தம் ஏற்படும். நிலப் பிரச்னை தொல்லைகளை உண்டாக்கும். ஒன்பதாம் இடத்தில் புதன் இருப்பதால் சமய சம்பந்தமான முயற்சிகள் அதிகமாகும். ஒழுக்கப் பிரசாரமும் உரம் பெறும். சுப்ரீம் கோர்ட்டிலிருந்து ஒருவர் ஓய்வு பெறுவார். பொதுஜனங்களுக்கு உபகாரமான சில முக்கியத் தீர்ப்புகள் அந்தக் கோர்ட்டில் அளிக்கப்பெறும்.

சனியின் சாரத்தை நோக்கினால் நிலத்தை உடையவர்களுக்கும் குடிகளுக்குமிடையே சச்சரவு அதிகமாகும் என்று தோன்றுகிறது. செவ்வாயின் நிலையைப் பார்த்தால் அரசாங்கத்துக்குப் பல தொந்தரவுகள் உண்டாகுமென்று தெரிகிறது. பொதுக் கட்டிடங்களில் தீ விபத்து நேரும். முக்கியமான சுரங்கக் கம்பெனிகள் சிலவற்றை மூடிவிடுவார்கள்; நூல் ஆலைகள் சிலவற்றையும் மூடும் நிலை வரலாம். ராகுவின் நிலையும் அரசாங்கத்துக்குத் தீய பலனையே புலப்படுத்துகிறது.

இந்த வருஷத்தில் காஷ்மீர் பிரச்னை தெளிவுறும் என்று சொல்வதற்கில்லை. நம்முடைய தலைவர்கள் எவ்வளவு முயற்சி செய்தாலும் பாகிஸ்தான் தன் போக்கினின்றும் மாறாது; ஜீஹாத் கோஷத்தை மறுபடியும் இந்தியாவுக்கு எதிராக எழுப்பும். உலகத்து ஸ்தாபனங்களில் இந்தியாவின் மதிப்பு உயருமானாலும், வெளிநாட்டுத் தொடர்பில் தொல்லைகள் உண்டாகும். அநாவசியமான வதந்திகள் எழும். இந்தியாவில் உள்ள மதிப்புக்குரிய பெரிய அரசியல் தலைவர் ஒருவர் மரணம் அடைய நேரலாம்.

ஜூலை, ஆகஸ்டு மாதங்களில் பிரயாண மார்க்கங்களில் பெரிய விபத்துக்கள் ஏற்படும்.

ஜவாஹர்லால் நேருவுக்கு ராகு தசையில் ராகு புக்தி நடைபெறுகிறது. 1956-ஆம் வருஷம் மார்ச்சு மாதம் வரையில் இது இருக்கும். 1954 மார்ச்சு மாதம் வரையில் குருவின் அந்தரம் நடைபெறும். பிறகு சனி அந்தரம். குரு அந்தரம் முழுவதும் இப்போதுள்ள நிலையே நீடிக்கும். சனி அந்தரத்தில் அவர் தம்முடைய தேக சௌக்கியத்தை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளவேண்டும். சச்சரவும் மனத்தாங்கலும் ஏற்பட இடம் உண்டு.

காங்கிரஸ் ஸ்தாபனத்தில் உள்ளூறக் கட்சிப் பிரதிகட்சிகள் பலமாகும். முக்கியமான காங்கிரஸ் தலைவர் ஒருவர் காலமாவார். கிழக்கிந்தியாவிலும் தென்னிந்தியாவிலும் காங்கிரஸுக்குள் பிளவு உண்டாகும். கட்சிகளில் உள்ள மாறுபாடுகள் மிகவும் அதிகமாகும். பதவிக்கும் தன்னலத்துக்கும் ஆசைப்படும் பேர்வழிகளால் ஒற்றுமை குலையும். ஆந்திர மந்திரி சபையிலும் சென்னை மந்திரி சபையிலும் மாற்றங்கள் உண்டாகும். விமானப் பிரயாணத்தில் அபாயமும் கஷ்டமும் ஏற்படும். வங்காள மந்திரி சபையில் குழப்பம் ஏற்படும்; மாறுவதற்கும் இடம் உண்டு.

இந்த வருஷத்தின் பிற்பகுதியில் பாகிஸ்தானில் கடுமையான குழப்பம் நேரலாம். சீனுவில் மா-ஸே-துங்குக்கு இன்னும் இரண்டு மாதங்கள் வரையில் மிகவும் சங்கடமான நிலை இருக்கும். அவருடைய பதவிக்கே கலகலப்பு நேரலாம்.

இன்னும் இரண்டு வருஷ காலத்துக்குள் ருஷியாவின் முழு அமைப்பே மாறிவிடலாம். ஜூன் மாதத்துக்குமேல் அரசியல் தலைவர்களைவிட ராணுவத் தலைவர்களின் ஆதிக்கம் அதிகமாகும். ருஷியாவுக்கும் ஐக்கிய அமெரிக்காவுக்குமிடையே உள்ள பிளவு குறைந்து வரும். இந்த ஆண்டு முடிவுக்குள் அவ்விரண்டு நாட்டுக்குமிடையே ஏற்படும் சமூக உறவினுல் உலகத்தின் அமைதிக்கு அநுகூலம் உண்டாகும்.

அமெரிக்காவுக்கும் முஸ்லிம் நாடுகளுக்கும் இடையே உள்ள தொடர்பு சுமுகமாக இருக்கும். இந்தியாவிடம் அது நேசமாகவே இருக்கும்.

அடுத்த வீட்டுக்காரன் யோசனை

ஒருவனுக்கு இரண்டு பையன்கள். ஒரு நாள் தன் பிள்ளைகளைப் பார்த்துத் தகப்பன், "நான் சாகும் தருவாயில் இருக்கிறேன். சொத்துக்களை இரண்டு பேரும் சரியாகப் பிரித்து எடுத்துக்கொள்ளுங்கள்" என்று கூறினுன். தகப்பன் இறந்துவிட்டான். பிள்ளைகள் இரண்டு பேரும் சண்டை போடாமல் சொத்தைப் பிரித்துக்கொள்ள முடியவில்லை.

சண்டை வளர்ந்தது. தங்களுக்குள் தீர்த்துக்கொள்ள முடியாத சண்டையை மத்தியஸ்தர் மூலம் தீர்த்துக்கொள்ள அவர்கள் முடிவு செய்தார்கள். பக்கத்து வீட்டுக்காரனிடம் தங்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள்.

பக்கத்து வீட்டுக்காரன் அவர்களுடைய தகப்பன் என்ன கூறிவிட்டு மரணம் அடைந்தான் என்று விசாரித்தான்.

"சகல சொத்துக்களையும் சரி பாதியாகப் பிரித்துக் கொள்ளும்படி அவர் உத்தரவிட்டார்" என்று அவர்கள் சொன்னுர்கள்.

"அப்படியானுல் துணி மணிகளை இரண்டு இரண்டாகக் கிழியுங்கள்; சாமான்களை இரண்டாக உடைத்து எடுத்துக் கொள்ளுங்கள்; ஆடு மாடுகளை இரண்டு இரண்டாக வெட்டி எடுத்துக்கொள்ளுங்கள்" என்று பக்கத்து வீட்டுக்காரன் யோசனை கூறினுன்.

சகோதரர்கள் இரண்டு பேரும், பக்கத்து வீட்டுக்காரனின் புத்திமதியை ஏற்று அப்படியே செய்தார்கள். கடைசியில் அவர்களுக்கு ஒன்றுமே மிஞ்சவில்லை.

—டால்ஸ்டாய் கதைகள், 'சக்தி'

அஜாமிலன்

"ஜீவன் பாவம் செய்கிறான். அது அவனுக்கு இந்த உலகிலும் மறு உலகிலும் தீங்கைச் செய்யும் என்பதை அவன் உணராமல் இல்லை. சில சமயம் அதற்குப் பிராயச்சித்தமும் செய்கிறான். ஆனால் மறுபடியும் அந்தத் தீய செயலைச் செய்வதால் பிராயச்சித்தம் பயன்படுவதில்லை. ஆகவே, பிராயச்சித்தத்தால் பாவத்தை ஒழிப்பது முடியாத காரியமாகி விடுகிறது. பின் எப்படித்தான் அவைகளை ஒழிப்பது? தயை செய்து கூறி அருளவேண்டும்" என்று பரீட்சித்து மகாராஜா சுகதேவரைக் கேட்டான். அதற்கு அவர் பதில் சொல்லலானார்:

"ஒரு வினையைச் செய்து மற்றொன்றை ஒழிப்பதென்பது முடியாத செயலாகும். வினையின் மூல காரணமாகிய ஆணவத்தை ஒழிக்காமல் மனிதன் பிராயச்சித்தம் செய்வதால் மறுபடியும் பாவச் செயலிலே ஈடுபடுகிறான். ஆகவே, ஆணவத்தை ஒழித்தாகவேண்டும். கடவுளை எப்போதும் தியானித்து வருவதுதான் அதை ஒழிக்கும்; இதுதான் பாவத்துக்குரிய பிராயச்சித்தம். இது ஒன்றே காட்டுத் தீ நாணல் புதரை அழிப்பதுபோலவும், சூரியன் பனியை அகற்றுவது போலவும் பாவங்களை விரைவில் போக்கக் கூடியது. ஒரு தடவையாவது கடவுளின் திருவடிகளை மனமார நினைத்தவனை யம தூதர்கள் தீண்டமாட்டார்கள் என்பது நிச்சயம். இதற்கு உதாரணமாக ஒரு கதை சொல்கிறேன், கேள்:

"கான்யகுப்ஜ நாட்டில் அஜாமிலன் என்றொரு பிராம்மணன் இருந்தான். அவன் வேசி ஒருத்தியிடம் மோகங்கொண்டு ஒழுக்கத்தைக் கைவிட்டு அவளோடு வாழ்ந்து வந்தான். வழிப்போக்கர்களைத் துன்புறுத்தியும், சூதாடியும், திருடியும் பொருள் சேர்த்துக் குடும்பம் நடத்தினான். இப்படி எண்பத்தெட்டு ஆண்டுகளைக் கழித்தான். அவனுக்கு அந்த வேசியிடம் பத்துப் பிள்ளைகள் பிறந்தார்கள். அவர்களில் கடைசி

கிருஷ்ண பகவானின் லீலைகளை மட்டுமல்ல; இன்னும் எத்தனையோ அரிய கதைகளையும் சொல்வது பாகவதம். அதில் ஒரு பகுதி இது.

மகன் பெயர் நாராயணன். தாய் தந்தையருக்கு அவனிடம் அன்பு அதிகம். கிழவன் அந்தக் குழந்தையின் மழலைச் சொற்களைக் கேட்டும் அதன் விளையாட்டைக் கண்டும் மனம் பூரித்தான். அதைச் சீராட்டிப் பாராட்டி வளர்க்கும் மகிழ்ச்சியில் சாவு நெருங்கிவிட்டதைக்கூட அவன் உணரவில்லை.

"மகனை அவனால் மறக்கவே முடியவில்லை. கையில் பாசக்கயிற்றுடன் பயங்கரமான யமதூதர்கள் மூன்று பேர் அவன்முன் தோன்றினார்கள். அவர்களைப் பார்த்ததும் அஜாமிலன் உள்ளம் பதறி, தொலைவில் விளையாடிக்கொண்டிருந்த தன் அருமை மகனை, 'நாராயணா' என்று தழுதழுத்த குரலில் கூப்பிட்டான்.

"இதைக் கேட்டதும் விஷ்ணு தூதர் அங்கே விரைந்தோடி வந்தார்கள். அஜாமிலனின் உயிரை யமதூதர் இழுத்துச்செல்ல முயலுவதை விஷ்ணு தூதர்கள் கண்டதும் அவர்களைத் தடுத்தார்கள்.

"அப்போது யமதூதர்கள், 'நாங்கள் யமதூதர்கள். யமதர்மராஜனின் கட்டளையைத் தடுக்கும் நீங்கள் யார்?' என்று கேட்டார்கள்.

"விஷ்ணு தூதர்கள், 'நீங்கள் யமதர்மராஜனின் தூதர்களானால் தர்மத்தின் தத்துவம், லட்சணம் இவைகளைச் சொல்லுங்கள். எந்த மாதிரி தண்டனையை நீங்கள் ஜீவனுக்குக் கொடுக்கிறீர்கள்? அதற்கு உரியவர் யார்? எந்த மாதிரி காரியங்களைச் செய்தவர்களைத் தண்டிக்கிறீர்கள்? சிலரைத்தான் தண்டிப்பீர்களா? எல்லோரையுமா?' என்றார்கள்.

"யமதூதர்கள், 'வேதத்தில் செய்யும்படி விதித்துள்ளது தர்மம் ஆகும். அதில் விலக்கியுள்ளது அதர்மம். பகவான் நாராயணனும் வேதமும் ஒன்றே. ஜீவன் செய்யும் அதர்மத்தைச் சூரியன், அக்கினி, ஆகாயம், காற்று இவை பார்த்துக்கொண்டிருக்கின்றன. இந்த அதர்மந்தான் தண்டனைக்குக் காரணம். அவரவர் செய்யும் வினைக்குத் தக்கபடி அவரவர்

பயனை அடைகிறார்கள். வாலிபனாக இருந்தபோது இந்த அஜாமிலன் நன்றாகப் படித்தவன்தான். முதலில் விரதங்களை ஒழுங்காகத்தான் கடைப்பிடித்து வந்தான். ஒரு நாள் இவன் தன் தந்தையின் கட்டளைப்படி காடு சென்று, பழம், பூ வகைகள், சமித்து, தர்ப்பை இவைகளைச் சேகரித்துத் திரும்பி வந்துகொண்டிருந்தான். வழியில் ஒருவன் தாசி ஒருத்தியோடு மெய்மறந்து இருப்பதைக் கண்டான். கள்ளைக் குடித்திருந்ததால் அவள் கண்கள் சிவந்திருந்தன. கண்கள் சுழல, இடுப்பில் ஆடை தளர்ந்திருப்பதைக்கூட உணராமல் அவள் பாடிக்கொண்டிருந்தாள். அப்போது அந்த ஆளும் பாடினான். அவள் சிரிக்கும்போது அவனும் சிரிப்பான். இதையெல்லாம் பார்த்தபோது வாலிபனான அஜாமிலன் மனத்திலும் காம உணர்ச்சி மூண்டது. அவன் அதை எவ்வளவோ அடக்கிப் பார்த்தான். ஆனால் முடியவில்லை. அந்தத் தாசியைப்பற்றியே எண்ணலானான். முடிவில் அவளோடு வாழ ஆரம்பித்தான். தான் மணந்த மனைவியைக்கூடக் கைவிட்டான். தீய வழியில் பணம் சேர்த்துக் குடும்பம் நடத்தினான். இதுவரை அதற்கெல்லாம் இவன் பிராயச்சித்தம் செய்துகொள்ளவில்லை. ஆகவே, தண்டித்தால்தான் இவன் தூய்மை அடைவான் என்று இவனை யமதர்மராஜனிடம் அழைத்துப் போகிறோம்' என்றார்கள்.

'இதற்கு விஷ்ணு தூதர்கள், 'ஆ! தர்மராஜனின் சபையில் கூடவா இந்த மாதிரி அதர்மம் தலை விரித்தாடுகிறது? சாகும் சமயம் இந்த அஜாமிலன் பகவானுடைய திருநாமத்தைச் சொல்லியிருக்கிறானே! இதுவே கோடி ஜன்மங்களில் செய்த பாவத்துக்கும் பிராயச்சித்தமாயிற்றே! திருடன், குடியன், நண்பனுக்குத் தீங்கிழைத்தவன், பிரம்மகத்தி செய்தவன், குருவின் மனைவியை விரும்பியவன், பெண்களையும் அரசனையும் தந்தையையும் பசுவையும் கொன்றவன், மற்றப் பாவிகள் யாரானாலும் சரி, பகவானின் திருநாமத்தைச் சொன்னால் அதுவே அவர்கள் பாவத்துக்கெல்லாம் பிராயச்சித்தமாகும். பிறர் பெயர் என்று கருதியோ, பரிகாசமாகவோ, வாய்தவறியோ பகவானின் பெயரை இப்படிச் சொன்னாலும் போதும்; ஒருவன் செய்த பாவம் எல்லாம் நீங்கிவிடும். சாகும் சமயத்திலாவது இவன் இப்படிச் சொல்லியிருக்கிறான். ஆகவே, இவன் தூய்மையாகிவிட்டான். இவன் உயிரை எடுத்துப் போகாதீர்கள்' என்றார்கள்.

''இதற்குமேல் பதில் சொல்ல வழி இராமல் யமதூதர்கள் அஜாமிலனைக் கட்டிய பாசக் கயிற்றை அவிழ்த்து அவனை விடுவித்து யமனிடம் திரும்பிச் சென்றார்கள். யமனிடம் அவர்கள் இதைத் தெரிவித்தபோது அவனும் கடவுளின் திருநாமத்தின் பெருமையை அவர்களுக்கு விளக்கி, 'இனிப் பக்தர்களிடம் நீங்கள் போகக் கூடாது' என்று தடை விதித்தான்.

''விடுபட்டதும் அஜாமிலன் விஷ்ணு தூதர்களைக் கண்டு மகிழ்ந்து அவர்களை வணங்கினான். பிறகு அவன் அவர்களைப் பார்த்து ஏதோ பேச விரும்பும்போது அவர்கள் மறைந்துவிட்டார்கள்.

''அஜாமிலன் இவர்கள் சம்பா

ஷணையிலிருந்து பாகவத தர்மத்தை நன்ருக அறிந்துகொண்டான். அவனுக்குக் கடவுளிடம் மிகுந்த பக்தி உண்டாயிற்று. தான் முன் செய்த இழி செயல்களை எண்ணி வருந்தினன். 'ஐயோ! இந்த வேசியின்மேல் மோகங் கொண்டு என் கிழத் தாய்தந்தையர்களைக் கைவிட்டேனே! நான் நிச்சயமாக நரகத்தில்தான் விழப் போகிறேன். என்னைப் பாசக் கயிற்ருல் கட்டிய யமதூதர் எங்கே? என்னை விடுவித்த மகாத்மாக்கள் எங்கே? எனக்கு நிச்சயமாக ஏதோ நல்ல அதிருஷ்டம் இருக்கவேண்டும். இல்லாவிட்டால் சாகும் சமயத்தில் கடவுளின் பெயரை எப்படி வாய்விட்டுச் சொல்ல முடியும்? இனி நான் என்ற உணர்வை விட்டுக் கடவுளையே தியானிப்பேன்' என்று தீர்மானித்தான்.

''பிறகு கங்காதுவாரம் என்ற ஹரித்துவாரத்தில் உலகப்பற்றை விட்டு ஒரே நிலையாகக் கடவுளின் நினைவாகவே இருந்து வந்தான். முன் வந்த விஷ்ணு தூதர்கள் அப்போது அவன் எதிரே தோன்றினர்கள். அஜாமிலன் அவர்களை வணங்கி, கங்கைக்கரையில் உயிர் நீத்தான். உடனே அவனும் விஷ்ணு தூதர்களைப் போல் ஆகிவிட்டான். வானத்திலிருந்து தனக்காக இறங்கி வந்த தங்க விமானத்தில் ஏறி வைகுண்டம் சேர்ந்தான்.''

எப்போதும் மகிழ்ச்சி

இருளடைந்த ஒரு சிறு கடையில் உட்கார்ந்து வேலை செய்கிருன் பென் என்ற தையல்காரன். கலியாணம் ஆகாதவன். ஸாண்ட் டீகோ கடற் கரையில் பகல் முழுவதும் மாலுமிகள் சராய்களையும் சட்டைகளையும் பழுது பார்த்துக் கொண்டே இருப்பதுதான் அவன் வேலை. அவன் வாழ்க்கை உப்பு சப்பற்றதாகவே பிறருக்குத் தோன்றுகிறது. ஆனல், அவனே எந்நேரமும் புன்சிரிப்போடு இருக்கிருன்.

சமீபத்தில் உள்ள ஒரு சிறு ஓட்டலில் போய்த்தான் அவன் சாப்பிடுவது வழக்கம். ஒரு நாள் ஓட்டல் முதலாளி ஆச்சரியத்துடன், ''பென், நீ எப்போதும் சந்தோஷமாயிருக்கிருயே! எப்படி? உலகத்திலே கஷ்டங்கள் மலிந்திருக்கின்றன. அந்தக் கஷ்டங்களைத்தான் நீ அநுபவித்திருக்கிருய். எதைப்பற்றியும் நீ கவலைப்படுவதே இல்லையா?'' என்று கேட்டார்.

பென் சிரித்துக்கொண்டே, தின்பண்டத்தில் ஸ்பூனைப் போட்டு அள்ளினன். ''இல்லை. இப்போது நான் இந்த விளையாட்டில் தேறி முன்னேறி விட்டேன். எழுபத்து மூன்று வருஷ காலம் சூரியோதய அஸ்தமனங்களைக் காணும் பாக்கியத்தைக் கடவுள் எனக்கு அளித்துவிட்டார். நாள் தவருமல் அந்த இரண்டுக்கும் இடையிலே மூன்று வேளை உண்டிகளையும் அவர் எனக்கு அளித்துவிட்டார். இனி என்ன நேர்ந்தால், எனக்கென்ன? ஒரு வித நஷ்டமும் இல்லை'' என்ருன்.

—ராஸ்கோ ஏ. போலண்ட்

க்விஸ்

[இதோ சில கேள்விகள்: எங்கே, உங்களுக்கு விடை தெரிகிறதா பாருங்கள். பிறகு 88-ஆம் பக்கத்து விடையுடன் ஒப்பிட்டுக்கொள்ளுங்கள்.]

1. ஒரு தேங்காய் எவ்வளவு காலம் அழுகாமல் இருக்கும்?

2. பெட்ரோலில் ஒருவன் நீந்த முடியுமா?

3. குதிரை படுத்தபடி தூங்குமா?

4. பிரிட்டிஷ் அங்குல நீளமும் அமெரிக்க அங்குல நீளமும் ஒரே அளவா?

5. நீங்கள் விழுங்கும் உணவு, இரைப்பை (ஸ்டமக்) போய்ச் சேர எவ்வளவு நேரம் பிடிக்கிறது?

6. சீனாவில் உள்ள பெருஞ்சுவர் (க்ரேட் வால்) எவ்வளவு நீளம்? அதை எதற்காகக் கட்டினார்கள்?

7. மூளையிலே வலி ஏற்பட்டால், அதை மூளை உணருமா?

8. அமெரிக்க ஜனாதிபதியின் மந்திரி சபை எப்படி அமைகிறது?

9. பிஸ்டல் பெரியதா? ரைஃபிள் பெரியதா?

10. மனித இருதயத்தில் எத்தனை அறைகள் இருக்கின்றன?

11. பைபிளில் பல நகரங்களின் பெயர்கள் 'பெத்' என்று தொடங்குகின்றனவே; ஏன் தெரியுமா?

12. வெர்ஸேல்ஸ் அரண்மனை பிரெஞ்சு நாட்டில் இருப்பது; உலகப் பிரசித்தி பெற்றது. அதில் உள்ள அறைகளின் எண்ணிக்கையை அறிவீர்களா?

13. உலகத்திலேயே மிகப் பெரிய பறவை எது?

14. தண்ணீர் ஊற்றினால் உடனே தீப் பற்றிக்கொள்ளும் ரசாயனப் பொருள் ஏதாவது உண்டா?

15. எவ்வளவு காலத்தில் ரேடியம் தன் மதிப்பை இழக்கிறது?

16. சகஜமாக வளர்ந்துள்ள ஒரு மனிதனின் உடலில் எவ்வளவு ரத்தம் இருக்கும்?

17. கருப்பையில் உள்ள சிசுவுக்கு முதல் முதலாகத் தோன்றி வேலை செய்யத் தொடங்கும் உறுப்பு எது?

18. சின்ன நாடகக் கொட்டகை ஒன்றில் 525 பேர் வந்துவிட்டார்கள். ஆனால், அங்கே இருந்த ஆசனங்கள் போதாததால், இவர்களில் உட்கார்ந்தவர் போக மற்றவர் நிற்கவேண்டியதாயிற்று. நின்றவரைப்போல் நாலு மடங்கு எண்ணிக்கை ஆசனங்களே அங்கே இருந்தன. உட்கார்ந்தவர் எத்தனை பேர்?

ஊர் சுற்றும் பாங்க்

★

நகர மக்கள் நினைத்தபோது தங்கள் பணத்தைப் பாங்குகளில் போடலாம்; வாபஸ் வாங்கலாம். கடன் முதலிய வேறு வசதிகளையும் பாங்குகளில் பெறலாம். இந்த மாதிரி சௌகரியங்கள் கிராமவாசிகளுக்கும் வேண்டாமா? அதற்காகப் பாடியாலா சம்ஸ்தானத்தில் நூதன பாங்க் ஒன்று கிராமங்களிலெல்லாம் சுற்றி லேவாதேவி நடத்தப் போகிறது. ஒரு மோட்டார் - காரே அந்தப் பாங்கின் காரியாலயம். அதுபற்றிய விவரம் இது.

'சக்கரம் போட்ட பாங்க்' ஒன்று கப்பலில் இந்தியாவுக்கு வரப்போகிறது. பிரபல பிரிட்டிஷ் கம்பெனி அதைச் சமீபத்தில் கப்பலில் ஏற்றி அனுப்பப்போகிறது. பாடியாலா கிராமங்களிலெல்லாம் அந்த 'பாங்க்' சுற்றிக்கொண்டே லேவாதேவி நடத்தும்.



இந்த 'மோட்டார் - கார் பாங்'கின் அடிச் சட்டம் (ஷாஸே) ஆறு டன் நிறையுள்ளது. 'கை ஆட்டர்' என்ற வகையைச் சேர்ந்தது. இதற்கு முற்றும் எஃகுச் சட்டங்கள் போட்டிருக்கிறார்கள். பக்கத்துப் 'பானல்'கள் ஏழு மில்லிமீட்டர் கனமுள்ள கவசத் தகடுகள். உச்சி (ரூஃப்), இயக்கும் கருவிகள் அமைந்த 'டாஷ் போர்டு' இரண்டும் 3 மில்லிமீட்டர் கனமுள்ள கவசத் தகடுகள். துப்பாக்கி ரவையால் துளைக்க முடியாத கண்ணாடிதான் விண்ட் - ஸ்க்ரீன். உட்புறமும் வெளிப்புறமும் பிடிகள் போட்ட கதவுகள். சாத்தியதும் இவை தாமே பூட்டிக்கொள்ளும்.

டிரைவர் ஸீட் சௌகரியப்படி மாற்றிக்கொள்ளக்கூடியது. ஒரு பிரயாணி அமரக்கூடிய ஸீட் ஒன்றும் உண்டு. டாஷ் போர்டில் இரண்டும் உச்சியில் ஒன்றுமாக, காற்று வரும் 'வெண்டிலேட்டர்'கள் இருக்கின்றன.

மூலம்: ஸ்போர்ட் அண்டு பாஸ்டைம் (ஆங்கிலம்: 9-1-'54), சென்னை.

துப்பாக்கி ரவையால் துளைக்க முடியாத கதவு போட்ட ஜன்னல்கள் இரண்டு பக்கங்களிலும் பக்கத்துக்கு இரண்டு இருக்கின்றன. அவை ஆறு அங்குலக் குறுக்களவுள்ள துவாரங்கள்.

அடித்தளம் தேக்க மரப் பலகைகள் போட்டு மூடிய எஃகு. உள்ளே மெத்தென்று 'லினோலியம்' போட்டிருக்கிறார்கள். டிரைவர் இருக்கும் பகுதிக்கும் உள்புறத்துக்கும் இடையே எஃகுத் தகட்டால் சுவர் போட்டிருக்கிறார்கள். அதில் டிரைவரும் உள்ளே இருப்பவர்களும் பேசிக்கொள்ள வசதியாகச் சிறு கதவு ஒன்று அமைத்திருக்கிறார்கள்.

பின் பக்கத்தில் கதவு இருக்கிறது. ஒரே ஒரு கதவுதான். துப்பாக்கி ரவையால் துளைக்க முடியாத கண்ணாடி போட்ட ஜன்னல் ஒன்று அந்தக் கதவில் உண்டு. பண வரவு செலவு நடத்தும் 'கவுண்டர்'கள், சுழலும் பீடங்கள், ஷெல்ஃப், டெஸ்க் முதலியவை அமைத்திருக்கிறார்கள். தீயால் எரிக்க முடியாத பெட்டி (ஸேஃப்) ஒன்று இருக்கிறது. தூங்குவதற்கு ரப்பர் விரிப்புப் போட்ட படுக்கை ஒன்றும் அமைத்திருக்கிறார்கள். ஒவ்வொரு கவுண்டருக்கும் ஒவ்வொரு டெஸ்குக்கும் தனித் தனி மின்சார விளக்குகள் உண்டு.

வெளியே கூடும் ஜனங்களுக்குப் பிரசங்கம் செய்வதற்காக மைக்ரஃபோன், லவுட் - ஸ்பீக்கர், பிக் - அப், கிராமஃபோன் முதலிய எல்லாம் அமைத்திருக்கிறார்கள்.

மஞ்சள், பழுப்பு, கறுப்பு மூன்று நிறங்களாலும் வண்டிக்குப் பெயிண்ட் அடித்திருக்கிறார்கள். வண்டியின் நிறை சுமார் ஆறு டன்.

ஸினிமா நடிகர் உணர்ச்சி

சகல ஸினிமா நடிகர், நடிகைகளுக்கும் உள்ள ஓர் உணர்ச்சியை ரொனல்ட் ரீகன் என்பவர் வெளியிட்டிருக்கிறார். அமெரிக்காவில் உள்ள ஸ்க்ரீன் ஆக்டர்ஸ் கில்டு என்ற சங்கத்தின் தலைவர் அவர். ரீகன் சொல்வது இது: ''எங்களை ஒருவன் அநியாயமாய் அறைந்தாலுங்கூட நாங்கள் திருப்பி அறைய முடியாது. நாங்கள் வெளியிலே புறப்பட்டால் போதும்; எல்லாரும் எங்களை வேடிக்கை பார்க்க வந்துவிடுவார்கள். ஓர் ஓட்டல் சிப்பந்தி சூப்பைக் கொண்டுவந்து எங்கள் கழுத்திலே கொட்டினாலும், நாங்கள் புன்சிரிப்போடு 'பரவாயில்லை' என்றுதான் சொல்ல வேண்டும். அப்படியின்றிக் கோபித்துக்கொண்டால், 'இந்தச் சிடுமூஞ்சியைப் பார். ஒரே கலாட்டாச் செய்கிறானே' என்று பக்கத்தில் இருப்பவர்கள் சொல்லுவார்கள். நடிகரையும் நடிகைகளையும் கண்டாலே சில பேருக்குப் பிடிக்காது. முகத்தில் அடித்தாற்போல் அவர்கள் எங்களைப் பழிப்பார்கள். நாங்கள் பல்லை இளித்து அதைப் பொறுத்துக்கொள்ள வேண்டும்.''

—எல். எஸ்., 'யுவர் லைஃப்.'

கூரை ஓடு

★

மங்களூர் மோஸ்தரில் ஓடு செய்வதற்குக் கிழக்குக் கடற்கரையில் முதல் முதலாக அமைந்த தொழிற் சாலைகளில ஒன்று, திருமங்கலம் கிராமத்தில் உள்ள 'ஸ்ரீ கிருஷ்ண டைல்ஸ் அண்டு பாட்டரீஸ் (சென்னை) லிமிடெட்' என்பது. அதற்கு மானேஜிங் ஏஜெண்டு கள் ஏ. கே. ரங்கநாதம் அண்டு ஸனஸ் லிமிடெட், மயிலாப்பூர். இந்தத் தொழிற்சாலையை, சென்ற டிசம் பர் மாதம் கடைசி வாரத்தில் சென்னைப் போது மரா மத்து இலாகா பிரதம எஞ்சினீரும் மற்றும் சில எஞ்சினீர்களும் சென்று பார்வையிட்டார்கள். இந்தத் தொழிற்சாலையில் இப்போது கூரை ஓடுகளைத் தவிர, அலங்கார வேலைப்பாடுள்ள ஸீலிங் ஓடுகள், ரிட்ஜ் ஓடுகள், கூரை ஜாயிண்டுகள், தள வரிசை ஓடுகள் முதலிய பல ரகங்களையும் தயாரிக்கிறார்கள். கூரை ஓடு செய்ய அநுஷ்டிக்கும் நவீன முறைகளை, இந்தத் தொழிற்சாலையினரின் சிறு பிரசுரம் ஒன்றி லிருந்து இங்கே சுருக்கித் தந்திருக்கிறோம்.

பிசுக்குக் களிமண், மஞ்சள் களிமண், வெள்ளைக் களி மண், மணல் களிமண் இந்த நான்கையும் ஓடு செய்ய உபயோ கிக்கிறார்கள்.

முதலில் சில இடங்களில் குழி பறித்து, பிசுக்குக் களிமண் (ப்ளாஸ்டிக் க்ளே) எடுத்துக் குவியல் குவியலாய் வெளியே போட்டு, வெயிலில் காய்ந்து மழை யில் நனையும்படி சில காலம் அப்படியே வைத்திருக்கிறார்கள். இதைப் போன்ற பல பரீட்சைகள் நடத்திப் பார்த்து, நல்ல பிசுக்குக் களிமண்ணைக் கண்டுபிடிக்கிறார் கள். பிறகு அதனுடன் மஞ்சள் களிமண்ணைக் கணக்காகக் கலக் கிறார்கள். இப்படிக் கலந்த களி மண்ணுக்குத் தண்ணீர் பாய்ச்சி, பதினைந்து நாள் வரைக்கும் ஊற விடுகிறார்கள். கையில் எடுத்துப் பந்துபோல் உருட்டினால் கையில் ஒட்டாத அளவுக்கு மண் இப்படி ஊறவேண்டும்.

பிறகு, இந்த மண்ணை மிக வேக மான இரண்டு உருளையைக் கொண்டு அரைக்கிறார்கள். இப்படி மிக நேர்த்தியாக அரைத்த மண்ணை நன்றாகக் கலப்பதற்கு ஒரு யந்தி ரம் இருக்கிறது. அதில் போட் டால், அதில் உள்ள பெரிய இரும் புக் கத்திகள் மண்ணை நன்றாகக் கடைந்து கலந்துவிடுகின்றன. இப்போது மண் கெட்டிப்பட்

டிருக்கும். இதைப் பல உலக்கைகளைக் கொண்டு இடிப்பார்கள். இதனால் மண்ணிலே காற்றுப் புகத் துளி இண்டு இடுக்கு இல்லாமல் அது கட்டிப்படும்.

இந்த மண்ணைப் 'பக்மில்' என்ற ஒரு யந்திரத்தில் கொடுத்தால், அது ஒரே அளவான கட்டிகளாகத் தயாரித்துத் தள்ளும். கட்டிகளை 'எக்ஸ்ப்ரஷன் ரோலர்' என்ற மற்றொரு யந்திரத்தில் கொடுத்து, ஒவ்வொன்றையும் நாலாக வெட்டுகிறார்கள். அப்போது இந்தக் கட்டித் தண்டுகளுக்கு நல்ல மெருகு ஏறிவிடும். அப்புறம் இவைகளை 'மெக்கானிக்கல் பவர் ப்ரஸ்' என்ற யந்திர அச்சில் போட்டு அழுத்துகிறார்கள். அச்சில் மண் சிறிதும் சிக்காதிருப்பதற்காக, மண்ணெண்ணெய், தேங்காய் எண்ணெய் இரண்டையும் அச்சில் பூசிக்கொண்டேயிருக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இந்த விதமாகத் தயாராகும் ஓடுகளை மரத் தட்டுக்களில் ஏந்தி, பிசிர்களைப் போக்கிச் சுத்தம் செய்கிறார்கள்.

சுத்தம் செய்த ஓடுகளை மரச் சட்டங்களில் பரப்பி உலர விடுகிறார்கள். அதிகமாய்க் காற்றடிக்காத இடத்தில் வைத்தே இவ்விதம் உலர விடுகிறார்கள். கையில் எடுத்தால் சிதையாத அளவுக்கு அவை உலரவேண்டும். ஏற்கனவே 18 அங்குல நீளமிருந்த ஓடு, உலர்ந்த பின் 17 அங்குல நீளமே இருக்கும்.

பதினைந்து அல்லது இருபது நாட்களுக்குப் பின்பு, அவைகளைச் சூளையில் அடுக்குகிறார்கள். உட்புறம் எங்கும் ஒரே விதமான சூடு பரவியிருக்கும்படி சூளையை அமைத்திருக்கிறார்கள். சூளைக்கு வேண்டிய அளவு காற்று வீசுவதற்குத் தேவையான மின்சார விசிறி அமைத்திருக்கிறார்கள். சூளை எதுவரையில் எரிந்துகொண்டிருக்கிறதோ அதுவரையில் சற்றுக்கூட நிற்காமல் அந்த விசிறி சுழன்றுகொண்டிருக்கும்.

சூளையில் இருந்து எடுத்த ஒவ்வோர் ஓட்டையும் தனித்தனியே பரீட்சித்துச் சரி பார்த்து, தரம் பிரித்து, வகைப்படுத்துகிறார்கள்.

இப்படித் தயாரிக்கும் கூரை ஓடுகள் 224 பவுண்டு நிறை மோதுவதைத் தாங்கிச் சிதையாமல் இருந்தால் போதும் என்கிறார்கள். சென்னை ஸ்ரீ கிருஷ்ண டைல்ஸ் அண்டு பட்டரீஸ்காரர்கள் தயாரிக்கும் ஓடுகளோ 300 பவுண்டு நிறையை இப்படித் தாங்குகின்றனவாம். தண்ணீரில் அவை வெகு நேரம் கிடந்தாலும், அதிகமாக உறிஞ்சிப் பலவீனம் அடைவதில்லையாம். கடுமையான மழை அடித்தாலும் அவற்றில் பாசி பிடிக்காமலும், கண்ணுக்கினிய ரங்கு மங்காமலும் இருக்குமாம்.

உழைப்பு

ஒரு மாத காலம் அழுது புலம்புவதைவிட, அரை மணி நேரம் உழைப்பிலே ஈடுபட்டால் போதும்: அதிக மன மகிழ்ச்சி ஏற்படும்; துர் எண்ணங்கள் ஒழியும்; தொல்லைகள் தீரும்.

—பெஞ்சமின் ஃப்ராங்க்ளின்.

இங்கே மதுவிலக்கை ஒழிக்கப் பலர் முயல்கிறார்கள். அங்கேயோ—

பிரான்ஸில் மிதமிஞ்சிய குடி

★

பொதுவாகப் பிரெஞ்சுக்காரருக்குச் சாப்பாட்டின்போது சாராயம் குடிப்பதென்றால் ரொம்ப இஷ்டம். ஆனால் இப்போதெல்லாம் சாப்பாட்டுக்கு முந்தி, பிந்தி எந்த வேளையும் அவர்கள் இப்படிக் குடிப்பது சர்வ சகஜமாகி விட்டது. இந்தோ-சீனா, ஆயுத விஸ்தரிப்பு இவற்றோடு இந்தக் குடித் தொல்லையும் பிரான்ஸில் பெரும் பிரச்னையாகிவிட்டது.

சென்ற ஆண்டு பிரான்ஸில் 600 கோடி சாராயப் புட்டிகள் செலவாயின. அதாவது, அண்டையிலுள்ள இத்தாலியரை விடப் பிரெஞ்சுக்காரர் 5 மடங்கு அதிகமாகக் குடித்திருக்கிறார்கள்! இன்னும் விரிவாகச் சொன்னால், அங்கே தலைக்கு ஆண்டு ஒன்றுக்கு 106 புட்டி விஸ்கி குடிக்கிறார்கள் என்று தெரிகிறது. (இத்தாலியில் தலைக்கு இதில் பாதி அளவும், ஐக்கிய அமெரிக்காவில் இதில் கால் பாகமும், பிரிட்டனில் இதில் ஆறில் ஒரு பாகமும் குடிக்கிறார்கள்.)

பிரான்ஸில் குழந்தைகள் நடக்கத் தெரிவதற்கு முன்பே குடிக்கக் கற்றுக்கொண்டு விடுகின்றன. ருசி கண்டுவிட்டால் அப்புறம் கேட்பானேன்? குடியின் அளவும் பெருகி விடுகிறது. ஆனாலும் வெளிப்படையாக அப்படிக் குடித்துவிட்டுத் திரிகிறவர்களைக் காணுவது அபூர்வந்தான். நன்றாகக் குடிக்கிறவன் முகம் சற்றுத் தெம்பாகக் காட்சி அளிக்கும்; அவ்வளவுதான். இருந்தாலும் மொத்த ஐரோப்பாவையும் எடுத்துக் கொண்டால் பிரான்ஸில் தான் ஈரல் கோளாறு அதிகம்.

வீட்டிலேயே சாராயம் காய்ச்சுவதைப் பிரான்ஸில் சட்டப்படி அநுமதித்திருக்கிறார்கள். இப்படி 32,50,000 பேர் திராட்சை, ஆப்பிள், ப்ரூன், பியர், சர்க்கரை எடுக்கும் பீட் கிழங்கு முதலிய பொருள்களிலிருந்து சாராயம் இறக்கி வருகிறார்கள். இப்படி இந்தத் தொழிலில் ஈடுபடாதவர்களுக்கும் கவலை இல்லை; அங்கே சராசரி 90 பேருக்கு ஒரு சாராயக்கடை விகிதம் எங்கும் கடைகள் இருக்கின்றன என்றால் கேட்பானேன்! ஜெர்மனியில் சராசரி 246 பேருக்கும் இங்கிலாந்தில் 430 பேருக்கும் நார்வேயில் 3,000 பேருக்கும் இப்படி ஒரு சாராயக் கடை விகிதம் இருப்பதாகக் கணக்கிட்டிருக்கிறார்கள். ஆகவே, பிரான்ஸில் 1000 பேருக்கு 22 பேர் விகிதம் குடியர்கள் என்று சொல்லலாம். பாரிஸில் அநேகம் சிறுவர்கள் களவு முதலிய குற்றம் புரிவதற்குக் காரணம் அவர்களின் பெற்றோர் குடியர்களாக இருப்பதே.

பிரெஞ்சுக்காரர் குடி வகையில் ஆண்டு ஒன்றுக்குச் சராசரி 71,50,00 000 பவுன் செலவழிக்

காப்பிரைட்: யு. எஸ். ந்யூஸ் அண்டு வொர்ல்ட் ரிபோர்ட் (ஆங்கிலம்).

கிறார்கள்; அதாவது, குடும்பச் செலவில் 10 சத விகிதம் சாராயத்துக்கே ஆகிவிடுகிறது. (அமெரிக்காவில் 4 சத விகிதம் இப்படிச் செலவாகிறது.) இருந்தாலும் குடி வகையறா மொத்த விற்பனையில் 12 சத விகிதந்தான் வரியாக வசூலாகிறது. (ஐக்கிய அமெரிக்காவிலோ 32 சத விகிதமும் பிரிட்டனில் 58 சத விகிதமும் கிடைக்கின்றன.) பிரெஞ்சு சர்க்கார் குடி வகையறா வரி மூலம் கிடைக்கும்வரும்படியைவிடக் குடிகாரர்களுக்கும் அவர்கள் குடும்பத்தாருக்கும் வைத்திய வசதிக்காகப் பின்னும் இரண்டு மடங்கு அதிகமாகவே செலவிடுகிறார்கள்.

இது தவிர, சாராய உற்பத்தியாளருக்குச் சர்க்கார் ஆண்டுதோறும் 1,80,00,000 பவுன் மானியமாக அளித்து வருகிறார்கள். சென்ற ஆண்டு இந்தத் தொகையை அளிக்கவில்லை. அதை வீடு கட்டிக் கொடுப்பதற்காகச் செலவழிக்க உத்தேசித்திருக்கிறார்கள்; வீட்டு வசதி சரியாக இராததே குடிப்பழக்கம் அங்கே அதிகரித்திருப்பதற்குக் காரணம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

இந்த வசதி இராததால்தான் பொதுவாகப் பிரெஞ்சுக்காரர்கள் வேலையிலிருந்து திரும்பியதும் வீடு செல்லாமல் ஹோட்டல்களிலேயே சோம்பிக் கிடக்கிறார்கள்.

பிரான்ஸில் 20 லட்சம் பேர் சாராயம் சம்பந்தமான அலுவல்களில் ஈடுபட்டிருக்கிறார்கள். இவர்களிடம் சுமுகமாகப் பழகும் அரசியல்வாதிகள் பாடு வேட்டைதான்; ஏராளமான வோட்டு அவர்களுக்குக் கிடைத்துவிடும். 1953 - இல் இரண்டு தடவை பிரெஞ்சு மந்திரி சபை மாறியதற்குக் காரணம் குடிவகையறா சம்பந்தமான சில திருத்தம் கொண்டு வர முயன்றதுதான்.

சாராயந்தான் பிரான்ஸின் செல்வ வளத்துக்குக் காரணம் என்பது சுத்தப்பொய். இது சமீபத்தில் நடந்த ஆராய்ச்சியிலிருந்து தெரிந்துவிட்டது. பிரான்ஸிலிருந்து வெளிநாட்டுக்கு ஏற்றுமதியாகும் மொத்தப் பொருள்களில் சாராயப் புட்டி ஏற்றுமதி 6 சத விகிதந்தான். சர்க்கார் கிடங்குகளிலேயே 100 கோடி சாராயப் புட்டிகளுக்குமேல் விலை போகாமல் தேங்கிக் கிடக்கின்றன. இது போதாதென்று இன்னும் சாராயம் உற்பத்தியாகி வருகிறது. அதே சமயம் உணவுப் பொருளை வெளிநாட்டிலிருந்து ஏராளமாகத் தருவிக்க வேண்டியிருக்கிறது.

இதையெல்லாம் கண்டு பிரெஞ்சுச் சர்க்கார் குடி வகையறாமீது அதிக வரி விதிக்க வேண்டுமென்று முனைந்திருக்கிறார்கள். சென்ற வருஷம் ஜூலை மாதம் பிரெஞ்சுப் பிரதமராக இருந்த லேனியல்தான் இப்படிச் செய்தார்; மதுபான உற்பத்திக்கு அவசியமான திராட்சைத் தோட்டக்காரர்களுக்கு மானியம் அளிப்பதையும் அப்போதுதான் நிறுத்தினார்; இப்படிக் கிடைத்த வருமானத்தைப் பால் பண்ணைத் தொழில் அபிவிருத்திக்காக உபயோகிக்க விரும்பினார். பிரெஞ்சுச் சர்க்கார் இப்போதுதானே இந்த விஷயத்தில் கவனம் செலுத்தி வருகிறார்கள்? எனவே, வழக்கம்போல் இந்த வருஷமும் 100-க்கு 25 சாவு குடியினால்தான் நேர்ந்திருக்கும் என்று சொல்லிவிடலாம்.

பல்வலி போக்கும் பச்சிலை

குமாரி சுநந்தா காமத்

பல் நோய் என்றால் உடனே பல்லைப் பிடுங்குவது நவீன நாகரிகமாயிருக்கிறது. நம்மிடம் இருக்கும் இந்த அருமையான பச்சிலையை உபயோகிக்கக் கூடாதா? இந்த விஷயத்தை விளக்கும் கட்டுரையாளர் சர்க்காரின் தாவர சாஸ்திர ஆராய்ச்சி உதவியாளர்.

இந்திய மக்களில் முக்கால் வாசிப் பேருக்கு ஏதாவது ஒரு வயதில், பல் அசைவு, பல்வலி, எயிறு பாகத்தில் ரத்தம் வடிவது போன்ற பல நோய்கள் வருவது சகஜம். இளம் வயதினர் சிலருக்குங்கூடப் பல்வலி வருவது உண்டு. முக்கியமாய் வயதானவர்களுக்கு வருவது அதிகம். பல்வலி வந்தவுடன் அந்தப் பல்லைப் பிடுங்கி விடுவதுதான் இந்தக் காலத்தில் வழக்கமாகிவிட்டது. சிறுவயதில் பல்லைப் பிடுங்கிவிடுவதால் ஏற்படும் கெடுதிகளை நாம் சிந்தித்துப் பார்ப்பதில்லை. நரம்புக் கோளாறு, கண் பார்வைக் குறைவு போன்ற கேடுகள் பல்லைப் பிடுங்குவதால் ஏற்படுகின்றன. சில சமயம் மூளைக்கும் கெடுதி நேரிடலாம். பொதுவாய்ப் பல்வலி, பல் அசைவு முதலியவை வருவதற்குக் காரணம், சிறு வயதில் பல்லைச் சரியாகத் தேய்த்துச் சுத்தமாக வைத்துக் கொள்ளாதிருப்பதே.

மூக்குத்திச் செடி

நம்மவர்கள் பெரும்பாலும் கருவேலங்குச்சியையும், வேப்பங்குச்சியையும் பல் துலக்க உபயோகிக்கிறார்கள். 'வேலுக்குப் பல் உறுதி; வேம்புக்குப் பல் ஒளி' என்பார்கள். தவிர அவற்றுக்குள்ள மருந்துக் குணத்தையும் எல்லாரும் உணர்ந்திருக்கிறார்கள். ஆனால், எயிறு கெட்டியில்லாதவர்கள் இந்தக் குச்சிகளை உபயோகித்தால் எயிற்றில் ரத்தம் வரும். எல்லாரும் உபயோகிக்கத் தக்க மூலிகை மூக்குத்திச் செடி. இந்தச் செடியை உபயோகித்தால் பல்வலி தீரும். இதன் தாயகம் இந்தியாவே; என்றாலும் மலேயா, சீனா போன்ற வெளிநாடுகளிலும் இது பல்வலிக்கு ஏற்ற மருந்து என்ற விஷயம் பரவியிருக்கிறது. இப்படி ஒரு நல்ல பச்சிலை நம் கைவசம் இருக்க, பல்வலிக்கு ஏன் பல்

மூலம்; மேழிச் செல்வம் (தமிழ்: நவம்பர்-டிசம்பர்'53), சென்னை.

டாக்டரிடம் செல்ல வேண்டும்?

இந்த மூலிகையை உபயோகிப்பது மிகவும் சுலபம். இந்தச் செடியிலேயே பூக்கள்தான் பெரிதும் காரமானவை. அவற்றை வாயில் விட்டு அதக்கினல், நிறைய உமிழ் நீர் ஊறும். பல் வலியும் அதோடு உடனே தணியும். இந்தச் செடி பல்வலிக்கேற்ற பச்சிலே என்பது மட்டும் அல்ல; தலைவலி, நாக்குப் பாரிசம், தொண்டை நோய் முதலியவற்றையும் கண்டிக்கும். இதன் வேரைக் கஷாயமிட்டுக் குடித்தால் நல்ல பேதியாகும். வயிற்றுக் கடுப்புக்கு இந்தச் செடியை வேரோடு நீரில் கொதிக்கவைத்து அப்படியே குடிக்கலாம். இந்த மூலிகைச் செடியை எப்படித் தெரிந்துகொள்ளுவது என்ற சந்தேகம் வேண்டாம். படத்தில் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம். எதற்கும் ஒன்று கிடக்க ஒன்றை மாற்றி உபயோகித்துப் பிறகு அவதிப்படாமலிருக்க, கோயமுத்தூர் விவசாயக் கல்லூரியின் தாவர ஆசிரியர் அவர்களுக்குப் பச்சிலேயை அனுப்பி நிச்சயப்படுத்திக் கொண்டு பின்பு உபயோகிப்பது நல்லது.

மூக்குத்திச் செடி இந்தியா எங்கும் தென்படும் ஒரு வருஷப் பூண்டு; சென்னை ராஜ்யத்தில் சமவெளிப் பகுதிகளில் எங்கும் முளைத்திருப்பது. சாதாரணமாய் ஒன்றிரண்டடி உயரம் நேராய் வளர்ந்திருக்கும். சில சமயம் தரையில் படிந்து வளருவதும் உண்டு. அப்போது இதன் கணுக்களில் வேர் இருக்கும். இந்த மூலிகையின் தண்டு, சிவப்புக் கலந்த நிறமாய், லேசாகச் சுணை படர்ந்ததாய் இருக்கும். ஒன்றிரண்டு அங்குல நீளத்தில் முட்டைவடிவ இலைகள் இரண்டு எதிர் எதிராக இணைந்திருக்கும். நீளப் பூங்கொத்தில் மஞ்சள் நிற மலர்கள் நெருக்கமாய்ப் பிடித்திருக்கும்.

விளம்பர நிபுணர்

ரால்ஃப் பால் என்ற பிரபலஸ்தரும் ஒரு ஸினிமா நடிகரும் ஒரு நாள் சந்தித்துப் பேசிக்கொண்டிருந்தார்கள். நடிகர்களைப்பற்றிப் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்துவதற்காக உள்ள விளம்பர ஏஜெண்டுகளைப்பற்றிப் பேச்சு வந்தது.

“என் விளம்பர ஏஜெண்டு, உலகிலேயே பெரிய பொய்யர் என்று இப்போதுதான் நான் கண்டுபிடித்தேன்” என்ருர் நடிகர்.

“அப்படியானல் உடனே அவரை விலக்கிவிடுவதுதானே?” என்று கேட்டார் ரால்ஃப்.

“விலக்குவதா? என்ன முட்டாள்தனமான யோசனை சொல்லுகிறீர்கள்! அவருடைய சம்பளத்தை நான் உயர்த்தப் போகிறேன்” என்ருர் நடிகர்.

—‘மகஸின் டைஜெஸ்ட்’

எறும்பின் திறமை

★

எறும்பில்லாத ஊருமில்லை; காடும் இல்லை. அது தோன்றியே 5-கோடி வருஷமாகிறது. அது வாழும் முறைபற்றிய இது, 'ஸயின்ஸ் டைஜெஸ்ட்'டில் பெர்னார்டு ரோஸென்பெர்க் என்பவர் எழுதிய ஒரு கட்டுரையை ஆதாரமாகக் கொண்டது.

ஒரு கிழவனாருக்கு எறும்புகளிடம் மிகுந்த பிரியம். தம் படுக்கையறை ஜன்னலில் தினந்தோறும் கொஞ்சம் சர்க்கரையைத் தூவி எறும்புகளுக்கு விருந்தளிப்பது அவர் வழக்கம். ஒரு நாள் இதில் ஒரு பரீட்சை செய்ய அவருக்கு ஆசை உண்டாயிற்று. குழந்தையின் விளையாட்டு வாளி ஒன்றை எடுத்தார். அதில் சர்க்கரையைப் போட்டார். வாளிப் பிடிக் கம்பியில் ஒரு கயிற்றைக் கட்டினார். ஜன்னலின் குறுக்குச் சட்டத்தில் அதைக் கட்டித் தொங்கவிட்டார். எறும்புகள் வந்தன. ஜன்னலில் ஊர்ந்தன. குறுக்குச் சட்டத்தில் ஏறின. கயிற்றை அடைந்து அதன் வழியாக வாளிக்குள் இறங்கின. சிறிது நேரம் வாளியில் ஒரே கும்பலாக இருந்தது. பிறகு பல எறும்புகள் மறுபடியும் கயிற்றின் வழியாக வெளியேறி, ஜன்னலுக்கு வந்து, கீழே இறங்கி, வாளிக்கு நேர் கீழே போய் நின்று கொண்டன. வாளியில் பின் தங்கியிருந்த எறும்புகள், சர்க்கரைத் துணுக்குகளைக் கௌவிக் கௌவிக் கொண்டு வந்தன; கீழே காத்திருக்கும் தங்கள் பந்துமித்திரர்களுக்குப் போட்டன.

ஐந்து கோடி வருஷங்களாக ஐயாயிரம் வகை எறும்புகள் இந்தப் பூலோகத்திலே மறைந்தொழியாமல் வாழ்ந்து வருவதன் காரணம் இப்போது உங்களுக்கு விளங்குகிறதா? ஜீவராசிகளுக்குள் மிகக் கடுமையான போட்டா போட்டியும் வாழ்க்கைப் போராட்டமும் நிறைந்தது இந்த உலகம். மிதவும் தந்திரமும் சம்யோசித சாமர்த்தியமும் உள்ள ஜீவராசிகள்தான் நெடுங்காலம் வாழையடி வாழையாய் வாழமுடியும். அப்படிப்பட்ட ஒரு வகையைச் சேர்ந்தவை எறும்புகள். அவைகளின் சாமர்த்தியம் மனிதனுக்குக்கூட வராது.

ஒரு நண்பர் வீட்டுக் கொல்லையில் பழமையான மரம் ஒன்று இருந்தது. அதில் எப்போது பார்த்தாலும் எறும்புகள் சாரி சாரியாக ஏறிக்கொண்டும் இறங்கிக்கொண்டும் இருக்கும். தம்முடைய மரத்தில் இந்த எறும்புகளுக்கு எந்த விதமான சொத்துரிமையும் கிடையாது என்று நினைத்தார் நண்பர். ஒரு வாளியில் நிலக்கரித் தாரை

எடுத்தார். மரத்தின் அடியிலே சுற்றிலும் பட்டையாகப் பூசிவிட்டார். முதலில் வந்த சில எறும்புகள் தாரைக் கடக்க முயன்ற போது, அதன் பிசுக்கில் சிக்கிக் கொண்டன. பின்னல் வந்த எறும்புகள் இதைப் பார்த்தன. கீழே போய் மண் துகள்களைக் கொண்டு வந்து கொண்டு வந்து இந்தத் தாரில் போட்டு ஒரு சிறிய பாதையைச் செப்பனிட்டன. அந்தப் பாதை வழியாக எல்லா எறும்புகளும் போக்கு வரத்து நடத்தத் தொடங்கி விட்டன.

எறும்புகளின் உடம்பு மூன்று பகுதிகளாக இருக்கிறது: தலை, மார்பு (தொராக்ஸ்), வயிறு (அப்டோமென்) இப்படி மூன்று பகுதிகள். தலையிலே முக்கியமான புலன்களும் மூளையும் இருக்கின்றன. எறும்பின் உருவத்துடன் ஒப்பிடும்போது, அதன் மூளை மிகவும் பெரிய அளவு இருக்கிறது. எறும்பின் வயிற்றில் இரைப்பை (ஸ்டமக்), குடல்கள் (இன்டஸ்டைன்ஸ்), ஜனனேந்திரியங்கள் (ரீப்ரொடக்டிவ் ஆர்கன்ஸ்) இவையெல்லாம் இருக்கின்றன. மார்பில் ஆறு கால்கள் இருக்கின்றன. சிறகு உண்டானல் அதுவும் மார்பிலே தான் இருக்கிறது. நம் கண்ணுக்குத் தெரியாத அவ்வளவு சிறிய சிற்றெறும்பிலிருந்து, ஓரங்குலத்துக்குமேல் பெரிய பேரெறும்புகள் வரையில் பல அளவு எறும்புகள் உண்டு. அநேகமாக எல்லா எறும்புகளும் குருடுதான். ஆயினும் மகா சாமர்த்தியமாக அவை தங்கள் காரியங்களைப் பார்த்துக்கொள்ளுகின்றன.

'ஆபிட்ஸ்' என்ற ஒரு வகைச் செடிப்பூச்சி உண்டு. அங்குலத்தில் இருபதில் ஒரு பகுதி இதன் நீளம்; அங்குலத்தில் இருபத்தைந்தில் ஒரு பகுதி இதன் அகலம். இந்தப் பூச்சி தன் கூரிய சிறு அலகைச் செடித் தண்டில் பாய்ச்சி உறிஞ்சுகிறது. இதனல் செடியின் சாறு இந்தப் பூச்சியின் உடலில் வந்து நிரம்புகிறது. சிலவகை எறும்புகளுக்கு உணவாக இந்தச் சாறு வேண்டியிருக்கிறது. நாம் பால் கறப்பதற்காகப் பசு மாடுகளை வளர்க்கிருேமே; அதேபோல அந்த எறும்புகளும் இந்தச் செடிப் பூச்சிகளை மந்தை மந்தையாக வளர்த்து, இவைகளிடம் 'பால்' கறந்துகொள்ளுகின்றன. சில எறும்புகள் தங்கள் 'பசு' மந்தைகளுக்கு வேலிகூடப் போட்டு அடைத்து விடுகின்றன. மற்றும் சில எறும்புகள் தங்கள் 'பசு'க்களான செடிப் பூச்சிகளின் சிறகைப் பிய்த்துவிடுகின்றன. அவை ஓடிப்போகாமல் இருக்க வேண்டுமாம்; அதற்காகவே இந்த யுக்தி!

விவசாய எறும்புகள் சில இருக்கின்றன. அவைகளில் ஒரு வகையைச் சேர்ந்தவை, தங்கள் பாழிகளைச் சுற்றிலும் வட்டமாகச் சிறிது தூரம் களைகளையெல்லாம் பிடுங்கிச் சுத்தமாக வைக்கின்றன. அங்கே எறும்பரிசி (ஆண்ட் ரைஸ்) என்ற ஒரு வகைப் புல்லை மட்டுமே வளரவிடுகின்றன. இந்தப் புல்லரிசி அவைகளுக்கு மிகவும் பிரியமான உணவு. இன்னொரு வகை எறும்புகள் தங்கள் பாழிகளுக்குள்ளே பெரிய தோட்டம் போட்டுவிடுகின்றன. பிரான்ஸில் ஒரு வகை எறும்புகள் இருக்கின்றன. அவைகள் பல விதமான தானியங்களையும் அறுவடை செய்து, வகை பிரித்து, வெவ்வேறு 'களஞ்சிய'ங்

களில் நிறைத்து, தேவைப்பட்ட போது உணவாக உபயோகித்துக் கொள்ளுகின்றன.

சிறகு முளைத்த எறும்புகள் வருஷத்துக்கு ஒரு முறை சில மணி நேரம் ஆகாயத்தில் பறந்து, நாட்டியமாடி, காதல் சல்லாபம் செய்கின்றன. அப்போது கருவுற்ற பெண் எறும்புகள் தரையில் இறங்கி, தங்கள் சிறகுகளை முறுக்கி வளைத்துக் கடித்துப் பிய்த்துவிட்டு, அதிக ஆழமில்லாத குழி தோண்டி அதில் அமர்ந்து புதிய காலனியைத் தோற்றுவிக்கின்றன.

பெரும்பாலான எறும்புகளின் காலனியில் மூன்று வகை எறும்புகள் வசிக்கின்றன: (1) கருவுற்ற பெண் அல்லது ராணி எறும்பு; இதன் வேலை முட்டையிடுவது தான். (2) கருவுறாத பெண் எறும்புகள்; இவைகளின் வேலை காலனியின் நிர்வாகத்துக்குரிய சகல பணிகளையும் புரிவது. (3) ஆண் எறும்புகள்; இவைகள் ஒரு வேலையும் செய்வதில்லை. ராணி எறும்புகள் 16 வருஷங்களுக்கு மேல் ஜீவிக்கின்றன. வேலைக்காரி எறும்புகள் ஐந்து அல்லது ஆறு வருஷங்களுக்குமேல் வாழ்வதில்லை. ஆண் எறும்புகள் பெண்ணுடன் காதல் சல்லாபம் செய்த சில மணி நேரத்துக்கெல்லாம் மாண்டு விடுகின்றன. வேலைக்காரி எறும்புகள்தான் காலனியில் பெரும் பகுதியாக இருக்கின்றன.

பூமிக்குள்ளே அமையும் எறும்புப் பட்டணங்கள் சில சமயம் 80 வருஷ காலங்கூட அழியாதிருக்கின்றன. ஐக்கிய அமெரிக்காவைச் சேர்ந்த பென்ஸில்வானியா மாகாணத்தில் அமைந்த ஓர் எறும்புப் பட்டணத்தின் விஸ்தீர்ணம் 50 ஏக்கர் இருந்ததாம். தவிர, எகிப்தில் உள்ள 'க்ரேட் பிரமிட்' என்ற மகா கோபுரம்போல் 84 மடங்கு பெரிதாக இருந்ததாம் இந்தப் புற்றுப் பட்டணம். இதை மனித அளவுக்குப் பெருக்கி லண்டன், நியூயார்க் பட்டணங்களை இதனுடன் ஒப்பிட்டுப் பார்த்தால், அவைகளெல்லாம் சிறு கிராமங்களேயாகும் என்கிறார் ஹென்ரி க்ரிஸ்டாஃபர் மிக்'குக் என்ற எறும்பு ஆராய்ச்சி நிபுணர்.

குப்பை கூளங்களைக் கொண்டு போய் ஒதுக்குப் புறமாய்க் கொட்டுவதற்கான சுகாதார ஏற்பாடுகளை எறும்புகள் செய்து வைக்கின்றன. புற்றின் நுழை வாயிலிலிருந்து வெகு தூரத்தில் மிகவும் உலர்ந்திருக்கும் மூலையாக ஒன்றைப் பார்த்து அங்கே ஒன்று அல்லது பல குழிகளைப் பறித்து அதில் குப்பை கொட்டுகின்றன.

எறும்புகளுக்கு நல்ல திராணியும் ஆரோக்கியமும் உண்டு. 70 முதல் 106 நாள் வரைக்கும் வெறும் தண்ணீரை மட்டும் குடித்துக்கொண்டே அவை உயிரோடிருக்கும். ஒரு வாரம் வரைக்கும் தண்ணீருக்கடியிலே கிடந்துவிட்டுக்கூடச் சாகாமல் வெளியே வந்துவிடும். தலைபோன முண்டமான எறும்பு 20 நாள் வரைக்கும் உயிருடன் இருந்ததைக் கண்டிருக்கிறார்கள்.

சேர்ந்து வாழ்வதில் எறும்புகளுக்குக் கஷ்டமே உண்டாவதில்லை. ஒரே புற்றுப் பட்டணத்தில் வாழும் இரண்டு எறும்புகளுக்குள் ஒருபோதும் சண்டை வருவதில்லை. அவைகள் பொறுமை இழப்பதில்லை. சமுதாய வாழ்க்கையால் ஏற்பட்ட நன்மைகளை மறப்ப

தில்லை. இருபது அல்லது முப்பது லட்சம் எறும்புப் பிரஜைகளைக் கொண்ட ஒரு பட்டணத்தில் உள்ள நிலை இது என்றால், என்ன ஆச்சரியம்!

நாற்காலியில் உட்கார்ந்து கொண்டிருந்தார் ஒரு கனவான். அவர் கையில் ஏதோ பழம் இருந்தது. அங்கே ஓர் எறும்பு வருவதைக் கனவான் கண்டார். அது என்ன செய்கிறது என்று பார்ப்பதற்காக அதன் வழியில் பழத்தை வைத்தார். எறும்பு சற்று நின்று பழத்தை நக்கிப் பார்த்தது. பிறகு, சட்டென்று திரும்பி ஓட்டமாய் ஓடி, 12 அடி தூரத்தில் இருந்த ஒரு பாழிக்குள் புகுந்தது. சில நிமிஷ நேரம் சென்றது. பாழியிலிருந்து எட்டு எறும்புகள் கிளம்பி நேரே விரைவாக இந்தப் பழத்தருகே வந்து சேர்ந்தன. ஓர் எறும்பு எட்டு எறும்புகளுக்குப் பழத்தைப்பற்றிய செய்தியை எப்படியோ தெரிவித்திருக்கிறது!

எறும்புகள் ஒன்றை ஒன்று சந்திக்கும்போது, 'ஆன்டென்னு' என்னும் கொம்புபோன்ற தம் உறுப்புகளை ஒன்றுடன் ஒன்று வெகு வேகமாக உரசிக்கொள்ளுகின்றன. இது அவைகளின் சங்கேத பாஷையாக இருக்கும் என்று எறும்பு ஆராய்ச்சி நிபுணர்கள் எண்ணுகிறார்கள்.

உடல் அமைப்பு விஷயத்தில் மனிதனுக்கு அடுத்தபடியாக இருப்பது வாலில்லாக் குரங்கு. ஆனால், சமயோசித சாமர்த்தியத்தில் எறும்பையே மனிதனுக்கு அடுத்த படியில் வைக்கவேண்டும்.

அரச நீதி

உள்ளத்திலே யுத்தத்தை விரும்புகிறவன், புருவத்திலே சமாதான வேஷம் போட முடியாது.

பேராசை பிடித்தவன், இதற்குமேல் ஏறமுடியாது என்ற உயரத்துக்கு ஏறிவிடுவான்; அப்புறம் அங்கிருந்து பெரு நஷ்டத்துடன் உருட்டி யடித்துக்கொண்டு அவன் விழவேண்டியதுதான்.

ஏதாவது சிறிதேனும் கருணையுள்ள அரசன், தன் பிரஜைகள் அனைவருக்கும் உள்ளத் துயர் அளித்ததொரு வெற்றியால் ஆனந்தம் அடைய முடியாது.

நல்ல தர்மங்களைக் காப்பாற்ற, நல்ல சட்டங்கள் எவ்விதம் தேவையோ, அவ்விதமே நல்ல சட்டங்களைக் காப்பாற்ற நல்ல தர்மங்களும் தேவை.

இதுவே அதிருஷ்டத்தின் வேலை: அதிருஷ்டம் தனக்கு என்ன பரிசை அளிக்க வந்திருக்கிறது என்று அறிந்துகொள்ளும் அறிவும் திறமையும் எவனுக்கு உண்டோ, அவனைக் கண்டு பிடித்து, மகத்தான சம்பவங்களை நிறைவேற்றப் பயன்படுத்துகிறது அதிருஷ்டம்.

—மக்கியாவில்லி

பாபுராவ் பதில் சொல்லுகிறார்

கேட்பவரின் கேள்விகளுக்கு, 'ஃபிலிமிண்டியா' ஆசிரியர் பாபுராவ் அளிக்கும் பதில்கள் பிரசித்தம். இவைகளில் விறுவிறுப்பும் கேலியும் நிறைந்திருக்கும். இவை 'ஃபிலிமிண்டியா' ஜனவரி '54 இதழில் வந்தவை.

கேள்வி: ருஷியாவில் உள்ள சீமாட்டிகளின் நிலை என்ன?

பதில்: ருஷியாவில் சீமாட்டிகளே இல்லை. அங்கே பெண்கள் இருக்கிறார்கள். அவர்கள் வீட்டைக் கவனித்துக்கொள்ளும் மனைவிமாராகவோ, தொழில் செய்யும் பெண்களாகவோ இருப்பார்கள்; அல்லது இரண்டுமாக இருப்பார்கள்.

* * *

கே: ஒரு நாய் தன் எஜமானனையே பார்த்துக் குரைத்தால்—?

ப: அது குரைப்பதல்ல; சம்பாஷணை.

* * *

கே: கங்கை இல்லாத காசி எப்படி இருக்கும்?

ப: லாண்ட்ரி இல்லாத நகரம் போல இருக்கும். உலகில் உள்ள மிகவும் அழுக்கான ஆடைகள் அதை அடைவதோடு, கொடிய பாவிகளும் அதை அடைகிறார்கள்.

* * *

கே: நாடு விட்டுத் துரத்திய மன்னர் எப்படி இருப்பார்?

ப: சர்க்கஸ் கூட்டுக்குள் அடைபட்ட ஆளை விழுங்கும் புலி போல.



கே: கஞ்சாக் குடிக்கிறவர்கள் சொப்பனத்தில் என்ன காணுகிறார்கள்?

ப: ஐந்தாண்டுத் திட்டத்தில் தாமோதர நதியின் இரு கரைகளிலும் லட்சக்கணக்கான ஏகராக்களில் கஞ்சா விளைவதாகக் காணுகிறார்கள்.

* * *

கே: அமெரிக்காவிலிருந்து பாகிஸ்தானுக்குக் கோதுமை இலவசமாகக் கிடைத்தபோது அந்தத் தானத்தை விளம்பரப்படுத்த 5,00,000 சுவரொட்டிகளை அமெரிக்கா பாகிஸ்தானுக்கு அனுப்பியதாமே?

ப: ஏசுநாதர் குன்றத்தின் மீதேறி, "நீ தானம் செய்யும் போது வலக் கை கொடுப்பதை இடக் கை அறியாமல் கொடு" என்று உபதேசித்த காலத்தில், அமெரிக்காவைக் கண்டு பிடிக்கவில்லை.

* * *

கே: பாகிஸ்தானின் உள்நாட்டு, வெளி நாட்டுக் கொள்கைகள் என்ன?

ப: பாகிஸ்தானுக்கு ஒரே ஒரு நோக்கந்தான்: இந்தியாவை அடக்க வேண்டும்.

* * *

கே: ஜில்லா அதிகாரிக்கு 55 வயசு ஆகிவிட்டால் ஜில்லா நிர்வாகத்துக்குத் தகுதியற்றவராகிறார். ஆனால் நடுங்கும் உடம்பும் குறைந்த பார்வையுமுடைய கிழட்டு அரசியல்காரர் ஒரு ராஜ்யம் முழுவதையும் நிர்வாகம் செய்கிறாரே; எப்படி?

ப: அதனால்தான் இந்தியாவை அற்புதங்கள் நிறைந்த நாடு என்று சொல்கிறோம்.

* * *

கே: நேரு இல்லாத காங்கிரஸ் எப்படி இருக்கும்?

ப: பாண்டு வாத்தியம் இல்லாத சர்க்கஸ் போல்.

* * *

கே: அமெரிக்காவில் மாணுக்கர்கள் படிக்கிறபோதே சம்பாத்தியமும் செய்கிறார்கள். இந்தியாவில், அந்தோ?

ப: இந்தியாவில் படிக்கிற காலத்தில் கலகம் செய்கிறார்கள்.

* * *

கே: காங்கிரஸில் என்ன குறை?

ப: நேருவின் வார்த்தைகளைச் செயலாக மாற்றும் தலைவர் ஒருவர் இல்லாததுதான் குறை. நேரு அழகாகப் பேசுகிறார்; ஆனால் ஒன்றும் செய்வதில்லை.

விஷயம் இதுதான்

இது தாங்கள் செய்ய வேண்டியது என்று தெளிவாகத் தோன்றும் சிறு சிறு காரியத்தை நாட்டிலுள்ள அத்தனை பேரும் செய்துவிட்டால், நாட்டுக்கு ஏற்படும் பெரிய சிரமங்களெல்லாம் தாமாகவே தீர்ந்துவிடும்.

—ஜனாதிபதி கூலிட்ஜ்

கண்ணைப் பற்றிய உண்மைகள்

உங்கள் வலது கண்ணிலே பச்சை நிற ஒளியும் இடது கண்ணிலே சிவப்பு நிற ஒளியும் பட்டால், நீங்கள் காண்பது மஞ்சள் நிறமாயிருக்கும்.

ஆமை, பாம்பு, கோழிக் குஞ்சு இவைகளுக்கெல்லாம் இரவிலே கண் தெரியாது.

சாதாரணமாக ஒரு மனிதன் மினிட்டுக்கு 30 தடவை கண் சிமிட்டுகிறான்.

சகஜமான ஒரு மனிதன் ஒரு விழியை விட்டு மறு விழியை மட்டும் அசைக்க முடியாது.

வலக்கையன், இடக்கையன் என்பது போல வலக் கண்ணன், இடக் கண்ணன் என்ற வேற்றுமையும் மனிதருக்குள் உண்டு. பெரும்பாலோர் வலக் கண்ணரே.

கண் உண்மையில் மூளையின் ஒரு பகுதியே.

—டொனல்டு ஹெர்ஷ்.

ஆண்களோடு பெண்களும் சரி நிகர் சமானமாக..

உபநிஷத்தில் பெண்கள்

ஆர். ஆர். திவாகர்

அதிருஷ்டவசமாக இந்தியச் சமூக சரிதம் மிகப் பழமையானது; இதுவரை அழிவற்றதாகவும் இருந்துவருகிறது. இதில் இதிகாசமும் ஆட்சி முறைகளும் சட்டங்களுங்கூட அடங்கியிருக்கின்றன.

உபநிஷத காலத்தில் அறிவாற்றலிலும் ஆத்மிகத் துறையிலும் பெண்கள் மிகச் சிறந்த நிலையில் இருந்தார்கள்.

உபநிஷத்துக்கள் வேதாந்தங்களுக்குப் பிறப்பிடம். இந்திய மதங்கள் எல்லாவற்றிற்கும் அவை ஆணிவேர். ரிஷிகளும் பிற்காலத்து ஞானிகளும் இவற்றிலிருந்தே ஆத்மிக சக்தி பெற்றார்கள். நாட்டின் நலனுக்காக உபநிஷத்துக்கள் பல பகுதிகளாகப் பிரிக்கப்பெற்றன; இந்தியாவின் பழைய சம்பிரதாயங்களைப் போல் இவையும் வேதத்தின் பகுதிகளே. பழைய உபநிஷத்துக்கள் தனித்தனியே வேறு வேறு வேதங்களைச் சேர்ந்தவை. அந்தக் காலத்தில் நம் சமூகம் ஆடம்பரமற்ற வாழ்க்கையை வகுத்துக்கொண்டிருந்தது. 'பெண்கள் ஆண்களைவிடத் தாழ்ந்தவர்கள்; அவர்களுக்கு வேத அப்பியாசம் செய்யும் அதிகாரம் கிடையாது' என்ற பேதபாவம் அந்த நாளில் இருக்கவில்லை. பின்னல் புராண காலத்திலேயே இந்தப் பேதம் தோன்றியது. காலப் போக்குக்கு ஏற்றபடி பெண்களின் நிலை மாறியது.

குடும்பத்தின் தலைவன் தந்தை; ஏக குடும்பமாக வாழ்வது என்பது வழக்கத்தில் இருந்தது. ஆண் குழந்தை பிறந்தால் பெருமைப்படும் நிலை இருந்ததென்றாலும், பெண்களையும் கௌரவமாகவே நடத்தினார்கள். கர்ப்பிணிகளை மிகத் திறமையுடன் போஷித்தார்கள். வேத இலக்கியத்தில் வரும் தேவதைகளுக்கு அவ்வளவு பெருமை இல்லாவிட்டாலும் 'வாக்', 'உஷா' என்று தேவதைகள் நாட்டின் அன்புக்குரியவர்களானார்கள். வேதத்தின் 'ரிக்'குகளை இயற்றியவர்களில் பெண்கள் பலர் இருந்திருக்கிறார்கள். வாகாம்ப்ருணி என்பவள் 'தேவீ ஸூக்த'த்தை இயற்றினவள். ராத்திரிதேவி என்பவள் 'ராத்ரீ ஸூக்த'த்தை இயற்றினாள். பல யாகங்களில் அத்வர்யுவாய் இருந்த ஸார்ப்ரராணி, 'அக்னி ஸூக்த'த்தை இயற்றினாள். அக்கினியைப்பற்றிய 'விச்வவாரா' ஸூக்தங்கள் பிரசித்தமானவை. இந்திரனைக் குறித்து அபாலா என்னும் கன்னி இயற்றிய மந்திரங்கள் இருக்கின்றன. அவள் தண்ணீரையொட்டி வளர்ந்த சோமவல்லியை யாகத்துக்காகப் பறித்து வீட்டுக்குக் கொண்டு போனதாகத் தெரிகிறது. அவள் இந்திரனுக்காகத் தானே சோமரசத்தைத் தயாரித்தாள். அவள் யாகத்தில் நேர்முகமாக ஈடுபட்டாள் என்று இதனால் தெரி

காப்பிரைட்: கர்மவீர் (கன்னடம்: தீபாவளி மலர்), ஹுப்ளி.

கிறது. 'லோபாமுத்திரை', 'சசியஸீ' என்பவர்களுடைய பெயர்கள் பிரசித்தமானவை. கோஷாகாக்ஷீவதி, சூர்யா சாவித்திரி, இந்திராணி, சிரத்தா காமாயனி, சசீ, பௌலோமி, ஊர்வசி ஆகியோரும் சில ரிக்குகளை இயற்றினதாகப் பிரசித்தி.

பெண்கள் தத்துவஞானம், ஆத்மிக வாழ்க்கை, ஆத்மாநுபவத்தின் தீவிரமான சர்ச்சை இவைகளில் இடம் பெற்றது போலவே சமூகத்திலும் குடும்பத்திலும் எல்லாராலும் மதிக்கப் பெற்று வாழ்ந்து வந்தார்கள். பால் வேற்றுமை, ஜாதி வேற்றுமை, வயது, காலம், இடம் என்ற வேற்றுமைகள் இன்றி வேதாந்த சர்ச்சை நடந்து வந்தது. ஆத்மிக வாழ்க்கை நடத்தத் தகுதியுடையவர்கள், தகுதியில்லாதவர்கள் என்று, பொதுவாக இரண்டு பிரிவுகள் இருந்தனவே தவிர, வேறு பிரிவு இருக்கவில்லை.

உபநயனச் சடங்கு வேதகாலத்திலிருந்து நடைபெற்று வந்தது. சிறுவர் சிறுமியர் இரு பாலாருக்கும் இது நடந்து வந்தது. இதன் பின்பே வேத அத்தியயனம் தொடங்கும். இது ஆத்மிக வாழ்க்கையின் தொடக்கமே. ஆண்களைப் போல் பெண்களுக்கும் ஆத்மிக சாதனை பெறவும் வேதாத்தியயனம் செய்யவும் அதிகாரம் உண்டு. பிரம்மசாரிணி, பிரம்மவாதினி, தாபசி, ஸித்தா முதலிய பெயர்கள் பெண்களின் வாழ்க்கைச் சுதந்தரம் எப்படி இருந்ததென்பதற்கு ஆதாரமாக இருக்கின்றன. ரிக்வேத காலத்தில் ரிஷிகளாக வாழ்ந்த பெண்களைப் பிரம்மவாதினிகள் என்று 'பிருகத் தேவதா'வில் வருணித்திருக்கிறது. மணம் செய்து கொண்டு குடும்ப வாழ்க்கை நடத்த விரும்பும் பெண்ணை 'ஸத்யோவதூ' என்று பிற்காலத்து ஸ்மிருதிகர்த்தாக்கள் சொல்லியிருக்கிறார்கள்.

மிகப் பிற்காலத்தில், அதாவது மகாபாரத காலத்தில்கூட, குருக்ஷேத்திரத்தின் அருகில் ஓர் ஆசிரமத்தில் பிராம்மணக் கன்னிகை ஒருத்தி சந்நியாசினியாக இருந்துகொண்டு யோகசித்தி பெற்று, 'தபஸ்ஸித்தா' என்று பெயர் பெற்றதாக வரலாறு உள்ளது. சாண்டில்ய ராஜனுடைய மகள் பிரம்மசாரிணி ஆசிரமத்தில் இருந்துகொண்டு ஆத்ம ஞானம் பெற்றாள். பௌத்த சந்நியாசினிகளில் பிரசித்தி பெற்றவர்கள் பலர் இருந்திருக்கிறார்கள். வேத பண்டிதரென்று பெயர் பெற்றவர் உபஸ்தி சாக்ராயணர். இவருடைய மனைவி வயதில் இளையவள் ஆனாலும், 'பஞ்சக் காலத்தில் எப்படிக் குடும்பம் நடத்துவது?' என்ற வழியை அறிந்திருந்தாள். வீட்டை நிர்வகிப்பதில் தேர்ச்சி பெற்றவள். ஏழைப் பணிப் பெண்ணாகிய அழகி ஜபாலா என்பவளுடைய கதை பிரசித்தி வாய்ந்தது. அவள் எப்பொழுதும் உண்மையையே பேசுபவள். அவள் தன் மகனிடம், "குரு உன்னை யார் என்று விசாரித்தால், நான் உண்மையையே விரும்பும் ஜபாலாவின் மகன் சத்தியகாமன் என்று தைரியமாகச் சொல்" என்று சொல்லிக் கொடுத்தாள். அவள் பருவப் பெண்ணாயிருந்த சமயம் வேலைக்காகப் பல இடங்களில் அலைந்துகொண்டிருந்தாள். அப்போது பிறந்தவன் சத்தியகாமன்.

அவன் குருவிடம் உண்மை பேசியதற்காக, அவர் அவனைக் கௌரவித்தார். உபநிஷத்துக்களில் மிகச் சுவையும் உயர்ந்த கருத்தும் அமைந்த பகுதிகள் கார்க்கி, மைத்திரேயி என்ற இருவர்களுடையவை. கார்க்கி வாசக்னு முனிவரின் மகள். மைத்திரேயி யாக்ஞவல்கியரின் மனைவி.

ஒரு சமயம் ஜனக மகாராஜா தம் சபையில் கல்வியிற் சிறந்த பல பெரியோர்களை அழைத்தார்; கொம்பில் பொற்காசு கட்டிய ஆயிரம் பசுக்களை நிறுத்தி, "உங்களில் தலை சிறந்த வித்துவான் இந்த ஆயிரம் பசுக்களைக் கொண்டு போகலாம்" என்றார். உடனே யாக்ஞவல்கியர் தம் சிஷ்யர்களை அழைத்து அந்தப் பசுக்களையெல்லாம் கொண்டு போகச் சொன்னார். சபையோர் கேள்வி கேட்கக்கூட அவகாசம் இல்லை; பசுக்களை அவருடைய சிஷ்யர்கள் அழைத்துச் சென்றார்கள். மற்றவர்கள் மனத்தாங்கலுடன் வாயைத் திறக்காமல் இருந்தார்கள். ஆனால் தன்னம்பிக்கையே உருவான கார்க்கி, யாக்ஞவல்கியரின் செய்கையைக் கண்டித்தாள். அவள் கேள்விக்குத் தகுந்த பதிலை யாக்ஞவல்கியர் சொல்லிவிட்டார். சில நிமிஷங்களிலேயே வெற்றி யாக்ஞவல்கியருக்குத்தான் என்று அவளுக்குத் தெரிந்துவிட்டது. ஆனாலும் சான்றோர்கள் நிறைந்த சபையில் நியாயப்படி போட்டியில் வென்ற பின்னரே பரிசைக் கொண்டுபோக வேண்டும் என்ற ஒழுங்கு முறைக்கு அடிகோலிய பெருமை அவளைத்தான் சாரும். யாக்ஞவல்கியரின் வித்தையின் பெருமையையும் அதனால் அவள் எல்லாருக்கும் விளக்கினாள். அவளுடைய சமயோசிதமான தைரியமும் தன்னம்பிக்கையும் பெண்குலத்துக்கே பெருங் கீர்த்தியைத் தேடிக்கொடுத்தன.

கார்க்கி தன் பாண்டித்தியத்தில் அசையாத நம்பிக்கையும் கேள்வி கேட்பதில் தெளிவான அறிவும் பெற்றவள். யாக்ஞவல்கியரின் முதல் மனைவியாகிய காத்தியாயனி உலக விவகாரங்களில் அநுபவம் முதிர்ந்தவள். மற்றொரு மனைவி மைத்திரேயி ஆத்மிகத் துறையில் நன்றாக உழைத்தவள்.

வெகு காலம் யாக்ஞவல்கியர் குடும்ப வாழ்க்கை நடத்தியபின் மனைவியர் இருவருக்கும் தம் சொத்தைப் பிரித்துக் கொடுத்துவிட்டுத் துறவு பூண நினைத்தார். அவருடைய உத்தேசத்தை அறிந்த மைத்திரேயியின் பதில் அவருக்கு ஆச்சரியத்தையும் அதே சமயத்தில் வெகு திருப்தியையும் கொடுத்தது. "செல்வத்தால் அமரத்துவம் பெற முடியாதே!" என்றாள் அவள். அவர் ஆச்சரியத்தால் பேச்சற்று நின்றார். அவள், "அமரத்துவத்தின் அருகிலும் என்னைக் கொண்டுபோக முடியாத இந்தப் பொருள்கள் எல்லாம் எனக்கு எதற்கு?" என்றாள். கிழவருக்கு அவளிடம் அன்பு பெருகியது. அவளுக்கு ஆத்மஞானத்தைப் போதித்தார்.

உபநிஷத்துக்களைப் போலவே அவைகளோடு சம்பந்தமுள்ள கார்க்கி, மைத்திரேயி முதலியோரும் அமரவாழ்வு பெற்றிருக்கிறார்கள். இல்லறத்தாரும் பிறரும் பின்பற்றக்கூடிய அரிய செயல்களும் உபநிஷத்துக்களில் வருகின்றன. மொத்தத்தில் பெண்கள் அந்த நாளில் உயர்ந்த நிலையில் இருந்தார்கள் என்று தெரிகிறது.

காற்றிலிருந்து சக்தி

★

வாயு யந்திரம் பழம்பசலிச் சங்கதி என்பது போய், மறுபடியும் புத்துயிர் பெற்றிருக்கிறது. ஜே. எச். எம். ஸைக்ஸ் என்பவர் எழுதிய ஒரு கட்டுரையை ஆதாரமாகக் கொண்டது இது.

1945-ஆம் வருஷம் மார்ச்சு ௴ 25-ஆம் தேதி காலையில் மணி ஐந்து இருக்கும். டெலிபோன் மணி கணகண என்று அடித்தது. "நான்தான் வில்பர் பேசுகிறேன். ஒரு விபத்து நேர்ந்துவிட்டது. நல்லவேளையாக யாருக்கும் காயமில்லை. ஒரே ஓர் அலகுதான் போயிற்று. கோபுரம் விழவில்லை" என்று செய்தி வந்தது.

இந்தச் சம்பவம் நிகழ்ந்தது ஐக்கிய அமெரிக்காவைச் சேர்ந்த வெர்மாண்ட் என்ற இடத்தில். காற்றின் சக்தியைக் கொண்டே இயங்கும் பிரம்மாண்டமான வாயு யந்திரம் (விண்ட் மில்) ஒன்றை அங்கே அமைத்து, உலகத்திலேயே மிகப் பெரிய சோதனையை நடத்தினார்கள். அந்த யந்திர விசிறியின் ஓர் அலகுதான் இப்படி முறிந்தது. அந்த யந்திரத்தின் விசிறிக்கு இரண்டே அலகுகள். ஒவ்வோர் அலகும் 65 அடி நீளம்; 8 டன் நிறை. ஒடிந்த அலகு 750 அடி தூரத்தில் போய் விழுந்தது.

பால்மர் காஸ்லெட் பட்னம் என்பவர் ஆறு வருஷ காலம்



ஆர்க்னி தீவில் காஸ்டா ஹெட் என்ற இடத்தில் அமைந்துள்ள வாயுயந்திரம்

இரவும் பகலும் உழைத்து, இந்தப் பிரம்மாண்டமான வாயு யந்திரத்தை அமைத்தார். இதற்கு 'க்ராண்ட் பா நாப்' என்று பெயர் வைத்திருந்தார்கள்.

1941-அக்டோபரில் முதல் முதலாக இந்த யந்திரம் இயங்கத் தொடங்கியது. எண்ணெய், நிலக்கரி, நீர் முதலிய எதுவுமின்றிக் காற்றின் விசையைக் கொண்டே இது இயங்கியது. இதிலிருந்து உற்பத்தியான மின்சார சக்தி 5,000 மக்கள் உபயோகிக்கக்கூடிய அளவு இருந்தது. இதற்கு முந்திய காலத்திலிருந்தே உலகெங்கும் சிறு சிறு காற்று யந்திரங்களைக் கொண்டு மின்சார சக்தி உற்பத்தி செய்து வருகிறார்கள் என்பது உண்மை. ஆனால், இவ்வளவு பெரிய அளவில் காற்று யந்திரப் பரீட்சை நடத்தியது இதுவே முதல் தடவை.

25 மைல் வேகத்தில் வீசிய காற்றைக் கொண்டே இந்த யந்திரம் இயங்கியது. 115 மைல் வேகத்தில் வீசிய காற்றைக்கூட இது தாங்கிக்கொண்டது. ஆனல், அப்போது இதன் பல் சக்கரங்கள் மட்டும் சில சமயம் சிரமம் கொடுத்தன. இதைப் பலவிதமாகப் பரிசோதித்துப் பார்த்துவிட்டு, 1945-இல்தான் இதைப் பொதுஜன உபயோகத்துக்கு எஞ்சினீர் பட்னம் அளித்தார். ஆனல், அப்படி அளித்த 23 நாளைக்கெல்லாம் விசிறி அலகு முறிந்து யந்திரமே பழுதாய்ப் போயிற்று.

யந்திரம் பழுதுற்றாலும், இதன் நிர்வாகிகளுக்குப் போதிய அநுபவம் ஏற்பட்டுவிட்டது. மிகப் பெரிய அளவில் காற்றின் விசை கொண்டே மின்சார சக்தி பெறலாம் என்பது நிதர்சனமாயிற்று.



ஹெர்ட்ஃபோர்டுஷயரில் ஸெயிண்ட் ஆல்பன்ஸ் என்ற இடத்தருகே அமைந்து வரும் வாயு யந்திரம்.

ஆனால், அமெரிக்கா சம்பந்தப்பட்ட மட்டில் மற்ற மின்சார நிலையங்களை நிர்வகிப்பதைவிட இதை நிர்வகிப்பதில் அதிகச் செலவு ஏற்பட்டதாம். ஆகவே, மற்ற நிலையங்களோடு இது போட்டி போட முடியாது என்று இதன் நிர்வாகிகள் அபிப்பிராயப்பட்டார்கள்.

போதிய நிலக்கரி, எண்ணெய், நீர்விசை இவையெல்லாம் அமெரிக்காவில் இன்று கிடைக்கின்றன. ஆகவே, காற்றின் விசையைப் பயன்படுத்துவது அங்கே அவ்வளவு அவசியமாகத் தோன்றவில்லை. பிரிட்டனிலோ நிலக்கரி முதலியவை போதவில்லை. எனவே, காற்று விசை வசதியை ஆராய்வதற்காக 1948-இல் பிரிட்டனில் ஒரு கமிட்டியை நியமித்தார்கள். பிரிட்டன் முழுவதிலும் கிடைப்பதும் கிடைக்கக் கூடியதுமான நீர்விசை அவ்வளவுக்கும் சமமான அளவாவது காற்று விசையால் சக்தி பெறலாம் என்று அந்தக் கமிட்டியின் அறிக்கை தெரிவித்தது.

சென்ற வருஷம் ஏற்கனவே உள்ள பிற பிரிட்டிஷ் மின்சார நிலையங்களில் மின்சார சக்தி தயாரிக்க யூனிட் ஒன்றுக்கு அரைப் பென்னிக்குமேல் செலவாயிற்று. காற்று விசையைக் கொண்டு மின்சார சக்தி தயாரிப்பதற்கோ அரைப் பென்னிக்கும் குறைவாகவே செலவாகும் என்று பிரிட்டிஷ் எஞ்சினீர்கள் சொல்லுகிறார்கள்.

பிரிட்டனில் இப்போது இரண்டு வாயு யந்திரங்களை அமைத்துப் பரீட்சித்து வருகிறார்கள். ஒவ்வொன்றும் 100 கிலோவாட் மின்சார சக்தி கொடுக்கும். 100 தொழிலாளர்கள் அடங்கிய ஒரு தொழிற்சாலையை நடத்தவோ, 50 வீடுகளுக்கு வேண்டிய வெளிச்சம், உஷ்ணம், சக்தி இவைகளை அளிக்கவோ இந்த மின்சார சக்தி போதும். அமெரிக்காவில் பரீட்சித்துப் பார்த்த 'க்ராண்ட்பா நாப்' என்ற பெரிய வாயு யந்திரத்தில் 1,250 கிலோவாட் மின்சார சக்தி உற்பத்தியாயிற்று. இந்தப் பிரிட்டிஷ் வாயு யந்திரங்கள் அந்த அமெரிக்க யந்திரம் போல் பெரியவையாக இராவிட்டாலும், காற்றிலிருந்து சக்தி பெறுவது சாத்தியமே என்பதை நிரூபித்துவிட்டன.

பெரிய வாயு யந்திரம் அமைத்து மின்சார சக்தி பெறுவதென்றால், அதில் ஒரு கஷ்டம் இருக்கிறது. மின்சார சக்தியை உற்பத்தி செய்யும் டைனமோ என்ற கருவியை மிகப் பெரிதாக அமைக்கவேண்டும். காற்றடிக்கும் வேகம் பலவிதமாக மாறிக்கொண்டேயிருக்கும். டைனமோ கருவியோ ஒரே வேகத்தில் சுழலவேண்டும். இதற்கு ஏற்றபடி பல்சக்கர இணைப்பு (கியரிங்) ஏற்பாடுகளைச் செய்வதில் சிக்கல் ஏற்படும். தவிர, மிகப் பெரிய டைனமோ கருவியை, வாயு யந்திர விசிறி சுழலும் கோபுரத்தில் ஏற்றுவதென்றால், அந்தக் கோபுரத்தை அமைக்கும் செலவு அதிகரிக்கும். அதுமட்டும் அல்ல; அந்த யந்திரத்தை இயக்குவது சம்பந்தமாகவும் பல சிக்கல்கள் தோன்றும்.

இந்தச் சிரமங்களையெல்லாம் பிரிட்டிஷ் யந்திரங்கள் இரண்டும் சமாளிக்க முயன்றிருக்கின்றன. முதலாவது யந்திரம் ஆர்க்னீ தீவுகளுள் காஸ்டா ஹெட் என்ற இடத்தில் அமைந்திருக்கிறது. அதன் விசிறிக்கு மூன்று அலகுகள் உண்டு. அந்த அலகுகளில்

சிறகு போன்ற 'ஃபர்ல்' என்ற கம்பிச் சுருள்களைப் பொருத்தியிருக்கிறார்கள். காற்று மிகவும் வேகமாக அடித்தால், இந்தக் கம்பிச் சுருள்கள் மடங்கி, விசிறிகளை ஒருபுறம் திருப்பிவிடும். இதனால் விசிறிகளைக் காற்று நேரடியாகத் தாக்காது. சுழலும் வேகம் ஒரே விதானமாயிருக்கும்.

பிரிட்டனின் இரண்டாவது யந்திரம் ஹெர்ட்ஃபோர்டுஷயர் ஜில்லாவில் ஸெயிண்ட் ஆல்பன்ஸ் என்ற இடத்துக்கருகே அமைந்து வருகிறது. அதன் விசிறிக்கு அலுமினிய அலகுகள் இரண்டு இருக்கின்றன. ஒவ்வோர் அலகும் 40 அடி நீளம். இந்த யந்திரத்தில் மின்சார உற்பத்தி செய்யும் டைனமோ கருவியைக் கோபுரத்தில் ஏற்றவில்லை; தரையிலேயே வைத்திருக்கிறார்கள். ஆனால், கோபுர உச்சியில் சுழலும் விசிறியோடு இந்த டைனமோ கருவியை எப்படிப் பிணைப்பது? அதற்குத் தான் ஆச்சரியமான ஒரு யுக்தியைக் கடைப்பிடித்திருக்கிறார்கள். ஒரு கயிற்றின் நுனியில் கல் ஒன்றைக் கட்டி அதைப் பிடித்துச் சுழற்றினோமானால், கல் நம்மை விட்டு விலகிச் சுற்றுகிறது. இதற்குக் காரணம் 'ஸெண்ட்ரிஃப்யூகல் ஃபோர்ஸ்' (மையம் விட்டோடு சக்தி) என்று விஞ்ஞானிகள் சொல்லுகிறார்கள். இந்தச் சக்தியைத்தான் ஆல்பன்ஸ் வாயு யந்திரத்தில் பயன்படுத்துகிறார்கள். ஆனால், கல்லுக்குப் பதிலாகக் காற்றே அதில் இந்தக் காரியத்தைப் புரிகிறது.

ஆல்பன்ஸ் வாயு யந்திர விசிறிகளின் உட்புறம் குழாயாக இருக்கிறது. தவிர, கீழே உள்ள டைனமோ கருவியுடன் பொருத்திய கழி (ஷாஃப்ட்) ஒன்றும் குழாயாகவே இருக்கிறது. அந்தக் குழாய்க்கும் விசிறி அலகுகளின் குழாய்க்கும் சம்பந்தம் உண்டு. விசிறி அலகுகளின் குழாய் நுனியிலே துவாரம் இருக்கிறது, விசிறி வேகமாய்ச் சுழலும்போது. அலகுகளின் உட்புறக் குழாயில் உள்ள காற்றை வெளியே வீசித் தள்ளுகிறது. இதனால் குழாயில் சூனியம் (வாக்குவம்) ஏற்படும். ஆனால், இயற்கைக்குச் சூனியம் என்றால் பிடிக்காது. டைனமோ கருவியுடன் பொருத்திய கழியின் குழாயில் உள்ள காற்று, விசிறி அலகுக் குழாய்களுக்கு வருகிறது. இதனால், கோபுரத்தின் அடியில் சூழ்ந்துள்ள காற்று அதி வேகமாக உள்ளே புகுந்து, டைனமோ கருவியின் அச்சு (ஆக்ஸில்) வழியாகக் கழியின் குழாய்க்குள் செல்லுகிறது. காற்று இப்படிச் செல்லும்போது, டைனமோ கருவியின் அச்சைச் சுழற்றி விடுகிறது. இந்த விதமாக டைனமோ இயங்குகிறது.

இந்த ஆல்பன்ஸ் வாயு யந்திரத்தின் கோபுரத்தை 100 அடி உயரமுள்ளதாகக் கட்டி வருகிறார்கள். யந்திர விசிறி அலகுகள் இரண்டுதான். ஒவ்வோர் அலகும் 40 அடி நீளம். ஆல்பன்ஸ் வாயு யந்திரம் அமைந்த பிறகு சில மாத காலம் பரீட்சித்துப் பார்க்கப் போகிறார்கள். பிறகு இதே போன்ற மற்றொன்றை வடக்கு வேல்ஸில் மேலக் கடற்கரையில் அமைக்க உத்தேசித்திருக்கிறார்கள்.

காற்று விசையால் தயாராகும் ஒவ்வொரு யூனிட் மின்சாரத்தாலும் $1\frac{1}{2}$ பவுண்டு நிலக்கரி

மிச்சமாகும். 1,000 கிலோவாட் வாயு யந்திரத்தால் வருஷம் ஒன்றுக்கு 2,700 டன் நிலக்கரி மிச்சப்படும். ஆயினும் வாயு யந்திரங்களால் மின்சார சக்தி உற்பத்தி செய்யும் தொழில் பிரிட்டனில் வருங்காலத்தில் மிகப்பெரிய அளவுக்கு வளர்ந்து விடும் என்று சொல்வதற்கில்லை. என்றாலும், வரும் சில வருஷங்களில் அங்கே நூற்றுக் கணக்கான வாயு யந்திரங்கள் தோன்றி மின்சார உற்பத்தி செய்யும் என்றுமட்டும் நிச்சயமாகச் சொல்லலாம்.

யாருடைய பை?

ஜெர்மனியில் ஒரு ஜேபடித் திருடன் ஒரு கடைக்குள் புகுந்தான். ஒரு பெண்ணின் பை அங்கே கிடந்தது. அதில் இருந்த சாமான்களைத் திருடினான். அகப்பட்டுக் கொண்டான். போலீஸ் ஸ்டேஷனுக்குப் போனபோது, தான் திருடியது தன் மனைவியின் பையிலிருந்தே என்று கண்டான்!

—'டிட் - பிட்ஸ்'

காதலன் - காதலி

துருக்கி நாட்டின் தலைநகரம் இஸ்தான்புல். அதில் ஒருவன் தன் காதலியைப் பயமுறுத்தி, புத்தி பேதளிக்கச் செய்தான். இதற்காக அவனுக்குக் காவல் தண்டனை கிடைத்தது. சிறையிலிருந்து விடுதலை பெற்று வீட்டுக்கு வந்தபோது, "உள்ளே நுழையாதே" என்று அவனைக் காதலி விரட்டிவிட்டாள். ஆசாமி என்ன செய்தான்? வீட்டுக்கு வெடி வைத்து நாசம் செய்துவிட்டான்.

—'ஃபிலாடெல்ஃபியா என்கொயரர்.'

அடையாளத் தவறு

ஒருவர் தெருவிலே போய்க்கொண்டிருந்தார். அப்போது வழியிலே கண்ட மற்றொருவரின் சாயலைத் தவறுதலாகத் தம் நண்பருடையதாக நினைத்துக்கொண்டார். சட்டென்று அவரைப் பிடித்துக்கொண்டு, முதுகிலே தட்டினார். அந்நியர் திரும்பிப் பார்த்ததும் பிசகு விளங்கியது.

"மன்னிக்க வேண்டும். தாங்கள் என் நண்பன் ஒருவனைப் போல் இருந்ததால் இப்படிச் செய்துவிட்டேன்" என்றார் பிசகு செய்தவர்.

"நான் உம் நண்பனாக இருந்தால்தான் என்ன? அதற்காக இப்படியா அறைவது?"

"ஓய், அதைப்பற்றி உமக்கென்ன? என் நண்பனை நான் எப்படி வேண்டுமானாலும் அறைவேன்."

—'ஸெயிண்ட் ஜான் டெலிகிராஃப் ஜர்னல்,' கானடா.

அரசரா? ராணியின் கணவரா?

★

எலிஸபெத் தன்னந் தனியே ஆளவேண்டும் என்கிறது சம்பிரதாயம். ஆனால் அநேக பிரிட்டிஷ்காரர்கள் ஃபிலிப்பும் ஆட்சியில் பங்கு கொள்ளவேண்டும் என்று விரும்புகிறார்கள். வி. ஆர். கிம்மிட் என்பவர் 'ந்யூ லிபர்ட்டி' என்ற பத்திரிகையில் எழுதியிருப்பதன் சாரம் இது.

சுமார் ஆறு ஆண்டுகளுக்கு முன், இரண்டாம் எலிஸபெத் இளவரசியாக இருந்தபோது அவளுக்கும் ஃபிலிப் மவுண்ட்பாட்டனுக்கும் மணம் நிச்சயமாயிற்று. பங்கிங்ஹாம் அரண்மனையிலிருந்து பிரிட்டிஷ் அரசரான ஆறாம் ஜார்ஜும் ராணியும் சுருக்கமாக ஓர் அறிக்கை வெளியிட்டார்கள். அப்போது ஃபிலிப் பிரிட்டிஷ் கப்பற்படையில் லெஃப்டினண்டாக இருந்து வந்தார். அவர் கிரேக்க இளவரசரான ஆண்ட்ரூவின் மகன்.

இன்று எலிஸபெத் ராணியாகிவிட்டாள். ஃபிலிப் நல்ல அறிவாளி. பல விஷயங்களைப்பற்றி அவர் நன்றாகப் படித்தும் கேட்டும் இருக்கிறார். உயர்ந்த பண்புகளை உடையவர். இதையெல்லாம் கவனித்த பிரிட்டிஷ் மக்களில் அநேகம் பேர், அவரையும் என் அரசராக ஏற்றுக்கொள்ளக் கூடாது என்று கருதுகிறார்கள். விக்டோரியா காலத்துச் சம்பிரதாயப்படி 'ப்ரின்ஸ் கான்ஸார்ட்' என்ற இளவரசராக அவரை வைத்திருப்பது அவர்களுக்குப் பிடிக்கவில்லை. ஆனால் பழைய சம்பிரதாயத்தில் ஊறியவர்கள் விடுவார்களா? இவர்கள் கட்சிதான் இன்று ஓங்கியிருக்கிறது. விக்டோரியா ராணி அரசியல் விவகாரங்களில் தன் புருஷரான ஆல்பர்ட்டையும் கலந்துகொண்டு அவர் யோசனையின்படி நடப்பதுண்டு. எலிஸபெத் அப்படி இல்லை. அரசியல் விவகாரம்பற்றிப் பிரதம மந்திரி சர்ச்சிலை ஃபிலிப் சந்தித்துப் பேச எலிஸபெத் அநுமதிப்பதில்லை. சர்ச்சிலும் அதற்கு இடங் கொடுக்க மாட்டார்.

எலிஸபெத்திடம் அன்றாடம் அந்தரங்க அரசியல் தஸ்தாவேஜுகள் வந்துகொண்டிருக்கும். அவைகளை ஃபிலிப் பார்க்க மாட்டார். ராணியும் சம்பிரதாயத்தைக் கைவிடாமல் இருந்து பழகியவள்; ஆகையால், அதை மீறுவதில்லை. இப்போதுதான் ஃபிலிப்புக்கு இந்த விஷயங்களில் அநுபவம் ஏற்பட்டு வருகிறது. ஆனால்

ராஜ குடும்பத்தைக் கவனித்துக் கொள்ளும் பொறுப்பு மட்டும் அவருடையதுதான்.

இப்போதெல்லாம் ராணியின் போக்கை அநுசரித்துத்தான் ஃபிலிப் செல்லவேண்டியிருக்கிறது. முன்னெல்லாம் அவர் வேலையாட்களைச் சற்றுக் கண்டிப்பது வழக்கம். ஆனால் அப்படி இருந்தால் காரியம் சரியானபடி நடக்காது என்று போகப் போகத் தெரிந்து கொண்டார்.

அதனுல் இப்போது ராஜ குடும்பத்தில் இருக்கும் மற்றவர்களைப் போலவே நயமாகப் பேசிப் பழக வேண்டியிருக்கிறது. 1950 டிஸம்பரில் எலிஸபெத்தும் ஃபிலிப்பும் கிரீஸுக்குப் போயிருந்தார்கள். அவர்களைக் கிரீஸ் அரசரும் ராணியும் வரவேற்று உபசரித்தார்கள். அப்போது ஏதென்ஸ் நகரில் மலைமேல் உள்ள பழைய கோட்டை கொத்தளங்களைப் பார்க்க ஏற்பாடு செய்திருந்தார்கள்.

இதற்கு முன்னுலேயே எலிஸபெத் பி. பி. ஸி. காமிராக்காரர் ஒருவரை அங்கே போகும்போது படம் பிடிக்க ஏற்பாடு செய்திருந்தாள்.

ஆனுல் அன்று காலை அவர்கள் அங்கே புறப்பட்டுப் போனபோது ஊரிலுள்ள நிருபர்கள், காமிராக்காரர் அத்தனை பேரும் அங்கே கூடிவிட்டார்கள்.

உடனே கிரேக்க அரசர், பி. பி. ஸி-க்காரர் உள்பட எல்லாக் காமிராக்காரர்களும் போய்விடவேண்டுமென்று கண்டிப்பாக உத்தரவிட்டுவிட்டார். பி. பி. ஸி-க்காரர் எலிஸபெத் கட்டளையிட்டு வந்தவரல்லவா? அதனுல் அவருக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. அவர் ஒரு தூண் மறைவில் பதுங்கிக்கொண்டார். ஆனுல் ஃபிலிப் அவரைக் கவனித்து விட்டார்; அதிகார தோரணையில் விரலை ஆட்டி, "சொன்னது கேட்டதோ இல்லையோ?" என்று சொல்லிக் கீழ்ப்பக்கம் சுட்டிக் காட்டினுர்.

பி. பி. ஸி. காமிராக்காரர் வேறு வழி இல்லாமல் கீழே இறங்கினுர். அப்போது ராஜ தூதன் ஒருவன் அவர் பின்னுல் ஓடி வந்து, "ஏதோ தவறுதலாக உங்களையும் கீழே போய்விடும்படி சொன்னுர்கள். நீங்கள் மட்டும் வரலாம்" என்று சொல்லி அவரை அழைத்துப் போனுன்.

மறுபடியும் பி. பி. ஸி-க்காரர் அங்கே வரும்போது எலிஸபெத் ஃபிலிப்பைப் பார்த்து, "...இருக்கலாம். ஆனுல் என் விருப்பம் என்று ஒன்று உண்டோ இல்லையோ?" என்று சொல்லிக்கொண்டிருந்தாள்.

சமீபத்தில் பிரிட்டனில் ஃபிலிப் தொழிற்சாலைப் பகுதிகளில் சுற்றிப் பார்த்தபோது காமிராக்காரர்கள் அவரைக் கவிந்துகொண்டார்கள். அப்போதும் அவருக்கு இப்படித்தான் எரிச்சல் வந்துவிட்டது. அவர்களுடைய பெயர்களைக் கேட்டுக் குறித்துக்கொண்டார். பின்னுல் அவர்கள் எஜமானர்கள் கடுமையாக அவர்களை எச்சரித்ததாகத் தெரிகிறது.

இப்போதெல்லாம் அவர் சந்தர்ப்பத்தை அறிந்து பக்குவமாக நடந்துகொள்கிறுர். இருந்தாலும் சில சமயம் தம்மைச் சமாளித்துக் கொள்ள முடிகிறதில்லை. எலிஸபெத்துடன் அவர் கானடாவுக்கு விஜயம் செய்திருந்தபோது இப்படித்தான் நடந்தது. ஒரு மோட்டார்க் கம்பெனியார் ராஜ உப

சாரத்துக்கான ஏற்பாடுகளெல்லாம் செய்திருந்தார்கள். அவர்களைப் பார்த்து, "ஏன், ஐயா, தலையில் இடிக்காதபடி கார் தயாரிக்கக் கூடாதா?" என்று கேட்டுவிட்டார்.

நல்ல பிரசங்கி என்று பெயர் எடுத்திருக்கிருர். ராஜ உபசாரங்களின்போது, ஏற்கனவே அதிகாரிகள் எழுதிக் கொடுத்ததைத் தாம் நன்ருகப்பார்த்த பின் ஒழுங்காக 'டைப்' செய்த ஏட்டைக் கையில் வைத்துக்கொண்டு, அதை ஓர் எழுத்துக்கூட மாற்ருமல் அப்படியே படிப்பது வழக்கம். மற்றச் சமயங்களில் தாமே எழுதி வைத்துக்கொண்டு படிப்பார். சிறு பிரசங்கமாக இருந்தால் குறிப்பு மட்டும் வைத்துக்கொள்வார்.

1948-இல் லண்டனிலுள்ள கில்டுஹாலில் 'லண்டன் நகரின் சுதந்தரப் பிரஜை' என்ற விருதை அவருக்கு அளித்தார்கள். அப்போது அவர், "சுதந்தரம் என்பது எனக்குமட்டும் அல்ல; இரண்டாம் உலக மகாயுத்தத்தில் தலைவர்கள் சொல்படி நடந்த லட்சக்கணக்கான மக்களுக்குந்தான். என் மனைவியும் நானும் மேற்கொண்ட லட்சியத்தின்படி பொது மக்களுக்குச் சுதந்தரத் தொண்டின் மேன்மையை விளக்கி வருவோம்" என்று பேசினர்.

பொதுவாக அவரோடு பழகுபவர்கள் எல்லாருக்குமே அவரைக் கண்டால் பிடித்துத்தான் இருக்கிறது. முகத்தில் கனிவான புன்சிரிப்பு; இருந்தாலும் அவர் கண் மட்டும் கூர்ந்து வினவுவதுபோல் இருக்கும். விஷயங்களை நன்ருக உணர வேண்டும் என்ற கருத்தில் சில சமயம் அவர் விசாரிக்கும்போது, பதில் சொல்ல இயலாமல் மற்றவர்கள் சற்றுத் திணறுவார்கள்.

வந்ததும் அவர் செய்த முதல் வேலை பங்கிங்ஹாம் அரண்மனை நிர்வாகத்தை அடியோடு மாற்றி அமைத்ததுதான். அங்கே 230 வேலையாட்கள் இருந்தார்கள். இவர்களில் பலர் ராஜ குடும்பத்தைக் கவனிப்பதைவிடத் தம் சொந்தச் சௌகரியத்தையே அதிகமாகக் கவனித்துவந்தார்கள். ராஜ குடும்பத்தார் பரஸ்பரம் ஏதாவது தகவல் கேட்டு விசாரித்துக்கொள்ளும்போது வீணுக நோட்டுப் புத்தகங்கள் செலவாயின. கப்பலில் சிப்பந்திகள் ஒருவரோடு ஒருவர் பேசச் சில வசதிகள் அமைத்திருப்பார்கள். அங்கே பழகியவரானதால் அந்த ரீதியில் அரண்மனையிலும் ஏற்பாடுகள் செய்தார்.

ஆனுல் இந்த விஷயத்திலும் எலிஸபெத் கையில்தான் அதிகாரம் இருக்கிறது. பழைய ராஜரீகத்தையும் கௌரவத்தையும் அவள் விட்டுக் கொடுப்பதில்லை. ஆயினும், இரண்டு பேரும் இழைந்து பழகப் பழக நாளடைவில் இவர்கள் உறவில் உறுதி ஏற்பட்டு, எலிஸபெத் இவருடன் சேர்ந்து நாட்டைச் சிறப்பாக ஆளுவாள் என்று சொல்லலாம்.

எலிஸபெத் பதவி ஏற்றதுமே தன் முக்கியத்துவத்தையும் கடமையையும் பொறுப்பையும் உணர்ந்து நடக்கத் தொடங்கிவிட்டாள். மெல்போர்ன் பிரபு விக்டோரியா ராணி பதவி ஏற்றபோது எப்படி மிகவும் விநயமாக நடந்துகொண்டாரோ அதுபோலவே வின்ஸ்டன் சர்ச்சிலும் நடந்துகொண்டார். சமீபத்தில் ராணுவ அணிவகுப்பைப் பார்வை

யிட்டபோது எலிஸபெத் காவலாளர்களுக்குத் தலைமை தாங்கிக் கம்பீரமாகக் குதிரைமீது அமர்ந்து சென்றதைக் கண்டு எல்லாருக்குமே பெருமைதான். பிறகு அரண்மனை மாடியில் அவளுடன் ஃபிலிப்பும் நின்றுகொண் டிருந்தார்; அப்போது மக்கள் தம்மையும் ராணியையும் வாழ்த்தியதைக் கண்டு தம் பொறுப்பையும் கடமையையும் அவர் நிச்சயமாக உணர்ந்திருப்பார்.

பள்ளிக்கூட அதிகாரிகள் அவரைப்பற்றி எழுதியுள்ள குறிப்பு இது: "இளவரசர் ஃபிலிப் இயல்பாகவே தலைமை பூண்டு காரியங்களை நடத்தத் தகுதி வாய்ந்தவர். ஆகவே, அவர் சாதாரணமாக உழைப்பது பிரமாதமில்லை; தம் இயல்பை மறவாமல் தொண்டில் மிகச் சிறந்து விளங்கவேண்டும்."

இனி அவர் எப்படி நடந்து கொள்கிறார் என்பதைப் போகப் போகத்தான் சொல்ல முடியும்.

அவன் செய்த நன்மை

ஆறு வயதுச் சிறுவன் மிகவும் பெருமையோடு செப்புக் காசு ஒன்றைக் கையில் பிடித்தபடி வீட்டுக்கு வந்து சேர்ந்தான்.

"ஏதடா இந்தக் காசு?" என்று தாய் கேட்டாள்.

"அந்தப் பயல் வில்லிக்கு ஒரு நன்மை செய்தேன். அதற்காக அவன் இதை எனக்குச் சம்மானம் கொடுத்தான்."

"அவனுக்கு நீ என்ன நன்மை செய்தாய்?"

"அவனை நான் மண்டையில் அடித்துக்கொண் டிருந்தேன். 'அடே நிறுத்துடா' என்று கெஞ்சினான். உடனே நிறுத்தினேன்" என்றான் சிறுவன்.

—விக்டர் ஹெக்ட்

அன்பில்லாத கணவன்

"எனக்குப் பன்னிரண்டு குழந்தைகள் பிறந்துவிட்டன. என் கணவருக்கு என்னிடம் அன்பில்லை என்று இப்போதுதான் கண்டுகொண்டேன்" என்று அழுதாள் ஒரு பெண்.

"அவருக்கு உன்னிடம் அன்பு இருந்திருக்குமானால், என்ன நேர்ந்திருக்கும்! அதைக் கொஞ்சம் நினைத்துப் பார்" என்று புத்தி சொன்னார் டாக்டர்.

—'ஜோயி ஆடம்ஸ் ஜோக் புக்'

பெயர் என்ன?

ஆம்புலன்ஸ் அதிகாரி: உன் பெயர் என்ன? நிகழ்ந்ததென்ன என்று அவளுக்குச் சொல்லியனுப்புகிறேன்.

காயமடைந்த மனிதன்: என் பெயர் அவளுக்குத் தெரியும்.

—'க்ரோனேஸ்', க்ரீஸ்.

மாறிய பட்டணம்

மாக்னஸ்

வடக்கே பிரபல ஆங்கிலத் தினசரி ஒன்றின் ஆசிரியர் இந்தக் கட்டுரையாளர். அருமையாக ஆங்கிலம் எழுதும் மிகச் சில இந்தியருள் ஒருவர். மதராஸி. சமீபத்தில் சென்னைக்கு இவர் வந்தபோது 'க்ரிக்கட் ஸீஸன்' இல்லை. இப்போது வந்து பார்த்திருந்தால், வேறு விதமாக அதுபற்றி எழுதியிருப்பார்.

பாஷை சம்பந்தப்பட்ட மட்டில் என்னைக் கர்நூலைச் சேர்ந்தவன் என்கிறார்கள். ஆனால், நான் ஒரு மதராஸியாகவே இருந்து வருகிறேன். மதராஸி என்றால் பல வகை மக்களின் பழக்க வழக்கங்கள் சேர்ந்த கதம்பப் பிராணி. இப்போது நான் மதராஸுக்கு வந்து பார்த்தபோது, அதன் தோற்றத்தில் சொற்ப மாறுதல் ஏற்பட்டிருக்கிறது; மக்களின் இயல்பிலோ பெரிய மாறுதல் ஏற்பட்டிருக்கிறது. தென்னாட்டில் எப்போதுமே பெரிதும் அமைதி நிலவுவது வழக்கம், வேறிடங்களில் நிகழ்ந்த புரட்சிகளால், இந்தத் தென்னாட்டிலும் அமைதி குலைய ஆரம்பித்திருப்பது போல் தோன்றுகிறது.

சென்னையில் எங்கே பார்த்தாலும் ஒரே தாடி மயமாயிருக்கிறது. பழைய நாட்களில் ராமசாமி நாயக்கருக்கே தாடி இல்லை; பட்டினத்தாருக்குக் கூட (ஸினிமாப் படத்தில் தான்) ஒரு சிறு தாடியே இருந்தது. தென்னிந்தியச் சாப்பாடு என்றால், எனக்கு மிகுந்த பிரியம். மவுண்ட் ரோட்டில் பிரபல ஓட்டல் ஒன்றுக்குள் உட்கார்ந்து சாப்பிட்டுக்கொண்டிருந்தேன். எனக்கு எதிரே நரைத்த தாடிக்காரர் ஒருவர், அந்தத் தாடியிலிருந்து சாம்பார் ஒழுக, உட்கார்ந்துகொண்டிருந்தார். அவரைப் பார்த்தால் என்னவோ இமாலயத்துப் பயங்கரப் பனி



மூலம்: சங்கர்ஸ் வீக்லி (ஆங்கிலம்: 27-12-'53), புது டில்லி.

மனிதனைப் போல் இருந்தார். எழுந்து வெளியே வந்தபோது, கன்னங்கரிய மற்றொரு தாடிக் காரர் கடைக்குக் கடை நட மாடிக்கொண் டிருந்தார். 'கலைஞ ரின் காதல்'பற்றி எழுதிய காலத் தில் பெர்னார்டு ஷா இருந்தது மாதிரி அவர் தோன்றினார். இன்னும் சில கஜ தூரம் தள்ளிச் சென்றபோது, மூன்றாவது தாடி தென்பட்டது. ஆசாமி கந்த லுடுத்த பிச்சைக்காரர் என்று புலப்பட்டது. சென்னையிலிருந்த க்ஷவர ஸலூன்கள் என்ன ஆயின? பாகிஸ்தானுக்குப் போய்விட்ட னவா? அல்லது ஸெஸில் டி மில்லி படங்களைப் பார்த்துப் பார்த்துச் சென்னைக்கு ரோம நாகரிகம் வந்துவிட்டதோ?

இதெல்லாம் நடந்தது ரவுண்ட் டாணவில். ஆனால், அங்கே இப் போது ரவுண்ட் டாணா (வட்ட மான போலீஸ் ஸ்டேஷன்) இல்லை. அலங்கோலமான பழைய கடைகளெல்லாம் இருந் தன; ஆனால், ரவுண்ட் டாணா மட்டும் இல்லை!

எங்கே போனாலும் ஔவையார் உணர்ச்சி நிறைந்திருக்கிறது. சுவரொட்டி விளம்பரங்களில் ஒரே ஔவையார் பாட்டுத்தான். கலை உணர்ந்த அறிஞர் ஒவ் வொருவரும் அவசரம் அவசர மாக ஔவையாரைப்பற்றி அறிக் கைகள் விட்டுக்கொண் டிருந்தார் கள்; அவைகளைப் பத்திரிகை களும் விடாமல் பிரசுரித்துக் கொண்டிருந்தன. இவைகளைப் பார்த்தபோது, சென்னையின் முதல் மந்திரி ராஜாஜியா, ஔவையாரா என்று எனக்குச் சந்தேகம் வந்துவிட்டது. பழைய சென்னைக்குச் சுந்தராம்பாளிடம் மோகம்; இப்போது ஔவை யாருக்குத் தசை அடித்திருக்கிறது.

சென்னை ஸினிமா மயமாகி விட்டது. முன்னெல்லாம் தியஸாஃபிக்கல் மணம் கமழும்; இப்போதோ ஹாலிவுட் மணம் கமழ்கிறது. அங்கே இன்று எழு ஸ்டுடியோக்கள் இருக்கின்றன வாம். அத்தனையும் ஒரே ரோடில் குவிந்து கிடக்கின்றன. ஆனால், ப்ரொட்யூஸர், டைரக்டர், காமி ராக்காரர், கதாசிரியர் இவர் களைத்தான் காண முடிகிறது; நட்சத்திரங்களைக் காண முடிய வில்லை. வேண்டுமானால் ஆண் நட்சத்திரங்களைக் காணலாம். எனவே, சென்னை இன்னும் முழுக்க முழுக்க ஹாலிவுட் ஆக வில்லை. ஆயினும், ஸினிமாக் களுக்குக் குறைவில்லை. ஒரு நாள் மாலைக் காட்சியில், ஏராளமான சீமாட்டிகள் விஜயம் செய்திருந்த தைக் கண்டேன். சென்னையில் இப்போது சீமாட்டிகள் அதிகம். முன் நாட்களில் சிலபேர்தான் உண்டு. சீமாட்டிகளின் தொகை யில் மயிலாப்பூரின் பங்கு பெரிது. அவர்களில் சிலர் இப்போது சமூக சேவையில் இறங்கியிருக் கிறார்கள். சென்னை ரானடே ஹால் இன்னும் இருந்துகொண் டிருக்கிறது.

இப்போது சென்னையை நான் அதிகமாய்ப் பார்க்க முடிந்தது. ஏனென்றால், ரிக்ஷாக்களைவிட டாக்ஸிகளே இப்போது அதிக மாய்க் கிடைக்கின்றன. எல்லாம் பெரிய டாக்ஸிகளே. சிறிய டாக்ஸிகளை நாம் தேடத் தேவையே இல்லை. தவிர, பம்பா யைப்போல் சென்னையில் மானே ஜிங் ஏஜென்ஸி ஸிஸ்டம் கிடை யாது. ஆனால், சென்னை டாக்ஸி

டிரைவர்கள் உலகிலேயே சிறந்த தந்திரசாலிகள். முன்னால் ரிக்‌ஷா வாலாக்களின் வழியைப்போலவே இவர்களின் வழியும் எங்கெங்கேயோ சுற்றி வளைத்துக்கொண்டு செல்கிறது. ஒரு காலத்தில் நீல் சிலை நின்றதே; அங்கிருந்து நீங்கள் கோட்டைக்குப் புறப்படுவதாக வைத்துக்கொள்ளுங்கள். டாக்ஸி டிரைவர் வண்டியைச் சிந்தாதிரிப்பேட்டை வழியாக ஓட்டிச் சென்று, நுங்கம்பாக்கம் போய், அங்கிருந்து ஜெமினி ஸ்டுடியோவுக்கு வந்து, பிறகு எலியட்ஸ் ரோடில் புகுந்து, பீச்சை அடைந்து, உல்லாஸமாகக் கடற்கரை ஓரத்திலே காற்றை வாங்கிக்கொண்டு உங்களைக் கோட்டையில் கொண்டு போய்ச் சேர்க்கிறான். ஆனால் இத்தனைக்கும் மூன்று ரூபாய்தான் சத்தம் வாங்கிக்கொள்கிறான்.

பழைய சர்க்கார் மாளிகை இப்போது கவர்னர்களுக்கோ, சட்டசபை அங்கத்தினர்களுக்கோ ஏற்றதாயில்லை; மந்திரிகளுக்குத்தான் ஏற்றதாயிருக்கிறது. பாங்க்வெட்டிங் ஹாலில் முன்னெல்லாம் கோஷன்களையும் ஸ்டான்லீக்களையுந்தான் சந்திக்க முடியும். இப்போது அங்கே ராஜாஜியைச் சந்தித்தது சந்தோஷமாயிருந்தது. ஆனால், அங்கே இருந்த படங்களுக்குள் நன்றாயிருந்தவை கவர்னர்களின் படங்களே. காந்தியின் படம் பிக்காஸோ தீட்டிய ஓவியம் மாதிரி கோரமாயிருந்தது. கார்ட்டூன்காரர் தம்முடைய கேலிச் சித்திரத்தை வரைவதைக் கண்டு ராஜாஜி சந்தோஷப்படலாம்; ஆனால், அதற்கு ஓர் ஓவியர் எதற்காக?

சென்னைக் கடற்கரை முன் போலத்தான் இருக்கிறது. அங்கே நீந்தல் குட்டை ஒன்று இருக்கிறது. ஆனால், கோடைக்காலத்தில்கூட அதில் யாரும் நீந்துவதில்லை. அக்வேரியம் போய்விட்டது. அமெரிக்க ரெஸ்டாரண்ட் போன்ற ஒன்று இருக்கிறது. அதில் திமிதிமி என்று ஒரே ஜனக் கும்பலாயிருக்கிறது. அவர்களில் சிலர் ஸினிமா நட்சத்திரங்கள் போலும், மற்றவர் ஸினிமா நட்சத்திரங்களைத் தேடி வரும் ஆடவர் போலும் காட்சியளிக்கிறார்கள். காதலர் பாதை பாழடைந்து கிடக்கிறது.

தான் புழங்கிய பழைய இடங்களைத் திரும்பியும் பார்ப்பது யாருக்கும் கொஞ்சம் பரபரப்புத் தரும். ஆனால், என் காலேஜின் பெரிய ஹால்களெல்லாம் இப்போது மிகவும் குறுகிச் சிறுத்தது போல் தோன்றின. பழைய மாடிப்படியையும் பௌவல் சிலையையும் காணவில்லை. கோகலே ஹாலும் இப்படித்தான் சிறுத்துத் தோன்றியது. அதில் தொங்கிய படங்களை மாற்றியிருக்கிறார்கள். பெரியவர்களுக்கிடையில் சின்னவர்கள் புகுந்திருக்கிறார்கள். ஜின்னா மறைந்துவிட்டார். ஹைக்கோர்ட்டைப் போய்ப் பார்க்க எனக்கு இஷ்டமில்லை. அது எங்கேயாவது லிலிபுட் நகர மாஜிஸ்ட்ரேட் கோர்ட் மாதிரி சிறுத்துப் போயிருக்குமோ என்று பயமாயிருந்தது.

அடையாற்றைப்பற்றிக் கேட்கிறீர்களா? அங்கே இருந்த வாலிப தியாஸஃபிஸ்டுகளெல்லாம் இப்போது அடையாளமே தெரியாதபடி கிழடு தட்டிவிட்டார்கள். ஆனால் புதிய ஆட்களைச் சேர்த்துக்

கொண்டதாய்த் தெரியவில்லை. எலியட் பீச் சுருமீன்கூடச் சலித்துப் போனதுபோல் தோன்றியது.

என்ருலும், சென்னை என்ருல் சென்னைதான். சிந்தாதிரிப் பேட்டை லிட்டரரி சங்கத்தில் கல்விமான்களின் இங்கிலீஷ் பிரசங்கங்களுக்குக் குறைவில்லை. ராமகிருஷ்ண மிஷன், குஷ்ட ரோக நிலையங்கள், விதவைகள் நிலையங்கள், பெண்களை மீட்கும் காரியம் இவைகளிலாவது கவர்னருக்கு இப்போது பூர்ண வேலை இருக்கிறது. இன்றும் பிரசங்கிகளும் கேட்பவர்களும் இருக்கிருர்கள். க்ரிக்கட் ஆட்டத்தில் சிரத்தை குறைந்திருக்கிறது. எம். ஸி. ஸி. மைதானம் முன்ஷியின் காடு மாதிரி இருக்கிறது. மல்யுத்தத்தில் மிகுந்த சிரத்தை தோன்றியிருக்கிறது. சாப்பாட்டு ருசி குறையவில்லை. யாரும் இப்போது ஒட்டலில் அரை கப் காபி கேட்பதில்லை. புஸ்தகக் கடைகளில் எல்லாம் ஏராளமான புஸ்தகங்கள் இருக்கின்றன; வாங்குகிறவர் மாத்திரம் இல்லை. டிராம் போய்விட்டது. ஆனுலும் சந்தடி குறையவில்லை. பெயர் பெற்ற கோயமுத்தூர் கிருஷ்ணையர் ஹோட்டலில் இன்னமும் பாதம் ஹல்வாவைத் தங்கம் நிறுப்பது போல்தான் நிறுக்கிருர்கள்.

சண்டை தொடங்குமுன்

ஓர் ஐரிஷ்காரன் அவசரம் அவசரமாக ஒரு மதுக் கடைக்குள் புகுந்தான்.

"சண்டை தொடங்குமுன் ஒரு புட்டி போடு" என்ருன்.

கடைக்காரன் அப்படியே போட்டான்.

அதைக் குடித்துவிட்டு, "சண்டை தொடங்குமுன் இன்னொரு புட்டி போடு" என்ருன் ஐரிஷ்காரன்.

கடைக்காரன் அப்படியே போட்டுக்கொண்டே, "அது என்ன சண்டை?" என்று கேட்டான்.

புட்டியைக் குடித்துப் பாதி காலி செய்தபடி, "என்னிடம் உனக்குக் கொடுக்கத் தம்படி காசில்லை; அதுதான்" என்ருன் ஐரிஷ்காரன்.

—'ஃபெமினு', தென்னுப்பிரிக்கா.

பழைய முகம்

நகர ஒட்டல் ஒன்றில் ஒரு யாத்திரிகர் மற்ருெருவரைப் பார்த்து, "போன வருஷம் உங்களை இங்கே நான் பார்த்தேன் போல் இருக்கிறதே" என்ருர்.

"இருக்கலாம்; என்னை அடையாளம் கண்டு கொண்டீர்களா?"

"இல்லை; உங்கள் குடையை அடையாளம் கண்டு கொண்டேன்."

"அப்போது இந்தக் குடை என்னிடம் இல்லையே!"

"இல்லைதான். என்னிடம் இருந்தது."

—'டாமெனிக்கா டெல்காரீர்', மிலான்.

இப்போதெல்லாம் பெற்றோர்களின் கட்டளையை மண விஷயத்தில் ஏற்க மறுக்கிறாள் -

ஜப்பானியப் பெண்

எஸ். உனேடா

'விவாகம் என்பதைப்பற்றித் தற்காலத்து ஜப்பானியப் பெண்களின் அபிப்பிராயம் என்ன?'—இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லுவது சிரமந்தான். சமீபத்தில்தான் ஜப்பானியப்பெண்கள் விவாகத்தைப்பற்றித் தீவிரமாக ஆலோசித்து வருகிறார்கள்.

சென்ற சில வருஷங்களாக ஜப்பானில் பலவிதத்தில் பெரிய மாறுதல் நிகழ்ந்து வருகிறது. சமூகத்தில் சூழ்நிலை மாற மாற ஜப்பானிய மக்களின் லட்சியங்களும் உணர்ச்சிகளும் மாறி வருவது இயல்புதானே? புதிய சமூகச் சூழ்நிலையில் ஜப்பானியப் பெண்கள் விவாகம் சம்பந்தமாக இன்னும் ஒரு முடிவுக்கும் வரவில்லை. அவர்கள் பலவிதமாக அபிப்பிராயப் படுகிறார்கள்.

முன்னெல்லாம் விவாகம் என்றால், குடும்பத்தைப் பொறுத்த விஷயமாக இருந்தது. இப்போது அப்படியில்லை; அவரவர் சொந்த விஷயமாகிவிட்டது. ஜப்பானிய வாலிபர்களும் பெண்களும் இப்போதெல்லாம் பெற்றோர்கள் சொல்வதை இந்த விஷயத்தில் ஏற்றுக்கொள்வதில்லை; தங்கள் அந்தரங்க விஷயமாக இதை அவர்கள் கருதி வருகிறார்கள். நகரத்தில் ஹைஸ்கூலில் படித்துத் தேர்ந்த ஒரு பெண் என்றால் சற்று அறிவாளியாகத்தானே இருப்பாள்; அவள் தனக்குப் பிடித்தவனைத்தான் மணக்கிறாள். பெற்றோர்கள் இதற்குச் சம்மதிக்காவிட்டாலும் அவள் அதைப் பிரமாதமாகப் பாராட்டுவதில்லை.

30 ஆண்டுகளுக்கு முன் ஜப்பானில் பெண்கள் என்றால் வீடே கதி என்ற நிலையில் இருந்தார்கள். முதல் உலக மகாயுத்தத்துக்குப் பின் ஹைஸ்கூலில் படித்த பெண்கள் சற்று வெளியில் போய்ப் பழகலானார்கள். முன்னெல்லாம் பெற்றோர்கள் தக்க வரன் பார்த்து மணம் செய்து வைக்கும்வரை, பூவால் அலங்காரம் செய்தல், பக்தியாக டீ தயாரித்தல்,

மூலம்: ஜப்பான் எஸ்டர்டே அண்டு டுடே (ஆங்கிலம்), டோக்கியோ, ஜப்பான்.

தையல் வேலை இந்த மாதிரி ஏதாவது காரியங்களில் ஜப்பானியப் பெண்கள் ஈடுபட்டிருப்பார்கள்.

ஆனல் முதல் உலக மகாயுத்தத்தினல் பொருளாதாரக் குழப்பமும், 1922-இல் பெரிய பூகம்பமும் ஏற்படவே, ஜப்பானியப் பெண்கள் கடைகளிலும் ஆபீஸ்களிலும் வேலை செய்து பிழைக்க வேண்டியதாயிற்று. இன்று லட்சக்கணக்கான பெண்கள் ஜப்பானிலுள்ள பெரிய நகரங்களில் வெவ்வேறு வேலைகளில் ஈடுபட்டிருக்கிருர்கள். பெண் குமாஸ்தாக்களோ ஊழியர்களோ இல்லாத வியாபாரஸ்தலமே இல்லை என்றுகூடச் சொல்லலாம். இதனல் அவர்கள் பல வாலிபர்களைச் சந்தித்துப் பழக நேரிடுகிறது.

உள்ளூர் வெளியூர் ஸினிமாப் படங்கள், பத்திரிகைகள் இவையும் சேர்ந்தால் கேட்பானேன்? பழைய கருத்துக்கள் மாறிப் புதிய கருத்துக்களுக்கு இடம் ஏற்பட்டு வருகிறது. அதுவும் பெண்கள் ஆண்களோடு பழகவும் தம் விவாக சம்பந்தமாக எப்படியாவது ஒரு முடிவுக்கு வருவதற்கும் சினிமாவும் பத்திரிகையுமே முக்கிய காரணம். பழைய நிலையையும் புதிய அநுபவத்தையும் கொண்டு தங்களுக்குப் பிடித்தவர்களையே மணப்பது என்ற உறுதிக்கு வந்துவிடுகிருர்கள்.

இரண்டாம் உலக யுத்தத்துக்கு முன் விவாகத்தைப்பற்றி அவர்கள் அபிப்பிராயம் என்ன என்று பெண்கள் பத்திரிகை ஒன்றில் கேட்டிருந்தார்கள். முக்கியமாக, பள்ளிக்கூடத்தில் படிக்கும் பெண்கள், உயர்தரக் கல்வி கற்ற பெண்கள் இவர்களை உத்தேசித்துத்தான் இப்படிக் கேட்டிருந்தார்கள்:

1. உங்களுக்குத் தெரிந்த பெண் எவளாவது உண்மையில் காதலுக்காகவே ஒருவனை மணந்துகொண்டதுண்டா?

2. உங்கள் தங்கைக்கும் பெற்றேருக்கும், அவள் காதல் மணம் செய்துகொள்ளும் விஷயமாய்ச் சச்சரவு ஏற்பட்டால் நீங்கள் பெற்றேருக்கு எதிராக அவள் பக்கம் பரிந்து பேசுவீர்களா?

3. நீங்கள் ஒரு பெண்ணுக்குத் தாயாக இருக்கிறீர்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள். அவள் புருஷன் மோசமான ஆசாமியாக இருந்தாலும், சாகுமளவும் அவனை அண்டியே உங்கள் பெண் வாழ்ந்து தீரவேண்டும் என்பீர்களா?

15,000 பெண்களுக்குமேல் இதற்குப் பதில் எழுதியிருந்தார்கள். முதல் கேள்விக்கு 100-க்குச் சுமார் 44 பேர், "எங்கள் சிநேகிதிகள் சிலர் காதல் மணம் செய்துகொண்டிருக்கிருர்கள்" என்று பதில் அளித்திருந்தார்கள். 100-க்குச் சுமார் 42 பேர் இரண்டாம் கேள்விக்கு, "தங்கைக்கும் பெற்றேருக்கும், காதல் மணம் பற்றிச் சச்சரவு ஏற்பட்டால் எங்கள் தங்கையின் பக்கமாகத்தான் பேசுவோம்" என்று எழுதியிருந்தார்கள். மூன்ரும் கேள்விக்குப் பொதுவாக எல்லாருமே, "அந்தமாதிரி புருஷனேடு ஒரு நாளும் இருக்கச் சம்மதிக்க மாட்டோம்" என்று அபிப்பிராயம் தெரிவித்திருந்தார்கள். 100-க்குச் சுமார் 68 பேர், "உடனே விவாகரத்து செய்துகொள்ளும்படிதான் எங்கள் பெண்களுக்குப் புத்தி சொல்வோம்" என்று பதில் எழுதியிருந்தார்கள்.

இது நடந்து 15 ஆண்டுகளுக்கு மேல் ஆகின்றன. இப்போதெல்லாம் ஜப்பானியப் பெண்கள் தங்களுக்குப் பிடித்த வாலிபர்களை மணம் செய்துகொள்வது சர்வசகஜமாகிவிட்டது. ஏதோ சில பேரின் விருப்பம் நிறைவேறாமல் போனாலும் மொத்தத்தில் ஜப்பானியப் பெண்களுக்கெல்லாம் காதல் மணந்தான் பிடித்திருக்கிறது. நினைத்தபடியெல்லாம் யாரை வேண்டுமானாலும் காதல் மணம் செய்துகொள்ளலாம் என்று சொல்லும்போது, கொஞ்ச காலத்துக்கு முன் பெண்களுக்குப் பரம திருப்தியாகத்தான் இருந்தது; இதனால் நீடித்த இன்பம் அநுபவிக்கலாம் என்று கூட நம்பி வந்தார்கள். ஆனால் சொந்த அநுபவத்திலிருந்தும், மற்றச் சிநேகிதிகளின் மண வாழ்க்கையிலிருந்தும், அன்றாடம் பத்திரிகைகளில் காணும் செய்திகளிலிருந்தும் ஒன்று தெரிந்து கொண்டிருக்கிறார்கள்: காதல் மணம் செய்துகொண்டாலும் பெண்கள் மிகவும் பொறுமையோடு இருந்து எவ்வளவோ கஷ்டங்களை அநுபவித்தால்தான் தாம்பத்திய வாழ்க்கையில் வெற்றி காண முடியும் என்பதைத்தான்.

பிரசுரிக்காத கட்டுரை

சீனாவில் பத்திரிகாசிரியர் ஒரு கட்டுரையைத் திருப்புகையில் கட்டுரையாளருக்கு எழுதும் கடிதத்தின் வாசகம் இது:

"சந்திர சூரியர் வம்சத்துப் புகழ் மிக்க தோன்றலே,

"தங்கள் ஊழியன் இதோ சாஷ்டாங்கமாய் அடிபணிகிறேன்! தங்களுக்கு விண்ணப்பித்து வாழ அருள் புரியும்படி, தங்களை மண்டியிட்டுப் பணிந்து வேண்டிக்கொள்கிறேன். தங்களுடைய மாட்சி மிக்க கையெழுத்துப் பிரதி கருணை கூர்ந்து எனக்கு ஒளி வீசியது. பரவசமாய் அதைப் படித்தேன். என் முன் பிதாக்கள்மீது ஆணையாகச் சொல்கிறேன்: இவ்வளவு ஞானம், உருக்கம், மகோன்னதக் கருத்து இவை அடங்கிய கட்டுரையை இதற்கு முன் நான் பார்த்ததேயில்லை. பயந்து, உடல் நடுங்கியபடி இந்தக் கட்டுரையைத் திருப்பி அனுப்புகிறேன். தாங்கள் அனுப்பிய இந்தப் பொக்கிஷத்தை நான் பிரசுரித்தேனானால், இதே தரத்துக்குக் குறைந்த எந்தக் கட்டுரையையும் இனிப் பிரசுரிக்கக் கூடாதென்று சக்கரவர்த்தி உத்தரவு போட்டுவிடுவார். இன்று இலக்கியமுள்ள நிலையில், தங்கள் கட்டுரைக்கு இணையான மற்றொன்று தோன்ற இன்னும் பதினாயிரம் வருஷம் ஆகும் என்பதை நான் அறிவேன். ஆகவே, வெகு பத்திரமான சிப்பந்திகள் மூலம் தங்கள் கட்டுரையைத் திருப்பி அனுப்புகிறேன்.

"தங்களைப் பதினாயிரந் தடவை மன்னிப்புக் கேட்டுக் கொள்ளுகிறேன். இதோ தங்கள் பாதம் என் சிரம்படப் பணிகிறேன். நான் என்ன, ஒரு தூசிக்குச் சமம்.

"தங்கள் ஊழியன்,

"வாங் சின், (ஆசிரியன்)."

கல்லோ வெண்கலமோ இல்லை; அத்தனையும் புராதன மரச்சிற்பங்கள்.

மரச்சிற்ப ஆலயம்

★

கண்டியில் இருக்கும் சரித்திரப் பெருமைவாய்ந்த அத்தாணி மண்டபத்தைப்பற்றி அநேகர் தெரிந்துகொண்டிருக்கிறார்கள். அநேக யாத்திரிகர்கள் அதைப் பார்த்தும் இருக்கிறார்கள். சித்திர வேலைப்பாடுள்ள அதன் தூண்களும், உயர்ந்த கூரையும் மிகவும் அழகாக அமைந்திருக்கின்றன. ஆனால் கம்பளையிலுள்ள எம்பெக்கே என்னுமிடத்தில் இதே போல் சிங்களக் கலைக்கும், கட்டிடக் கலைக்கும் உதாரணமாக விளங்கும் இன்னுமொரு புராதனக் கட்டிடம் இருக்கிறதென்பது ஒரு சிலருக்கே தெரியும். இதைப் பார்த்தவரும் மிகச் சிலரே. எம்பெக்கே தேவாலயம் கண்டிப் பாதைக்கப்பால் தவுலகலை மலைக்கு அருகே இருக்கிறது. கதிர்காமத் தெய்வம் என்று புகழ் பெற்ற சிங்கள யுத்தக் கடவுளான கார்த்திகேயருக்கே இந்தத் தேவாலயம் எழுப்பப் பெற்றது. பல முக்கிய அம்சங்களை உடையதாயிருப்பதால் இது கலைத்துறையில் அதி உன்னத இடத்தைப் பெறுகிறது. இதன் மரத் தூண்கள் புராதன காலத்து மரச் சிற்பிகளின் வேலைத் திறமையை எடுத்துக் காட்டுகின்றன. கண்டியிலுள்ள அத்தாணி மண்டபத்தைப் பின்பற்றியே இதை அமைத்திருக்கிறார்கள். இதிலுள்ள முரசறை மண்டபம் சிங்களக் கலைக்கு ஓர் உதாரணமாக விளங்குகிறது. புராதன காலத்து மரச் சிற்பியின் வேலைப்பாட்டை எம்பெக்கே தேவாலயம் ஒரு சிறிது காட்டுகிறது.

கம்பளையிலிருந்து அரசாண்ட மூன்றும் விக்கிரமபாகு மன்னன் இதை அமைத்ததாகச் சரித்திரம்

நாட்டியக்காரி

சொல்கிறது. இந்த அரசனின் காலத்தில் கம்பளை மிகவும் பிரசித்தி பெற்று விளங்கியது. கோட்டை கொத்தளங்களோடு சிறிது காலம் பிரகாசித்த கம்பளை ராஜதானி 16-ஆம் நூற்றாண்டில் வீழ்ச்சியுற்றது. கம்பளைக் காலத்திலேயே புதிய லங்காதிலகையையும், கடலாதெனி என்ற இடத்தி

மூலம்: ஸ்ரீலங்கா (தமிழ்: ஜூன்'53), கொழும்பு-1., ஸிலோன்.

லுள்ள சுதர்மதிலகை விகாரையை யும் எழுப்பியிருக்கிறார்கள்.

தேவாலயத்தோடு சேராது நிற்கும் தோரண வாசலின் பிரதானப் பிரிவு பல முக்கிய அம்சங்களைக் கொண்டிருக்கிறது. தோரண வாசலில் பத்துத் தூண்கள் இருக்கின்றன. தோரண வாசலின் நடுச் சட்டத்தில் மிகவும் அழகிய செதுக்கு வேலைகள் தென்படுகின்றன. அதில் உள்ள அலங்காரச் சித்திரங்கள் வாழ்க்கையின் உண்மை நிலையையும் புராணக் கதைகளை யும் காட்டுகின்றன. இந்தச் சித்திரங்களில் மனித உருவங்களும் விலங்குகளும் பூ வேலைப்பாடுகளும் இலைகளும் தென்படுகின்றன. பூ வேலைப்பாட்டில் சூரியனும் தாமரையும் அமைகின்றன. சிங்கம், கேசர சிங்கம், அன்னம் ஆகிய பிராணிகளையும் மனித உருவங்களையும் மிகவும் அழகாகச் செதுக்கியிருக்கிறார்கள். மனித சிற்பங்களில் ஒன்று இடது கையில் சதுரமான கேடயமும் வலது கையில் குத்துவாளும் கொண்டு நிற்கும் ஒரு வீரனின் உருவம். இன்னும் ஒன்றில் இரண்டு பெண்களின் உருவம் இருக்கிறது. வேறொன்றில் தாய் ஒருத்தி சிறு ஆசனமொன்றில் உட்கார்ந்து குழந்தைக்குப் பாலூட்டுகிறாள். பக்கத்தில் ஒரு சிறுவன் நின்று கையால் அவளுடைய இடது தோளைத் தொடுகிறான்.

புராணக் கதை சம்பந்தமான வேலைப்பாடுகளில். மனித முகமும் செதில்கள் நிறைந்த உடம்புமுள்ள 'செரபண்டிய' என்ற பறவை, இரு தலைப் பட்சி, கஜசிங்கம், தாமரையில் வீற்றிருக்கும் தேவதை, நாரி லதை உருவம், பைரவ உருவம்

குதிரை வீரன்

இவைகளையெல்லாம் செதுக்கியிருக்கிறார்கள்.

எம்பெக்கே தேவாலயத்திலுள்ள முரசு அல்லது பறையறை மண்டபம் இயற்கை அழகு வாய்ந்ததாகத் திகழ்கிறது. வாசலின் முன் 4 தூண்கள்; பக்கத்துக்கு இரண்டு தூண்களாக அமைந்திருக்கின்றன. 2 அடி தூரத்தில் 6 ஜோடி தூண்கள் நீண்ட சாலையைத் தாங்குகின்றன. இங்குள்ள தூண்களையும் உத்திரங்களையும் மிகவும் அழகாகச் செதுக்கியிருக்கிறார்கள். இவைகளில் இரண்டு தூண்கள் பிற்காலத்தில் அமைந்தவை எனத் தெரிகிறது.

புதுமையான வேலைப்பாடுகள் நிறைந்த எம்பெக்கே தேவாலயத்திலுள்ள தோரண வாசலைத் தவிர, மற்றும் சில சிற்பங்கள் நம் கவனத்தைக் கவர்கின்றன. செதுக்கியிருக்கும் ஆண் உருவங்களில் ஒன்று குதிரைமீது அமர்ந்து இடது கையில் சாட்டை ஏந்தி இருக்கும் வீரன். இன்னுமொரு போர்வீரன் வலது கையில் எருமைத் தோல் கேடயமும், இடது கையில் நீண்ட

வாளும் ஏந்தி நிற்கிறான். வேறோர் ஆண் உருவம் மிகவும் விசித்திரமாக அமைந்திருக்கிறது. இரண்டு மல்லர்களின் உருவம் ஒன்றில் இருக்கிறது. இந்த உருவங்களெல்லாம், சிறந்த மரச் சிற்பங்களாகத் திகழ்கின்றன.

கம்பளையிலிருந்த விக்கிரம பாகு மன்னனின் அரண்மனையிலிருந்து இங்கே கொண்டு வரப்பெற்றது என்று ஒரு சட்டத்தைக் கருதுகிறார்கள். கோலாட்டம் அடிக்கும் பெண்களின் உருவம் அதில் செதுக்கப் பெற்றிருக்கிறது.

புத்த விகாரைக்குப் பக்கத்தில் இந்துக் கோயில் ஒன்று இருக்கிறது. மூலஸ்தானம் இரண்டடுக்குக் கட்டிடம். உச்சியில் பொன் முலாம் பூசிய முடி ஒன்று இருக்கிறது. மூலஸ்தானத்தில் விக்கிரகங்கள் வைத்திருக்கிறார்கள். இந்தக் கோயில் ஒரு சமயம் கறையான் அரித்து அழியும் தறுவாயில் இருந்தது. கடந்த உலக யுத்தத்தின்போது புதை பொருள் ஆராய்ச்சி இலாகாதார் பலவிதக் கஷ்டங்களுக்கிடையே இதனைச் செப்பனிட்டார்கள்.

எம்பெக்கே தேவாலயத்தைப் போல் புராதன மரச் சிற்ப வேலைப்பாடுகளை எடுத்துக் காட்டும் இன்னும் சில கட்டிடங்கள் இலங்கையில் எஞ்சியிருக்கின்றன. ஒன்று தேவனகலைக் கற்பாறையின் உச்சியில் இருக்கிறது. மற்றது ஹெட்டிபொலை என்ற இடத்துக்குப் பக்கத்தில் பந்துவாசநுவரையில் இருக்கிறது.

சிங்களவர் சிறந்த மரச் சிற்பிகளாக விளங்கினார்கள்; ஒல்லாந்தர் காலத்தில், அவர்களுடைய மேல் பார்வையின்கீழ் மொறட்டுவைச் சிங்களத் தச்சர்கள் மிகவும் அழகான வேலைப்பாடு செய்திருக்கிறார்கள். கை வசம் இருக்கும் புராதன மரப் பொருள்களின் காலம் 16-ஆம் நூற்றாண்டுக்கு முற்படாததாம். இருந்தாலும் கலைஞரின் கலைத்திறமையைக் காட்டக் கல் எவ்வளவு தூரம் உதவியதோ, அவ்வளவு தூரம் மரமும் உதவியிருக்கிறது.

பல நூற்றாண்டுகளாக வெயிலையும் மழையையும் எதிர்த்து நின்று சிற்பியின் கலைத்திறனை எடுத்துக் காட்டும் திறமை வாய்ந்த கல்லை விட்டு, சிறிது காலத்துக்குள் இயற்கையின் கோபதாபங்களுக்காளாகி நாசமடையும் மரத்தைக் கலைஞன் ஏன் தெரிந்தெடுத்தான்? காரணம் இதுதான்: பெரும்பாலான மரக் கட்டிடங்கள் அரசர்களின் கவனத்தைக் கவராத பிரதேசங்களிலேயே தென்படுகின்றன. நாட்டில் அமைதி நிலவாத காலங்களில் பெரிய வேலைகளில் இறங்காமல் கலைஞர்கள் மர வேலைகளில் கவனம் செலுத்தியிருக்கலாம். இன்னும் நாட்டின் பல பகுதிகள் மரம் அடர்ந்த காடுகளாக இருந்தாலும், சில வகை மரங்கள் மர வேலைக்குத் தேவையான நேரத்தில் எளிதில் கிடைத்தாலும் எம்பெக்கே தேவாலயமும், கண்டி அத்தாணிமண்டபமும் மரங்களால் அமைக்கப் பெற்றிருக்கலாம்.

பெருங் காரியங்களைப் பெருந் தியாகத்தாலே செய்ய முடியும்.

—விவேகானந்தர்

முனிவரைப் போன்ற உத்தமர்கள் பிற துறைகளிலும் உண்டு.

விஞ்ஞானி அளித்த மந்திரம்

வினோபா பாவே

நடந்தே யாத்திரை செய்வதனால் எவ்வளவோ நன்மைகள் விளைகின்றன. அப்போது பல பெரியோர்களைத் தரிசிக்க முடிகிறதே, அது ஒரு லாபம்; அன்பர்களைக் கண்டு அளவளாவ முடிவது இன்னொரு லாபம். இப்படி நம்மைக் காண வரும் அன்பர்கள் தங்கள் அன்பின் சின்னமாக அவரவர்களுக்குக் கையில் கிடைத்த பொருள்களை அளித்துக் கொண்டே இருக்கிறார்கள். க்ஷய ரோகத்துக்குச் சிகிச்சை நடக்கும் ஓர் ஆஸ்பத்திரியின் வழியே நாங்கள் சென்றபொழுது அங்கே வேலை பார்த்து வந்த ஐரோப்பியக் கனவானொருவர் அச்சடித்த கார்டு ஒன்றை அன்பளிப்பாகக் கொடுத்தார். நான் அந்தக் கார்டை என் பாராயணத்துக்குரிய உபநிஷத நூலினுள் பத்திரமாக வைத்துக் கொண்டேன். அதில் பிரெஞ்சு விஞ்ஞானி லூயி பாஸ்டருடைய சித்திரம் அச்சிட்டிருந்தது. சித்திரத்தின் அடியில் பிரெஞ்சு, ஹிந்தி, ஆங்கிலம் ஆகிய மூன்று பாஷைகளிலும் பாஸ்டரின் ஒரு வாக்கியம் பொறித்திருந்தது. பாஸ்டரின் சொந்த பாஷை பிரெஞ்சு. ஹிந்தியும் ஆங்கிலமும் அதன் மொழிபெயர்ப்பு. ஹிந்தியில் இருந்த மொழிபெயர்ப்பு இது:

'உங்கள் கருத்தென்னவென்றோ, உங்கள் மதம் என்னவென்றோ நான் விசாரிக்கவில்லை. உங்களுக்குள்ள சிரமங்கள் எவை யென்றே அறிய விரும்புகிறேன்.'



லூயி பாஸ்டர்

பாஸ்டர் 1895-இல் இறந்தார். நான் பிறந்த வருஷமும் அதுவே. ஆகையால், எனக்கு அந்த வருஷம் நினைவில் இருந்து வருகிறது. அது நிகழ்ந்து ஏறக்குறைய அறுபது வருஷங்கள் ஆகின்றன. இந்த அறுபது வருஷங்களுக்குள் உலகில் கோடிக்கணக்கான நோயாளிகள் கடவுள் பெயரைப்போல் பாஸ்டரின் பெயரைச் சொல்லி வந்திருக்கிறார்கள். பாஸ்டர் ஸ்தாபனங்கள் எல்லா நாடுகளிலும் தோன்றியிருப்பதோடு, 'பாஸ்டர் முறையில் சுத்தி செய்தல்' (பாஸ்டரைஸ்) என்ற சொல் உலகின் பல பாஷைகளிலும் வழக்கத்தில் வந்துவிட்டது.

மூலம்: ஸர்வோதயம் (தமிழ்: ஜனவரி '54), தேவ்ஜி காலனி, திருப்பூர்.

துன்புற்ற உலகத்துக்குப் பாஸ்டரின் சோதனைகளினால் பேருதவி கிட்டி வந்திருக்கிறது. இவ்வளவு பெரிய பணியைச் செய்திருந்தும் பணிவே உருவெடுத்தது போல் இருந்தார் அவர். நான் அவரை விஞ்ஞான யுகம் தோற்றுவித்த மகாபுருஷரென்றே கருதுகிறேன். ஒரு சமயம் பிரான்ஸ் தேசத்தின் தலை சிறந்த மனிதர் மூன்று பேரைக் குறிப்பிடும்படி பிரெஞ்சு மக்களிடம் கேட்டார்கள். பெரும்பான்மையோர் முதலாவதாகப் பாஸ்டரின் பெயரைக் குறிப்பிட்டுவிட்டு, இரண்டாவது ஸ்தானத்தை இலக்கியப் பெரியாரான விக்டர் ஹ்யூகோவுக்கும், மூன்றாவது இடத்தை வீரன் நெப்போலியனுக்கு அளித்தனர்.

தங்கள் கருத்துக்களையும் தாங்கள் அநுஷ்டிக்கும் மதத் தத்துவங்களையும் மற்றவர்கள் ஏற்கச் செய்யவே பலரும் ஆவல் காட்டுகிறார்கள். பாஸ்டருடைய வாக்கோ, "இது ஒரு வீண் ஆவல்" என்று கூறுகிறது. மக்களுக்குக் கருத்தை வழங்குவோனும், மதங்களைத் தோற்றுவிப்போனும் கடவுளே. இந்தச் சக்தி ஆண்டவனிடமே இருப்பதால் அவனே இதைச் செய்துகொள்ளட்டும் என்று விட்டுவிட்டு, நாம் துன்புற்றவர்களின் துன்பத்தை அகற்றப் பாடுபடுவோம், வாருங்கள். அப்போது தான் உலகத்தில் நல்ல கருத்துக்கள் தாமே பரவும்; உண்மையான மதத்தை அனைவரும் தாமே பெறுவார்கள். துன்புற்றோருக்குப் பணி புரிவதே உயர்ந்த கருத்தைக் கொண்டிருப்பதற்கும் உயர்ந்த மதத்தை அநுஷ்டிப்பதற்கும் அடையாளம்.

குளிராயிருந்தால் —

வெதுவெதுப்பான ஓர் அறையிலிருந்து குளிரான வெளியிடத்துக்கு வந்தால், ஆழ மூச்சிழுத்து அப்படியே சிறிது அடக்கிக்கொண்டிருங்கள். இதனால் ரத்தம் உடம்பின் மேற்புறத்துக்கு வரும். ஆரம்பக் குளிரை இது தடுக்கும். சீதோஷ்ண மாறுதலை உடம்பு சகஜமாகச் சமாளித்துக் கொள்ளும் நிலைக்கு வரும் வரையில் வாயை மூடிக்கொண்டிருங்கள்; திறக்காதீர்கள்.

மாரிக்காலக் குளிர் உடம்புக்கு ஒத்துக்கொள்ளாதவர்கள் ஒருவிதப் பயிற்சியால், அதை மாற்றிக்கொள்ளலாம் என்று 'ஜர்னல் அவ் தி அமெரிக்கன் மெடிக்கல் அஸோஸியேஷன்' சொல்லுகிறது. சுலபமான பயிற்சி: 50 டிகிரி ஃபாரன்ஹீட் சூடு உள்ள தண்ணீரில் ஒவ்வொரு நாளும் ஒன்று அல்லது இரண்டு நிமிஷ நேரம் ஒரே ஒரு கையை மட்டும் வைத்திருக்க வேண்டும். இப்படி மூன்று அல்லது நான்கு வாரம் பயின்றால், குளிர் ஒத்துப் போகும் இயல்பு உடலுக்கு உண்டாகிவிடும்.

கிறிஸ்துவபுரி

ஆண்ட்ரியே வர்ணிக்கும் நாடு

உலகம் இன்பமயம் ஆவதற்குப் பல பெரியோர் பல வழிகளைச் சொல்லியிருக்கிறார்கள். சன்மார்க்கத்தையும் உழைப்பையுமே அடிப்படையாகக் கொண்ட ஒரு சமுதாயமே அதற்குச் சிறந்ததெனக் கொண்டு இந்த ஆசிரியர் ஒரு கற்பனை நாட்டைச் சித்திரித்திருக்கிறார். இந்தக் கட்டுரை வரிசையை எழுதி வருபவர் அன்பர் ரா. ஸ்ரீ. தேசிகன்.

1619-ஆம் ஆண்டில் ஆண்ட்ரியே எழுதிய கிறிஸ்துவபுரி என்ற நூல் வெளிவந்தது. கம்பனல்லா (Campanella) எழுதிய பரிதி மாநகர் (The City of the Sun) என்ற புத்தகம் வெளிவந்து 17 ஆண்டுகளுக்குப் பிறகே இந்த நூல் தோன்றியது; அப்படி இருந்தும் 19-ஆம் நூற்றாண்டில் தோன்றிய கற்பனை உலகங்களில் காணும் கருத்துக்களை இதிலும் காண்கிறோம். வெறும் பகற்கனவு காணும் ஒரு லட்சிய புருஷன் எழுதுவது போல இவர் எழுதவில்லை; தாம் செய்த ஏதோ சர்ச்சைகளுக்கு முடிவு கட்டுவதுபோலவே எழுதுகிறார். தஞ்சம் புக விரும்பும் யாவரும் தம்முடைய லட்சிய புரியில் தஞ்சம் புகலாம் என்பதை இவர் ஒரு கடிதத்தின் மூலம் உலகுக்குத் தெரிவிக்கிறார்.

இந்தப் புத்தகம் மோர், கம்பனல்லா முதலியவர் வரைந்த சித்திரங்களைக் காட்டிலும் அதிகமாக மனிதனுடைய உள்ளத்தைக் கவரத் தொடங்கிவிட்டது.

ஆண்ட்ரியே 1586-ஆம் ஆண்டு பிறந்தார். விரிவான படிப்புள்ளவர். பல இடங்களைச் சுற்றிப் பார்த்திருக்கிறார். மறுமலர்ச்சிக் காலத்தில் உலாவிய கருத்துக்களையும் நூல்களையும் நன்கு அறிந்தார். அரிஸ்டாட்டில் கண்ட தர்க்க முறை வலிவிழந்து புது முறைத் தர்க்கம் தோன்றிய காலம் அது. அவர் கலாசாலையில் இருக்கும்போது கல்வித் திட்டத்தைப் பற்றிச் சதா காலமும் சிந்தித்து வந்தார். போதனை முறையிலே தம்முடைய உயர்ந்த கருத்துக்களுக்கு உருக் கொடுக்க முடிந்தது. உபாத்தியாயர் தொழிலைக் குறித்துப் பல நூல்கள் எழுதியிருக்கிறார்.

தாம் ஒரு பாதிரியாக (டீக்கன் என்ற பதவியில்) இவர் அமர்ந்த போது, தம்மைச் சார்ந்தவர்களிடையே தம்முடைய அலுவல்களைத் தொடங்கினார். வேலை செய்து பிழைக்கும் ஜனங்களிடையே இவர் செய்யும் முயற்சிகளின் பலனாக நல்ல நடத்தை பரவியது. அவர்கள் இவருடைய கோயிலைச் சேர்ந்தவர்களாயிருப்பார்கள்; சேராதவர்களாயும் இருப்பார்கள். துணி நெய்யும் தொழிற்சாலைகளிலும் சரி, சாயங்-

தோய்க்கிற தொழில்களில் ஈடுபட்டவர்களிடையேயும் சரி; ஒருவருக்கொருவர் உதவி புரியக் கூடிய ஒரு குழுவை இவர் நிறுவினர். இந்தக் குழுவுக்குப் பணம் வேண்டுமே. இவருடைய இலாகாவைச் சேர்ந்தவர்களும், நண்பர்களும் யாதொரு கட்டாயமும் இன்றிப் பண உதவி செய்து வந்தார்கள். 'கிறிஸ்துவபுரி' (கிறிஸ்டியானோபோலிஸ்) என்ற புத்தகத்தில் இவர் சித்திரித்திருக்கும் கல்வித் திட்டம் மில்டன் முதலியவர்களின் மனத்தைக் கவர்ந்தது.

மோர், கம்பனல்லா இவர்களின் நூல்களை ஆண்ட்ரியே நன்கு படித்திருக்கிறார் என்ற விஷயத்தை எவரும் மறுக்க முடியாது. இவர் வரைந்த சித்திரம் அவைகளின் வெறும் நகலன்று. மேலெழுந்த முறையிலே பார்ப்பவர்களுக்குப் பரிதிமாநகரின் நகல் போல இது தோன்றினாலும், அதற்கும் இதற்கும் அடிப்படையான வித்தியாசங்கள் உண்டு. மற்றக் கற்பனைச் சித்திரங்களில் கிரேக்க மேதாவிகளின் சாயை நிரம்ப அடிக்கும். ஆனால் 'கிறிஸ்துவபுரி' வர்ணிக்கும் எல்லோரும் சகோதரர்கள் என்ற பாவனை, தொழிலின்பால் வைக்கும் மரியாதை, தொழிலுக்கும் குடும்பத்துக்கும் ஏற்பட்டுள்ள முக்கியத்துவம் இவை யாவும் ஜெர்மன் நாட்டில் மத்திய காலத்தில் நிறுவப்பட்ட தொழிற் குழுக்களை (Guilds) நினைவூட்டுகின்றன.

ஜினிவாவில் தாம் அடைந்த நன்மையையும் இவர் குறிக்கிறார்: "ஜினிவாவில் தங்கியபோது நான் கண்ட ஓர் அற்புதமான செய்தியை உங்களுக்குச் சொல்லுகிறேன். ஜனங்களின் நடவடிக்கைகளை வாரந்தோறும் ஆராய்வதற்காக ஓர் இலாகா அங்கே இருக்கிறது. சாபமிடுதல், சூதாடல், தேவைக்குமேல் நுகருதல், சண்டை, விரோதம் இவைகளை அது ஒழித்துவிட்டது. கிறிஸ்துவ மதத்துக்கே எத்தனை பெருமையை அந்த இலாகா அளித்துவிட்டது, பாருங்கள்!" என்று வியந்து பேசுகிறார், இந்த ஆசிரியர். ஜினிவாவில் 1562-ஆம் ஆண்டில் மந்திரவாதம் செய்ததற்காக 12 பேர்களை உயிரோடு வைத்துக் கொளுத்திவிட்டார்கள். விபசாரக் குற்றத்துக்காக ஒரு ஸ்திரீயை ரோன் நதியிலே ஆழ்த்திவிட்டார்கள். இப்படி அந்த நாட்டில் காரியங்கள் கண்டிப்பாய் நடந்தன. 1609, 1617-இந்த ஆண்டுகளில் கால்வின் (Calvin) விதித்த சட்டங்கள் இங்கே நோக்கத் தகுந்தவை. எல்லோரும் மாதா கோயிலுக்குள் வந்து உபதேசங்களைக் கேட்டே தீரவேண்டும் என்ற சட்டங்களைக் கால்வின் பிறப்பித்தார். இத்தகைய சட்டங்களையும் 'கிறிஸ்துவபுரி'யில் காண்கிறோம்.

'கிறிஸ்துவபுரி'யைப் படித்தால், ஒவ்வொரு வரியிலும் மனிதன் ஒரு பாவி என்ற விஷயம் புலனாகும். மனிதனோடு பிறந்த பாவங்கள் இருக்கின்றன. 'உஷார்! உஷார்!' என்ற ஒலிதான் அந்தப் புத்தகம் முழுவதும் கேட்கிறது. அதில் காணும் உபதேசம் ஒன்றைப் படித்தால் போதும்: "கிறிஸ்துவபுரியில் இரவு முழுவதும் விளக்குகள் எரிந்து கொண்டிருந்தால், இருளை ஆள்கிற சாத்தானுக்கு (Satan) இங்கே இடம் இல்லாமல் போய்விடும். மேலும் ஜனங்கள் அவசியமில்லா

மல் திரிவதைத் தடுத்துவிடலாம். காவல்காரர்களுக்கும் அதிகத் தொந்தரவு நிகழாது. உள்ளத்திலும் இருளுக்கு இடம் தராதீர்கள். உங்கள் ஆத்ம தீபம் சதா எரிந்துகொண்டிருக்கட்டும்.''

ஒரு கோணத்திலிருந்து 'கிறிஸ்துவபுரி'யை நோக்குகிறபோது, சுதந்தரம் அடைந்த குழுக்கள் நிறைந்த நாடு அது என்று தோன்றும்; மக்களுக்குச் சுயபாத்தியதையும் சுயப்பொறுப்புணர்ச்சியும் இருப்பதாகத் தோன்றும். ஆனால் மதத் திட்டங்களுக்கு மனிதன் கட்டுப்பட்டவனாகவும் அங்கே காட்சி அளிக்கிறான்.

இவர் நிறுவியது ஒரு குடியரசு அன்று; அந்த ஊர் மாந்தர்களிடையே எழுந்ததும் அன்று. உலகத்திலே ஒத்த மனப்பண்பு உள்ளவர்களெல்லாம் ஒருங்கே கூடிய ஒரு சமுதாயமாக அதைக் கருதலாம்.

ஆண்ட்ரியே தந்திருக்கும் முகவுரையைப் பார்த்தால், இவர் ஒரு ரகசியக் குழு அமைக்க விரும்பினார்போல் தோன்றுகிறது. அந்தக் குழுமூலம் ஒரு லட்சிய நகரை அமைக்க இவர் கனவு கண்டாரோ, வேறு யாதோ ஒன்றும் விளங்கவில்லை. 'ஒரே விதமாய்க் கனவு காண்கிறவர்களெல்லாம் சேர்ந்துகொள்வார்களானால், ஒரு புதிய சமுதாயம் ஏற்படும்' என்ற கருத்துள்ளவர் ஆண்ட்ரியே. ஓவன், ஃபூரியர் முதலியோர்களுக்கு இவர் வழிகாட்டியாய்த் திகழ்கிறார்.

ஓர் உருவகக் கதைபோலத் தம் புத்தகத்தை இவர் தொடங்குகிறார்.

''நான் இந்தப் புவிமீது ஓர் அந்நியன்போலத் திரிந்துகொண்டிருந்தபோது, பொறுமையாய் உலகத்திலுள்ள கொடுமை, ஏமாற்றம், போலித்தனம் இவைகளைச் சகித்து வந்தேன். நல்ல மனிதன் ஒரே ஒருவனையாவது காண என் மனம் நாடிற்று. அவன் எனக்குக் கிடைக்கவில்லை. நான் ஆராய்ச்சிக் கடல்மீது சென்றேன். அந்தக் கடல் எனக்கு அதிகமான இன்னலை அளித்தது. கற்பனைக் கப்பலில் பிரயாணம் செய்தேன். மற்றவர்களுடன் துறைமுகத்தை விட்டுக் கிளம்பினேன். அறிவுத் தாகத்தைத் தணித்துக்கொள்ளச் செல்லுகிறவர்களுக்கு ஓராயிரம் இடுக்கண்கள் வந்து சேருமல்லவா? கொஞ்ச காலம் வரையில் என் பிரயாணத்துக்கு யாதொரு குறைவும் வரவில்லை. பிறகு பொறாமை, அவதூறு என்ற பகைப் புயல்கள் வீச ஆரம்பித்தன. எத்தியோப்பியக் கடல் கொந்தளித்தது. அமைதியான நிலை வராமல் போய் விடும்போல் இருந்தது.

''கப்பலைச் செலுத்துகிறவர்கள் தங்கள் முழுத்திறமையையும் காட்டினார்கள். பாறைகளையும் லட்சியம் செய்யாமல் முன் சென்றோம். ஆயினும் கடலின் வலிவை எங்களால் வெல்ல முடியவில்லை. ஆசைகளெல்லாம் இறந்துவிட்டன. வேறு வழியின்றி உயிர் விடத் துணிந்தோம். கப்பல் உடைந்து கடலில் ஆழ்ந்தது. சிலரைக் கடல் விழுங்கிவிட்டது. வேறு சிலர் எங்கெங்கோ சிதறி வீழ்ந்தார்கள். கடலில் சிதறிக் கிடக்கும் தீவுகளில், நீந்தத் தெரிந்தவர்களும் மிதக்கும் பலகைகளைப் பிடித்து நின்றவர்களும் ஒதுங்கினார்கள். மரணத்துக்குத் தப்பினவர் ஒரு சிலரே.

என்னைமட்டும் தன்னந்தனியே ஒரு சிறிய தீவுக்குள் கடல் ஒதுக்கியது. ஒரு புல் தடம் போல் அது காட்சி அளித்தது. அந்தத் தீவின் பெயர் காப்ஹர் சலமா (Caphar Salama). தானியமும் புல் தடங்களும் நிரம்பியதாக அது விளங்கியது. ஆறுகளும் அருவிகளும் அங்கே ஓடின. காடுகள் அதை அலங்கரித்தன. திராட்சைக் கொடிகள் வளரும் பாத்திகளுக்குக் குறைவில்லை. பல மிருகங்கள் அங்கே சஞ்சரித்தன. ஒரு சிறிய பிரபஞ்சம்போல் அது பொலிந்தது" என்று ஆண்ட்ரியே தம் கதையை ஆரம்பிக்கிறார்.

அந்த ஊரில் புக விரும்புகிற எவனையும் மூன்று பரிசோதகர்கள் பரிசோதிப்பார்கள். அந்த நாட்டுக்கு முதல்முதல் வந்தவர் ஆண்ட்ரியேதான்.

அங்கே வருகிறவன் போலி வைத்தியனாக இருக்கக்கூடாது. யாசகனுக்கு அங்கே இடமில்லை. நாடகக்காரனை அந்த நாட்டுக்குள் வரவிட மாட்டார்கள். இந்த விஷயங்களை ஆராய்வார் முதல் பரிசோதகர்.

வந்தவன் நல்ல நடத்தையுள்ளவனா என்பதை இரண்டாவது பரிசோதகர் ஆராய்வார்.

அவன் கலையில் நல்ல பயிற்சி உடையவனா, மொழிகளின் மூலத்தை ஓர்ந்தவனா, விண்ணையும் மண்ணையும் நன்கறிந்தவனா? இவைகளையெல்லாம் மூன்றாவது பரிசோதகர் துருவி ஆராய்வார். இந்த விஷயங்கள்பற்றிய கேள்விகளுக்கெல்லாம் விடையளிக்காமற் போனாலும் பாதகமில்லை; சுத்தமாய்க் கடலினால் கழுவப் பெற்று மாசற்ற எழுதுபலகைபோல ஒருவன் தூயனாய் அந்த நாட்டுக்கு வந்தாலே போதும்; இடம் பெறலாம்.

அந்த நகரம் வடிவில் சதுரம். ஒரு பக்கம் 700 அடிகள்தான். அதைச் சூழ ஒரு சுவர் உண்டு. நான்கு கோட்டைகள் அதற்கு அரணாய்த் திகழ்கின்றன. இரண்டு வரிசைகள்தான் கட்டிடங்கள். ஒரே ஒரு ராஜ வீதிதான். மார்க்கெட்டும் ஒன்றுதான். கட்டிடங்கள் யாவும் மூன்று மாடிகள் கொண்டவை. சுட்ட செங்கல் கட்டிடங்களே. எல்லாப் பொருள்களும் எங்கும் ஒரேவிதமாகக் காட்சி அளிக்கின்றன. ஆடம்பரமில்லை; அசுத்தமில்லை. கட்டிடங்கள் காற்றோட்டமுள்ளவை. அந்த நகரில் சுமார் 400 பேர் அமைதியாய் மதத்தில் மிக ஆர்வத்துடன் உறைகிறார்கள். சுவர்களுக்குப் புறம்பில் மீன் நிரம்பிய ஓர் அகழி இருக்கிறது.

அந்த நகரத்தை மூன்று பாகங்களாகப் பிரித்திருக்கிறார்கள். ஒரு பாகம் உணவு அளிக்கிறது. மற்றொரு பாகத்தில் தேகப்பயிற்சி நடக்கிறது. இன்னொரு பாகத்தில் புத்தகசாலைகள் இருக்கின்றன. அந்தத் தீவில் வேறு பாகங்கள் விவசாயத்துக்கும், தொழிற்சாலைகளுக்கும் பயன்படுகின்றன. ஜனங்கள் நடமாடாத இடங்களில் காட்டு விலங்குகள் இருக்கின்றன. அந்த விலங்குகள் மனிதர்களின் பொழுதுபோக்குக்காக இல்லை; ஏதோ அவர்களுடைய உபயோகத்துக்காகவே அங்கே திரிகின்றன.

அந்த நகர ஏற்பாடு ஒரு தகப்பன்கீழ் நடக்கும் குடியும் குடித்தனமுமன்று; பரிதி மாநகரைப் போல ஒரு சந்நியாசச் சமுதா

யமுமன்று. தொழிலுக்கேற்றவாறே அந்த நகரைப் பிரித்திருக்கிருர்கள். நகர எல்லையில் உணவை உண்டு பண்ணுவதற்கோ, அதைச் சேர்த்து வைப்பதற்கோ அமைத்த பண்டக சாலைகள் உண்டு. கைத்தொழிலும் அங்கேதான் நடைபெறுகிறது. கிழக்குத் திசையிலுள்ள பாகம் விவசாயத்துக்கு உரியது; அதில் ஒரு பகுதியை மிருகங்களை உற்பத்தி செய்வதற்காக அமைத்திருக்கிருர்கள். தென் திசைப் பாகத்தில் யந்திரசாலைகளும் ரொட்டிச் சாலைகளும் திகழ்கின்றன. வடக்குப் பாகத்தில் இறைச்சிக் கடைகளும் பொருள் வழங்கும் சாலைகளும் காட்சி அளிக்கின்றன. மேற்குத் திசையில் கொல்லன் உலைகள் இருக்கின்றன.

நகரத்தின் நான்கு மூலையிலும் நான்கு விதமான தொழில்கள் நடந்துவருகின்றன. உலோகம், கல், மரம், நெசவுக்குரிய சாமான் இந்தப் பொருள்களைக் கொண்டு, நகர மக்கள் தொழில் புரிகிருர்கள். அதிகத் திறமையும் இயற்கையாய் அமைந்துள்ள சாமர்த்தியமும் தேவைப்படும் தொழில்கள், நகரத்தின் உட் சதுரத்தில் நடைபெறும். அதிக நுட்பமோ சிரமமோ இல்லாத தொழில்கள் விசாலமான வெளிச் சதுரத்தில் நடக்கும்.

கட்டிட வேலை, நகர அமைப்பு இந்தத் துறைகளில் நிபுணரும் அதிகாரியுமான லூயிஸ் மம்ஃபோர்டு (Lewis Mumford) என்பவர் கிறிஸ்துவபுரியை வியந்து கூறியிருக்கிற விஷயம் இங்கு நோக்கத் தகுந்தது. இந்தக் காலத்தில் நகரத்தைப் பல பாகங்களாகப் பிரிப்பது, தொழிலுக்கேற்றவாறு அவைகளை அமைப்பது, நகரத்துக்குப் பக்கத்திலேயே வேளாண்மைக்கு ஏற்பாடு செய்வது இந்த முறைகளெல்லாம் கிறிஸ்துவபுரியைப் பின்பற்றியவையே.

ஒவ்வொரு தொழிலுக்கும் ஒரு குழு (Guild) இருக்கும். ஒரு வேந்தன்கீழ் வாழ்வதில் அநேக சௌகரியங்களிருப்பினும் மூவர் ஆட்சியைத்தான் (Triumvirate) கிறிஸ்துவபுரியில் காண்கிருேம். ஆண்டவன் தகப்பனுயும், சேயாகவும், தூய ஆவியாகவும் (Trinity) காட்சி அளிக்கிற காரணத்தால் மூவர் ஆட்சியை ஆண்ட்ரியே அமைத்திருக்கலாம். மனிதர்கள் தம்மைத் தாமே ஆண்டு கொள்ளமுடியாதென்ற தீர்மானமுள்ளவர் ஆண்ட்ரியே.

மத்திய பாகத்தை எட்டுப் பேர் ஆள்கிருர்கள். அவர்கள் கோட்டையில் உறைகிருர்கள். அவர்களுக்கு உதவியாக எட்டு அதிகாரிகள் இருக்கிருர்கள். ஒவ்வோர் அதிகாரிக்கும் ஆலோசனை சொல்ல நகர மாந்தர்கள் தேர்ந்தெடுத்த 24 கவுன்சிலர்களும் உண்டு. இத்தகைய பதவிகளை வகிப்பது பிறப்பாலன்று; செல்வத்தாலன்று. உயர்ந்த குணங்கள், பழுத்த அநுபவம், ஜனங்களிடையே தூண்டிவிடும் அன்புக்கனல், மரியாதை உணர்ச்சி இவைகள்தான் ஒருவர் அடைகிற பதவிக்கு வழிகள். கிறிஸ்துவ மதந்தான் அந்த நாட்டை ஆள்கிறது என்று சொல்லிவிடலாம். தங்கப் பலகையில் பொறித்து வைத்திருக்கும் ஏசுநாதரின் உபதேசமும், அவர் அடியார்கள் கண்ட அற வழிகளும், அரசியலும், ஆண்டவன் அருள் நெறியும் ஒன்றே.

இந்தக் 'கிறிஸ்துவக் குடியர' சில் மனிதனுக்குத் தனித்த சொத்துரிமை இல்லை. சமுதாயத்திலிருந்து தனி மனிதன் தனக்கு வேண்டிய பொருளைப் பெற்றுக் கொள்ளலாம். எவரிடத்திலும் பணமில்லை; பணத்தினால் பயனுமில்லை. ஆனால் இந்தக் குடியரசுக்கு மட்டும் கஜானா உண்டு. பணத்தினால் உயர்ந்தவரோ தாழ்ந்தவரோ இல்லை. குணத்தினாலும் செயலினாலுமே சான்றோர்களை மக்கள் மதிக்கிறார்கள்.

கிறிஸ்துவபுரியில் தொழிலுக்கு வந்தனை புரிந்தார்கள். கம்பனல்லா கூறியதையே ஆண்ட்ரியே கூறினாலும், இவர் இன்னும் ஒரு படி அதிகமாகச் செல்லுகிறார். அடிமைத் தொழில் கிறிஸ்துவபுரியில் இல்லை; சோம்பேறிகளுக்காக மற்றவர் பாடுபடுகிற நிலையும் இல்லை. எவ்வளவு அருவருப்பான வேலையானாலும், எல்லோரும் சமம் என்ற உணர்ச்சிச் சூழ்நிலையில் அதை எவனும் இன்பமாய் ஏற்றுக் கொள்கிறான்.

ஊரைக் காப்பது, அறுவடை செய்வது, பாட்டைகளைச் செப்பனிடுவது, கட்டிடம் எழுப்புவது, சுருங்கக் கூறுமிடத்து மற்றும் எந்தத் தொழிலையும் மக்கள் மனமுவந்து செய்கிறார்கள்.

சில தொழில்கள் மாந்தர்களை இழிவு படுத்தக்கூடும் என்று மோர் கூறினார். கிறிஸ்துவபுரியில் முரட்டுவேலை செய்பவர் முரட்டுத்தனமாயில்லை; அன்புள்ளவர்களாகத்தான் இருக்கிறார்கள். வாயில் காப்போர் குண்டோதரர்களாக இல்லை; மிதமான ஆகாரத்தைத்தான் உட்கொள்ளுகிறார்கள். அவர்களிடத்திலிருந்து துர் நாற்றம் எழவில்லை; அவர்கள் குளித்து மூழ்கிச் சுத்தமாய்த்தான் இருக்கிறார்கள். வடக்குப் பாகத்தைப் பிராணிகளின் அடுசாலைகளுக்காக ஒதுக்கிவைத்திருக்கிறார்கள். ஆனாலும் அந்தத் தொழிலிலும் மிருகத் தன்மை தோன்றவில்லை. தொழிலுக்குப் பிறகு அதற்குத் தகுந்த ஓய்வு கிடைப்பதால் எந்தத் தொழிலிலும் அயர்வில்லை.

அறிவுத் துறையையும் தொழில் துறையையும் பிளேட்டோ பிரித்தார்; ஆண்ட்ரியே பிரிக்கவில்லை. ஒவ்வொருவரும் இரு துறைகளிலும் இறங்கவேண்டும் என்று இவர் கூறுகிறார். பௌதிக சாஸ்திரம் தொழிலின் அபிவிருத்திக்கு வழி காட்டும். பண்டங்களைப் படைப்பது அவைகளைப் பயன்படுத்திக்கொள்ளும் பொருட்டே; லாபத்தைக் குறித்தன்று. இப்பொழுது காபிக் கொட்டை அதிகமாய்க் கிடைக்குமானால், பிரேசிலில் அதைக் கொளுத்தி விடுகிறார்கள்! எல்லா வேலையும் லாபத்தைக் குறித்தே நடக்கின்றன. கிறிஸ்துவபுரி மாந்தரோ தேவைக்கு மேல் உற்பத்தி செய்வதில்லை.

அவர்கள் இரண்டு விதமான உடைகளைத்தான் வைத்திருக்கிறார்கள். தொழில் செய்யும்போது ஒருவித உடை; விடுமுறை நாட்களுக்காக மற்றொரு வித உடை. இவை தவிர வேறு உடைகளில்லை. ஒருவர் 'ஆணா - பெண்ணா? முதியவரா - இளைஞரா?' என்பதை, அவர் அணிந்திருக்கும் உடையிலிருந்து தெரிந்துகொள்ளலாம். உடை தூய வெள்ளை அல்லது சாம்பல் பூத்த நிறம்.

ஒவ்வொரு குடும்பத்திலும் நாலைந்து பேர்களுக்குமேல் இல்லை.

வேலையாட்களே இல்லை. மனைவியும் கணவனுமே வீட்டு வேலைகளைப் பார்த்துக்கொள்ளுகிறார்கள்.

வேறு கற்பனை உலகங்களில் நடப்பதுபோல இந்தக் கிறிஸ்துவபுரியில் பொது உண்டிச் சாலைகள் இல்லை. அவரவருடைய வீடுகளுக்கே உண்டி வந்துவிடும். பொதுச் சாலைகளிலிருந்து குடும்பத்தின் தேவைக்குத் தகுந்தபடி உணவு வரும். கால தேச வர்த்தமானத்துக்குத் தகுந்தபடி உண்டியும் மாறும்.

பெண்களுக்குரிய தொழில் மனையில் நிகழும் தொழிலே என்று ஆண்ட்ரியே கூறிவிட்டார். அவர்களுக்கு ஓட்டுரிமை இல்லை. படிப்புத் துறையில் அவர்களுக்குச் சமான உரிமை உண்டு. மகான் பீட்டர் எந்த ஆபரணங்களைக் குறித்தாரோ அந்த ஆபரணங்களைத்தான் பெண்கள் அணிய முடியும்.

மணம் இருவர் விருப்பத்தைப் பொறுத்ததே. ஆனால் சமுதாயத்துக்கோ, குடும்பத்துக்கோ விரோதமானதாக இருத்தல் கூடாது. மணப்பது பிள்ளைப் பேற்றுக்காகவே; போர் வீரர்களைப் படைப்பதற்காக அன்று. உண்மையான கிறிஸ்துவர்களை உண்டுபண்ணுவதற்கே சமுதாயம் முயல வேண்டும் என்று ஆண்ட்ரியே கருதுகிறார்.

பள்ளிக்கூடம் விசாலமாயும் அழகாயும் இருக்கும். அங்கே மாட்டியிருக்கும் நல்ல படங்கள் குழந்தைகளின் உள்ளங்களைக் கவரும். சூழ்நிலை இன்பத்தை அளிக்கும். குழந்தைகள் வெயிலில் வேக மாட்டார்கள்; குளிரில் விறைக்க மாட்டார்கள். எல்லாம் அமைதியாக இருக்கும். யாதோர் அச்சமுமில்லை. இன்பமாய்ப் பொழுது போகும். உபாத்தியாயர்கள் நிரம்பிய அநுபவம் பெற்றவர்களாயிருப்பார்கள். சமுதாயத்திலேயே எவர்கள் அறிவில் சிறந்தவர்களாயிருப்பார்களோ அவர்களுக்கே உபாத்தியாயர் பதவி கொடுப்பார்கள். நம் காலத்திலோ வேறு வேலை ஒன்றும் கிடைக்காமற் போனால்தான், ஒருவன் உபாத்தியாயர் தொழிலில் அமர்கிறான். அதற்கேற்றவாறுதான் பள்ளிக்கூடப் பையன்களும் அமைகிறார்கள். பள்ளிக்கூட உபாத்தியாயருக்குத்தான் ஒரு சமுதாயத்தில் மிகச் சிறந்த இடம் தரவேண்டும். அவருக்கு மிக உயர்ந்த சம்பளம் அளிக்கவேண்டும். அஞ்ஞானத்தை அகற்றுகிற ஆசானுக்கே சமுதாயத்தில் முதல் ஸ்தானம் அளிக்க வேண்டும். அப்போதுதான் உபாத்தியாயர்களிடத்தில் மதிப்பு ஏற்படும்.

கடவுளை வழுத்துதல், தூய்மையான வாழ்க்கை நடத்துதல், அறிவை வளர்த்தல் - இந்த மூன்றுமே இங்கே கல்வியின் நோக்கங்களும் பயன்களும். பையன்களுக்கும் பெண்களுக்கும் ஒரே விதமான படிப்புத்தான். ஆனால் காலையில்தான் பையன்களுக்குப் படிப்பு. மாலையில் பெண்களுக்குப் படிப்பு. இடையிலுள்ள காலம் கைத்தொழிலிலும், குடும்பக் கலையிலும், பௌதிக சாஸ்திரத்திலும் கழியும். வயது முதிர்ந்த ஸ்திரீகளும் சிறந்த அறிவுள்ள ஆண்களும் உபாத்தியாயர் தொழிலை நடத்துகிறார்கள்.

பள்ளிக்கூடத்தை எட்டு ஹால்களாகப் பிரித்திருக்கிறார்கள். மாணவர்களின் வயதுக்கேற்றவாறு வகுப்புக்கள் உண்டு. எட்டு

விதமான பாடங்கள் உண்டு. முதல் ஹாலில் நடக்கும் கலை வகுப்பில் இலக்கணமும் ஹீப்ரு, கிரீக், லத்தீன் இந்த மூன்று பாஷைகளும் கற்பிப்பார்கள். ஆனால் அதிகமான பாரத்தை இளம் மூளைகளின் மீது சுமத்த மாட்டார்கள். சொற்பொழிவுக் கலையும் போதிப்பார்கள். இரண்டாம் ஹாலில் தர்க்கமும் தத்துவமும் கடவுள் நூலும் போதிப்பார்கள். மூன்றாவது ஹாலில் கணக்கு, கோண சாஸ்திரம், பீஜகணிதம் முதலிய பாடங்கள் நடக்கும். நான்காம் ஹால் சங்கீதத்துக்காக அமைந்தது. சங்கீதம் தெய்வக் கலையாய் அங்கே திகழ்கிறது. ஐந்தாம் ஹாலில் வானசாஸ்திரம் கற்பிப்பார்கள். ஆறாம் ஹாலில் பௌதிக சாஸ்திரம் பயிற்றுவிப்பார்கள். ஏழாவது ஹாலில் நடத்தையைப் பற்றிய அறநூல் போதிப்பார்கள்.

கிறிஸ்துவபுரி மாந்தர் போற்றுபவை: சமத்துவம், அமைதியில் ஆர்வம், பொன்னில் வெறுப்பு இவையே. கடைசியான எட்டாம் ஹாலில் கிறிஸ்துவக் கொள்கைகளை உபதேசிப்பார்கள்; வழிபாடு, தியானம் முதலியவைகளை எப்படிச் செய்யவேண்டும் என்பதை அறிவிப்பார்கள்.

கிறிஸதுவபுரி மாந்தர் ஆசையை வெல்லவும் அஞ்ஞான இருளை அகற்றவும் முயன்றார்கள். புகலரும் பேரின்பத்தை நாடுகிற இயல்பும், சான்றோர்களின் சேர்க்கையும், அதில் எழும் ஆனந்தமும் கிறிஸ்துவபுரியில் சித்திரிக்கப் பெறுகின்றன. 'ஆண்டவன் உறைகிற இடத்தில் தண்டனைக்கு இடமுண்டோ?' என்று ஒருவர் கேட்கலாம். தெய்வத்தின்பால் புரிகிற குற்றத்துக்கு மிகுதியான தண்டனை விதிப்பார்கள். அதைவிடச் சற்றுக் குறைவாகத்தான் இருக்கும் மனிதர்பால் செய்யும் பாவத்துக்கு விதிக்கும் தண்டனை.

சொத்துக்கு ஒருவர் ஏதாவது ஒரு கெடுதலை விளைவிப்பாரானால், அதைப் பொருட்படுத்துவதில்லை. கிறிஸ்துவர்களானபடியால், நீதிபதிகள் மரண தண்டனை விதிப்பதற்கு மிகவும் தயங்குவார்கள். "மனிதனைக் கொல்லுவதில் என்ன பயன்? அவனுடைய ஆசாபாசங்களை நீக்கி அவனைச் சீர்திருத்துவதையே பெரும் நோக்கமாகக் கொள்ளவேண்டும்!" என்கிறார் ஆண்ட்ரியே. இதில் எத்தனை பெரிய விரிந்த நோக்கம் கோயில் கொண்டிருக்கிறது பாருங்கள்.

புதிய சமையல்காரி

"எங்கள் புதிய சமையல்காரி ஒரு கிழங்கை அடுப்பிலே வேக வைத்தால், அது கரைகிற வரையில் எடுக்காமல் நேரம் போக்குகிறாள்."

"நீங்கள் நல்ல அதிருஷ்டசாலிதான். அவ்வளவு நேரம் எங்கள் வீட்டிலே எவளும் நிலைத்திருப்பதேயில்லை."

—'கஸ்பர்', ஸ்வீடன்.

என்னைக் கேளுங்கள்

காப்டன் என். சேஷாத்திரிநாதன்

வைத்தியம், சுகாதாரம், ஆரோக்கியம் இவைபற்றி 'மஞ்சரி' வாசகர்கள் கேட்கும் கேள்விகளுக்கு இயன்ற மட்டில் பதிலளிக்க இந்த டாக்டர் இசைந்திருக்கிறார். இவர் வைத்தியத் துறையில் கல்வியும் அநுபவமும் நிறைந்தவர்; ரத்தப் பரிசோதனை நிபுணர்; கிண்டி இன்ஸ்டிட்யூட் அதிகாரியாக இருந்தவர். நோயுள்ளவரின் தனித் தனி நிலையை நேரில் கவனித்தே டாக்டர் வைத்தியம் செய்யவேண்டும். ஆகவே, இதில் வரும் பதில்களைப் பொதுவாகக் கொள்ளலாமே தவிர வைத்தியமே இவற்றைக் கொண்டு செய்து கொள்ளலாம் என்று நண்பர்கள் நினைக்கக் கூடாது.

தம் பெயரையும் விலாசத்தையும் வெளியிட விரும்பாத ஒருவர்:

கேள்வி: வெண் குஷ்டம் இருப்பவர்களுடன் நெருங்கிப் பழகலாமா? இது கிருமிகளால் உண்டாகும் தொத்து நோயா? இது ஏன் தோன்றுகிறது? நிவர்த்திக்க வழியுண்டா?

விடை: வெண் குஷ்டம் இதுவரை நடைபெற்றிருக்கும் ஆராய்ச்சிப்படி கிருமியால் உண்டாவதாகத் தெரியவில்லை; அது தொத்து நோயுமல்ல. நிவர்த்திக்க நிச்சயமான முறையொன்றும் இல்லை. சற்றுக் குறைந்த அளவில் இருக்கும்போது தானாகவே குணமாகி விடுகிறது.

வ. ராகவன், திருப்பூர்.

கே: என் நண்பர் நீர் பிடித்துப் பூதாகாரமான தேகம் படைத்தவர். பலம் மிகவும் குறைவு. கழுத்தில் நீரால் சதை வளர்ந்து தொங்குகிறது. இதைத் தவிர்க்க முடியுமா? என்ன செய்ய வேண்டும்? எந்த ஆகாரத்தை விலக்க வேண்டும்?

வி: ஸான்ஃபோர்டு அண்ட் மெர்ட்டன் என்னும் ஒரு கதைப் புத்தகம் இருக்கிறது. அதை நண்பர் வாசிக்கலாம். இவருக்கு வயது என்ன ஆகிறதென்று சொல்லவில்லை. குடும்பத்தாருடைய உருவத்தோற்றமும் இப்படித்தானா? இவருடைய செல்வ நிலை, தொழில், குடும்ப வாழ்வில் இருக்கும் சந்தோஷ நிலை, இப்பொழுது சாப்பிடும் உணவுப் பொருள்களின் அளவுகளும் தினுசுகளும் ஆகிய விவரங்களையும் அனுப்பியிருந்தால் நலமாக இருக்கும்.

பூதாகாரத் தோற்றம் பதினைந்து வயதுக்குக் கீழ்ப்பட்ட சிலருக்கு இருந்து பிறகு மாறி விடுவதுண்டு. பருவ வயது வந்ததும் உடம்பு ஓங்கி வளர்ந்து அழகு பெற்ற ஆகிருதி உண்டாகி விடுகிறது. என்றாலும், சில வேளை இத்

தகைய பூதாகார உருவத்தோற்றம் 'பிட்யூட்டரி' கிரந்தி என்ற உறுப்பின் அகச் சுரப்புக் கோளாற்றினால் ஏற்படுகிறது. இத்தகைய கோளாறு, பருவ நிலை வராமலே இருந்துவிடக் காரணமாயும் இருக்கலாம். ஆணாக இருந்தும் மயிர் வளர வேண்டிய இடங்களில் வளராதிருக்கலாம். இவர்களுடைய பாவனையெல்லாம் குழந்தையின் பாவனையைப் போல் இருக்கும்.

இவர்களைத் தவிர, பிற விஷயங்களில் சாதாரண நிலையில் இருக்கும் சிலருக்கு உடம்பு மட்டும் பூதாகாரமாக இருக்கும். இவர்களின் மிதமிஞ்சிய ஊட்டமே இதற்குக் காரணமாகும். சர்க்கரை, சர்க்கரையாக உடம்பில் மாறும் மாவும் கிழங்கும் போன்ற பொருள், வெண்ணெயையும் நெய்யையும் போன்ற நிணப் பொருள் இவைகளை அதிக அளவு உட்கொள்வதால், பூதாகார நிலை உண்டாகலாம். குடும்பத்தின் இயற்கைக் குணமும் ஓரளவு காரணமாகும். இதற்குப் பரிகாரங்கள் எத்தனையோ குறிக்கப் பெற்றிருக்கின்றன; மருந்துகளும் வகுக்கப் பெற்றிருக்கின்றன. ஆனால் ஒரு வகைச் சிகிச்சை முறைதான் வெற்றி அளிக்கிறது. உணவைச் சுருக்குதல், நல்ல தேகப் பயிற்சி செய்தல் இவை இரண்டும் முக்கியமான சிகிச்சைகள்.

இலக்குவன், அம்பாசமுத்திரம்:

கே: கை காரணமின்றி நடுங்குவானேன்? மிகவும் நுட்பமான வேலை செய்கையில் கை பதறுகிறது. பசியோடு இருக்கும் போது பதற்றம் அதிகப்படுகிறது. காரணம் என்ன?

வி: நோயின் விவரத்தைப் பார்த்தால், இவர் சிறுவயதில் பெற்றோரிடமிருந்து கடுமையான சிட்சைகள் பெற்றிருப்பார் என்று தோன்றுகிறது. "ஏன் அதைச் சரியாகச் செய்யவில்லை! இதை உடைத்துவிட்டாயே! இதைக் கீழே சிந்திவிட்டாயே!" என்றெல்லாம் பெற்றோர் திட்டியிருக்க வேண்டும். அதனாலேயே இப்படிப் பதறுகிறதென்று நான் நினைக்கிறேன். உறுதியாய்ச் சொல்ல வேண்டுமானால், மனோ வைத்திய நிபுணரைக் கேட்டால் தெரியும்.

ஆர். விஜயராகவன், எழும்பூர்:

கே: டான்ஸில்ஸ் ஏன் 'ஸெப்டிக்' ஆகிறது? 'ஸெப்டிக்' ஆவதால் உண்டாகும் தீமை என்ன? அதற்குப் பரிகாரம் என்ன?

வி: டான்ஸில்ஸ் 'ஸெப்டிக்' ஆவதன் முக்கியமான காரணம் அணுக் கிருமிகளின் தூசி, பிறர் தும்முவதால் தெறிக்கும் எச்சில் நம் வாய்க்குள் புகுவது, பானங்கள் அருந்தும்போது எச்சில் ஒட்டிக் கொள்ளும் பாத்திரங்கள் இவைகளே. டான்ஸில்ஸ் 'ஸெப்டிக்' ஆவதால் தொண்டையில் வேதனை, ஜுரம், விழுங்க முடியாமல் இருப்பது, சில வேளை கீல் வாயு உபத்திரவம் ஆகிய தொந்தரவுகள் விளையக்கூடும்.

பரிகாரம் இந்தக் காலத்தில் கஷ்டமில்லை. பெனிசிலின், ஆரோமைசின் போன்ற பூஞ்சண மருந்துகள் விரைவில் இந்த நோயைக் குணப்படுத்தி விடுகின்றன. நாள்பட்ட 'ஸெப்டிக்' டான்ஸில்களை ஆபரேஷன் செய்து நீக்குவதே

நலம். தொண்டை வைத்திய நிபுணரை அணுகி ஆபரேஷன் செய்து கொள்ளலாம்.

டி. எஸ். சுந்தரம், கொழும்பு:

கே. 1: சந்தனத்தை உடம்பில் பூசிக்கொள்வதால் சுகமுண்டா? உண்டென்றால், எப்பேர்ப்பட்ட சுகம்?

வி: சுகம் என்பதை அவரவரே அநுபவித்துப் பார்த்துத்தான் தெரிந்துகொள்ள வேண்டும். சந்தனத்தைப் பூசிக்கொண்டு பார்த்தால், எப்பேர்ப்பட்ட சுகம் என்று தெரியும்.

ஆனால், சந்தனத்துக்குச் சில குணங்கள் உண்டு. அணுக் கிருமிகளை அது ஓரளவு நாசம் செய்யும் என்று சொல்லுகிறார்கள். இதற்காகவே வேர்க் குருவைக் குணப்படுத்துவதற்கென்று அதைப் பூசிக்கொள்ளுவார்கள். சந்தனத் தைலத்தை உள்ளுக்குக் கொடுத்துச் சில மூத்திரக் கோளாறுகளைக் குணப்படுத்த ஒரு காலத்தில் முயன்றார்கள். இதுவரை இதைப் பற்றி ஆராய்ச்சி நடைபெற்றதாகத் தெரியவில்லை; அதற்கு அவசியமும் இல்லை. சந்தனத்தைவிட ஆற்றல் பெற்ற கிருமிநாசினி மருந்துகள் இன்று கிடைக்கின்றன.

கே. 2: எண்ணெய் தேய்த்து முழுகியதும் உணவு உட்கொண்டால், உடனே மலம் கழிவதன் காரணம் என்ன? அதனால் தீங்கொன்றும் இல்லையா? மற்ற நாட்களில் இப்படி மலங் கழிவதில்லை.

வி: இந்த நிகழ்ச்சியைப்பற்றி என்னிடம் வைத்தியத்துக்கு வந்த யாரும் கூறியதில்லை. ஆகவே, இதற்கு விடை ஆராய்ந்துதான் கூற முடியும். கேள்வி கேட்டவருக்கு மட்டும் நேரும் சம்பவமானால், அவருடைய வைத்தியரைக் கொண்டு பரிசீலனை செய்து சிகிச்சை செய்துகொள்ள வேண்டியது அவசியம்.

கே. எஸ். ச. நிர்மலா, ஹைதராபாது:

கே. 1: சென்ற இரண்டு வருஷங்களாக என் கைகளில் நிறைய மயிர் வளர ஆரம்பித்திருக்கிறது. மயிரின் நிறம் முன்பு கறுப்பாக இருந்தது; இப்போது தங்க நிறத்துக்கு மாறிக்கொண்டு வருகிறது. இந்த மாறுதல் எந்த ரோகத்தின் சின்னமும் இல்லையே? மயிரின் நிறத்தைக் கறுப்பாக்குவதெப்படி?

வி: இது எந்த நோயின் குறியுமில்லை. மயிர் தங்க நிறமாக மாறுவது இயற்கையே. ஒரு பரிகாரமும் வேண்டாம்.

கே. 2: பாக்குத் தின்றதும் பால் குடிக்கக் கூடாது என்கிறார்களே. இது என்?

வி: வெறும் பாக்கு இரைப்பையிலிருந்து சுரக்கும் ரசத்தை அடக்கிவிடும். அப்போது பால் குடித்தால், அது ஜீரணமாகாது.

கே. 3: கை விரல்களில் நகம் வளர்த்துக்கொண்டால் அது கெடுதலா?

வி: நகம் அதிகமாய் வளர்ந்தால் சொறியச் சொல்லும். நகத்தின் அடியில் அழுக்குச் சேர்ந்து, அதில் சிரங்கு அணுக் கிருமிகள் சேரக்கூடும். சொறிந்துகொள்ளும் போது அந்த அழுக்கு, உடலில் புகுந்து சிரங்கு, பிளவை ஆகியவற்றைத் தோற்றுவிக்கும்.

சீனிவாசன், தமிழ் நாடு பாலிடெக்னிக், மதுரை.

பதினெட்டு வயதாகியும் மயிர் தோன்ற வேண்டிய இடங்களில்

வளரவில்லையென்று இந்த மாணவர் கவலைப்படுகிறார். இன்னும் ஒன்று அல்லது இரண்டு வருஷங்களுக்குள்ளாக வளர ஆரம்பித்துவிடும் என்று நம்பலாம். இல்லையென்றாலும் இவர் கவலைப்படவேண்டாம்.

சென்னையில் ஒரு மாணவி:

கே.1: பெண்களுக்குக் கைகால், முகம் இந்த அவயவங்களில் மயிர் வளருவதைத் தவிர்க்க உபாயம் உண்டா? மஞ்சள் பூசிக்கொள்வதால் பயன் உண்டாகவில்லை.

வி: சற்றுக் கவனித்துப் பார்த்தால் பெண்களுக்குக் கையிலும் காலிலும் முகத்திலுங்கூட மயிர் வளருவதுண்டு. இது ஆண்களுக்கு வளருவதுபோல் ஆகாது. இதனால் ஒரு வகைத் தோஷமும் இல்லை.

கே. 2: இளம் வயதிலேயே, அதாவது 18 வயதுக்குள்ளேயே தலைமயிர் நரைத்துவிடுகிறதே; என்? இது போக, மயிர் கொட்டாமல் இருப்பதற்கு ஏதாவது வைத்தியம் உண்டா?

வி: கேள்வி கேட்பவள் ஒரு மாணவி; படிப்பில் தினமும் வெகு நேரம் கவனம் செலுத்துகிறாள். இதனால் தேகத்தைக் கவனித்துக்கொள்ள இயலவில்லை. மாணவிகள், சாதாரணப் பெண்களைப் போல் பசித்தபோது சாப்பிட மாட்டார்கள். தேகப் பயிற்சிக்கு அவகாசமே கிடையாது. என்னிடம் கேட்டால், மேலே சொன்ன காரணங்களாலேயே விரைவில் மயிர் நரைக்கவும் ஆரம்பிக்கிறது; உதிர்ந்துபோகவும் ஆரம்பிக்கிறது. ராஜாஜி சொல்லுகிற யோசனைதான் சரி; பள்ளியில் மூன்று மணி நேரத்துக்குமேல் மாணவிகளுக்குப் பாடம் சொல்லிவைக்கக் கூடாது. மீதியுள்ள சமயங்களில் உடல் பயிற்சிக்கு வேண்டிய வசதிகளை ஏற்படுத்திப் பயன்படுத்த வேண்டும்.

எஸ். ராஜகோபாலன், தஞ்சை.

கே: இரவில் கண் தெரியாமல் போவது எதனாலே? நிவர்த்திக்க மூக்குக் கண்ணாடி உபயோகிக்கலாமா? டானிக், மீன் எண்ணெய் இவைகளைச் சாப்பிடுவதால் இது குணமாகுமா?

வி: இரவில் கண் தெரியாமல் போவதற்கு முக்கியமான காரணம் ஏ-வைட்டமின் குறைவு. ஏ-வைட்டமின் மீன் எண்ணெயில் ஏராளமாக இருப்பதால், பூரண குணம் ஏற்படலாம். ஆனால் சிலருக்கு மாலைக் கண் குடும்பதோஷம் காரணமாக ஏற்படலாம். அதற்குப் பரிகாரம் ஒன்றும் கிடையாது; மூக்குக் கண்ணாடியால் குணம் பெற முடியாது.

ஆர். ஜம்புநாதன், மதுரை:

கே: சிறுநீரில் 'உப்பு' (ஆல்புமின்) தோன்றியிருக்கிறது. இரண்டு மாதம் உப்புச் சேர்க்காமலிருந்தும் குணமாகவில்லை. பரிகாரமென்ன?

வி: உப்புச் சேர்க்காமலிருந்தும் குணமாகவில்லை யென்றால், சற்றுக் கடினமான அளவுக்கு வியாதி முற்றியிருக்க வேண்டும். வைத்தியர் நேரில் ஆராய்ந்துதான் பரிகாரம் சொல்ல இயலும்.

சில வாலிபர்களின் கேள்விகள்:

இவர்கள் எல்லாருமே ஒரே விதமான உபாதையைப்பற்றிக் கேட்டிருக்கிறார்கள். இதை ஒரு வகை நோயாகவே கருதக் கூடாது. இயற்கையாக நேரக்

கூடியது. இதனால் ஒரு வகைக் கேடும் தேகத்துக்கு விளையாது. மணமாகாத வாலிபர்களுக்கு இது நேர்ந்தே தீரும்.

ஏ. மனோகரன், கோம்பை:

கே. 1: வயிற்று வலி தாங்க முடியவில்லை. வயிறு தீப் போல் எரிகிறது. ஈரல், குலை வலி என்று கூறுகிறார்கள். வயது 56-க்கு மேல் 60-க்குள் இருக்கும். என் பாட்டியின் இந்த நோய்க்குப் பரிகாரம் கூறுவீர்களா?

வி: இந்த வயதில் தாங்க இயலாத வயிற்று வலி ஏற்பட்டால், அது புற்று நோயின் கோளாறாக இருக்கக் கூடும். உடனே டாக்டரிடம் சென்று ஆராய்ந்து சிகிச்சை செய்துகொள்ள வேண்டும்.

கே. 2: என் மனைவிக்குத் தலைப் பிரசவம் ஆகிச் சில நிமிஷத்துக்குள் குழந்தை இறந்துவிட்டது. உடனே ஜன்னி கண்டு வைத்தியரின் சிகிச்சைக்குப் பிறகு குணமாயிற்று. எவ்வளவு காலத்துக்கு அவளுடன் தாம்பத்திய உறவு கொள்ளக்கூடாது? மீண்டும் ஜன்னி வராமல் தடுக்க என்ன முன் எச்சரிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும்?

வி: அவளுடைய தேக ஆரோக்கியம் பிரசவத்துக்கு முன்னிருந்த நிலையை அடைந்து விட்டால், தாம்பத்திய உறவு கொள்ளலாம். முன் எச்சரிக்கையாக ஜன்னி நேராதபடி தடுக்க, உங்கள் வைத்தியரை நேரில் கேட்டுக்கொள்ள வேண்டும்.

இரண்டு பேர் - ஒரே டிக்கட்!

இரண்டு குடிகாரர் ஒரு ரெயில்வே ஸ்டேஷனுக்குப் போனார்கள். ஒருவன் மற்றவனைத் தன் புஜத்திலே தூக்கிக் கொண்டிருந்தான். அந்தச் சுமை தாங்காமல் தள்ளாடியபடி, ஜன்னலுக்கு முன் நின்று, "இன்ன ஊருக்கு ஒரு டிக்கட்" என்று கேட்டான்.

பணத்தைக் கையில் வாங்கிய குமாஸ்தா, நிமிர்ந்து பார்த்து, "ஒரு டிக்கட்டா? உன் நண்பனுக்கு டிக்கட் வேண்டாமா?" என்று கேட்டார்.

டிக்கட் கேட்ட குடிகாரன் தன் தோளிலே இருந்த குடிகாரனைப் பார்த்து, "என்ன மிஸ்டர்! இந்தக் குழந்தைக்கா டிக்கட்? இவனுக்கு இன்னும் ஆறு வயது நிரம்பவில்லையே!" என்றான்.

"இவனுக்கு ஆறு வயதா? ஆறடி உயரம் இருக்கிறான்! 200 பவுண்டு நிறை இருப்பான்போல் இருக்கிறது! ரத்தினக் கம்பளம்போல் தாடி மீசை வளர்ந்திருக்கிறது!" என்றான் குமாஸ்தா.

டிக்கட் கேட்டவன் தன் புஜத்திலிருந்த மற்றவனைப் பொத்தென்று கீழே போட்டுவிட்டு, "அடே முட்டாள்! நான்தான் உன்னை அப்போதே க்ஷவரம் செய்துகொள் என்றேனே, கேட்டாயா?" என்றான்.

—'லேபர்'

அமெரிக்கா - பாகிஸ்தான் ஒப்பந்தம்

★

பாகிஸ்தானுக்கு அமெரிக்கா ராணுவ உதவி செய்வது கீழ் நாடுகளின் நிலையிலே பெரிய பாதகம் விளைவிக்கும் என்பது நேருவின் கருத்து. அதை ஆதரிக்கிறது ஒரு முஸ்லிம் பத்திரிகையின் இந்தத் தலையங்கம்.

அமெரிக்கா இதற்குமுன் அநேக நாடுகளுடன் ராணுவ ஒப்பந்தம் செய்துகொண்டிருக்கிறது. துருக்கி, கிரீஸ் ஆகிய ஐரோப்பிய நாடுகளுடனும், சீனு போன்ற ஆசிய நாடுகளுடனும் ராணுவ உதவி ஒப்பந்தம் செய்துகொண்டிருக்கிறது. இந்த ஒப்பந்தங்கள் நடைபெற்ற போதெல்லாம் மற்றவர்கள் ஏன் என்று கேட்கவில்லை. ஆனுல் அமெரிக்கா - பாகிஸ்தான் ராணுவ ஒப்பந்தம் என்றவுடன் உலகமெல்லாம் இதைப்பற்றிய பேச்சாகவே இருக்கிறது. சோவியத் ருஷியா, கம்யூனிஸ்ட் சீனு, இந்தியா, ஆப்கனிஸ்தான் ஆகிய நாடுகளெல்லாம் கண்டனக் குரல்களை எழுப்பியுள்ளன. இன்னும் பல நாடுகளும், தங்கள் கவலையைத் தெரிவித்திருக்கின்றன.

அமெரிக்கா - பாகிஸ்தான் ராணுவ ஒப்பந்தத்துக்கு இவ்வளவு பெரிய எதிர்ப்பு ஏற்படக் காரணம் என்ன? உலக வல்லரசுகளின் வெற்றி அல்லது தோல்வியை நிர்ணயிக்கத் தகுந்த அவ்வளவு முக்கியம் வாய்ந்த கேந்திர ஸ்தானத்தில் பாகிஸ்தான் இருக்கிறது. சோவியத் ருஷியா, கம்யூனிஸ்ட் சீனு ஆகிய வன்மையுள்ள வல்லரசுகளின் எல்லைப்புறத்திலே இந்த நாடு அமைந்திருக்கிறது. 'பாகிஸ்தான் ஆசியாவின் இருதயம்' என்று அமெரிக்க அரசியல்வாதிகள் நினைக்கிருர்கள். இதையே பாகிஸ்தான் பிரதமர் முகம்மது அலியும் பெருமையுடன் கூறிக் கொள்ளுகிருர். இந்தக் காரணம் பற்றியே இந்தியாவின் எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல், பாகிஸ்தானுக்குப் போர்த் தளவாட உதவி அளிக்க வேண்டுமென்று அமெரிக்க அரசியல்வாதிகள் அடிக்கடி கூறிக்கொண்டிருக்கிருர்கள். இவர்களின் கூற்றுக்கு ஆதரவாகவே, இன்று அமெரிக்கத் தலைநகரிலிருந்து வந்துள்ள செய்தியும் இருக்கிறது. பாகிஸ்தானுடன் மட்டுமின்றி, ஈராக், ஈரான், ஸாதி அரேபியா முதலிய நாடுகளுடனும் அமெரிக்கா ராணுவ உதவி ஒப்பந்தப் பேச்சுவார்த்தைகள் நடத்தி வருவதாக அந்த வாஷிங்டன் செய்தி கூறுகிறது.

மத்தியக் கிழக்கிலும், தென் ஞசியாவிலும் சோவியத் ருஷியாவின் தாக்குதல் ஏற்படக் கூடுமென்று அமெரிக்கா எதிர்பார்க்கிறதாம். அந்தத் தாக்குதல்களிலிருந்து இந்தப் பிரதேசங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காகவே

மூலம்: முஸ்லிம் முரசு (தமிழ்: ஜனவரி '54), 33, அர்மீனியன் தெரு, சென்னை-1.

மேற்படி ராணுவ உதவி ஒப்பந்தங்களை அமெரிக்கா செய்து கொள்ளப்போகிறதாம். ஆனால் இந்த ஒப்பந்த நாடுகளில் எகிப்து, சிரியா, லெபனான் ஆகிய நாடுகள் இப்போது சேரப் போவதில்லையாம். ஏனென்றால், இந்த நாடுகள் சோவியத் ருஷியாவின் தாக்குதல்களுக்கு உடனடியாய் ஆளாகக் கூடிய இடங்களில் இல்லை என்று அமெரிக்க அரசியல்வாதிகள் நினைக்கிறார்கள். ஆனால் மத்தியக் கிழக்கிலுள்ள இஸ்ரேல் அரசாங்கத்துக்கு மட்டும் இன்று அமெரிக்கா எவ்வித ராணுவ உதவியும் அளிக்கத் தயங்குகிறதாம்! இஸ்ரேலுக்கு எவ்விதச் சிறிய ராணுவ உதவி அளிப்பதாயிருந்தாலும், அதனால் அரபு நாடுகளின் ஆத்திரத்துக்கும், முஸ்லிம் நாடுகளின் அதிருப்திக்கும் ஆளாக வேண்டியிருக்குமே என்று அமெரிக்க அரசியல்வாதிகள் அஞ்சுகிறார்களாம்!

சில ஆண்டுகளுக்கு முன் வரையில் அரபு நாடுகளுக்கே விரோதமாக இருந்து, இஸ்ரேல் ராஜ்யம் தோன்றத் துணை செய்த அமெரிக்கா, இன்று அரபு நாடுகளின் ஆத்திரத்துக்கு ஆளாக வேண்டியிருக்குமே என்று அஞ்சிக் கொண்டு, இஸ்ரேலுக்கு ராணுவ உதவி அளிக்கத் தயங்குவது ஆச்சரியமாகவே இருக்கிறது! மத்தியக் கிழக்கிலே இன்றுள்ள அரபு நாடுகள் 6, 7 ஆண்டுகளுக்கு முன் அங்கே இருக்கவில்லையா? அப்போது அமெரிக்காவுக்கு அரபு நாடுகளிடம் இல்லாத பயம் இப்போது எப்படி வந்தது? அமெரிக்கா அஞ்சி நடுங்கும்படியாக மத்தியக் கிழக்கிலே செல்வாக்குப் படைத்த அரபு நாடு எதுவும் புதிதாகத் தோன்றி விடவில்லை. அப்படியானால், இஸ்ரேலுக்கு ராணுவ உதவி அளித்தால் முஸ்லிம் நாடுகளின் கோபத்துக்கு ஆளாக வேண்டியிருக்குமே என்று அமெரிக்கா ஏன் பயப்பட வேண்டும்? இங்கே 'முஸ்லிம் நாடுகள்' என்று பொதுவாகச் சொல்லும்போது, அது பாகிஸ்தானைத்தான் குறிக்கிறதென்று கூறலாம்.

சுமார் 6 ஆண்டுகளுக்கு முன் உதயமான புதிய நாடாகிய பாகிஸ்தானின் அன்பையும் ஆதரவையும் பெறுவதற்கு அமெரிக்கா இன்று எது வேண்டுமானாலும் செய்யக் காத்திருக்கிறது. உலக அரங்கிலே சோவியத் ருஷியா முதலிய கம்யூனிஸ்ட் நாடுகளின் ஆதிக்கம் ஓங்காமல் தடுப்பதற்கும், அமெரிக்காவின் செல்வாக்குச் சரிந்துவிடாமல் இருப்பதற்கும், பாகிஸ்தானை எவ்வளவு காலம் பயன்படுத்திக்கொள்ள முடியுமோ அவ்வளவு காலத்துக்குத் தங்கள் ஆதிக்கமும் நல்வாழ்வும் உலகத்திலே நீடித்திருக்குமென்று அமெரிக்க ராஜதந்திரிகள் நினைக்கிறார்கள்.

சுமார் 6 ஆண்டுகளுக்கு முன் முஸ்லிம் உலகத்தைப் பற்றிக் கவலைப்படாமல், யூதர்களுக்கு ஆதரவாயிருந்து, அவர்களுக்காக ஒரு தனி ராஜ்யத்தையே (இஸ்ரேல்) தோற்றுவிக்கவும் துணை நின்ற அமெரிக்க அரசியல்வாதிகள், இன்று அரபு நாடுகளின் ஆத்திரத்துக்கு ஆளாகலாகாது என்று அறிவு நுட்பத்துடன் பேசுவதற்கு மற்றொரு காரணமும் இருக்கிறது. ஆறு ஆண்டுகளுக்கு முன்பு இருந்த

அவல நிலையிலே அரபு நாடுகள் இன்று இல்லை. பொருளாதாரத்திலும் ராணுவ பலத்திலும் எகிப்து, ஈராக், ஸாதி அரேபியா ஆகிய அரபு நாடுகள் இன்று எவ்வளவோ முன்னேறியிருக்கின்றன. இந்த நாடுகளின் வன்மையும் ஒற்றுமையும் சமீபத்தில் மிக அதிகமாகப் பெருகியிருக்கின்றன. எனவே தான் அமெரிக்கா இன்று அரபு நாடுகளை மதித்து நடக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. இந்த மனமாற்றத்துக்கு மற்றொரு காரணத்தையும் குறிப்பிடலாம். மத்தியக் கிழக்கிலுள்ள அரபு நாடுகளுக்கு ஆதரவாக அமெரிக்கா நடந்துகொண்டால் தான் பாகிஸ்தானின் பூரண ஒத்துழைப்பைப் பெற முடியும் என்ற உண்மையையும் அமெரிக்க அரசாங்க அதிபர்கள் அறிந்திருக்கிறார்கள். எனவே தான் இன்று அரபு நாடுகளை அவர்கள் அலட்சியம் செய்ய முடியவில்லை. எப்படியாவது முஸ்லிம் நாடுகளின் நல்லெண்ணத்தையும் நம்பிக்கையையும் பெற வேண்டுமென்பதே இன்று அமெரிக்காவின் அயல் நாட்டுக் கொள்கையாக இருக்கிறது.

ஆனால் அமெரிக்காவின் ஆதிக்க வேட்டைக்கும் சுயநல எண்ணத்துக்கும் பாகிஸ்தான் துணை நிற்பதை நாம் விரும்பவில்லை. இந்தியாவும் பாகிஸ்தானும் ஏனைய இஸ்லாமிய நாடுகளும் உலகத்திலே ஒரு மூன்றாவது வல்லரசுச் சக்தியாக விளங்கி, உலக சமாதானத்தைக் காப்பாற்றக் கூடிய சரியான சந்தர்ப்பமும் சூழ்நிலையும் இன்று ஏற்பட்டிருக்கின்றன. இதைப் பாகிஸ்தான் தலைவர்கள் புரிந்துகொண்டு பொறுமையுடனும் பொறுப்புணர்ச்சியுடனும் நடந்துகொள்ள வேண்டும். காஷ்மீர் பிரச்னையைக் கருத்தில் கொண்டு, கடமையுணர்ச்சியை மறந்து செயலாற்றுவது சரியல்ல. முஸ்லிம்கள் இந்த உலகத்தில் மற்றவர்களுக்கு வழி காட்டிகளாக விளங்கவேண்டும் (குர்ஆன், 2: 143) என்பதே இறைவனின் விருப்பம் ஆகும். எனவே, அவர்கள் வேறு யாருடைய வழியிலும் செல்ல வேண்டியதில்லை. சமீப காலத்தில் எந்த வல்லரசின் உதவியுமின்றியே, முஸ்லிம் நாடுகளின் சக்தியும் செல்வாக்கும் ஓங்கியிருக்கின்றன. அமெரிக்கா தன் அந்நிய நாட்டுக் கொள்கையையே மாற்றி அமைத்துக்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படும் அளவுக்கு முஸ்லிம் நாடுகளின் மதிப்பு உலக அரங்கிலே உயர்ந்திருக்கிறது! இந்த நிலை நீடித்திருக்க வேண்டுமானால், மத்தியக் கிழக்கிலுள்ள அரபு நாடுகளும், பாகிஸ்தானும் எந்த வல்லரசுக்கும் வால் பிடிக்காமல் சர்வ தேச விவகாரங்களில் சுதந்தரமாக நடந்துகொள்வதே விவேகமான செயல். பாகிஸ்தானிலே அமெரிக்காவுக்குப் படைத்தளங்கள் அளிக்கப் போவதாகச் சமீபத்தில் வெளியான வதந்தியைப்பற்றிப் பாகிஸ்தான் கவர்னர் - ஜெனரல் ஜனாப் குலாம் முகம்மது சுமார் ஒன்றரை மாதங்களுக்கு முன் லண்டனிலிருந்து பேசியபோது, "பாகிஸ்தான் யாருக்கும் வால் பிடிக்காது; சுதந்தரமாகவே செயலாற்றும்" என்று கூறினார். இதுதான் இன்று பாகிஸ்தான் பின்பற்றக் கூடிய சரியான கொள்கை.

கேட்டால் கதை போல் இருக்கிறது; ஆனால், அத்தனையும் உண்மையாம்!

ரெயில்வே விநோதம்

ஸி. எச். டி ஸெளஸா

புது டில்லியில் ரெயில்வே கண்காட்சி ஒன்று சமீபத்தில் நடந்தது. அதில் ஒரு பெரிய யானையின் மண்டையோட்டை வைத்திருந்தார்கள். அதைப்பற்றிய விவரம் இதுதான்: 1894 செப்டம்பர் 28-ஆம் தேதி யு. பி. மெயில் கல்கத்தாவுக்கு 220 மைல் தூரத்தில் குயில்கேரா என்ற இடத்தில் கவிழ்ந்துவிட்டது. பெரிய மத யானை ரெயில் பாதைக்குக் குறுக்காக வந்து நின்றதுதான் காரணம். எஞ்சினும் ஏழு பெட்டிகளும் குடை கவிழ்ந்துவிட்டன. யானையும் நசுங்கி இறந்துவிட்டது. அந்த யானையின் மண்டையோடு தான் அது.

இந்தக் காலத்திலுங் கூடக் காட்டு விலங்குகளால் இப்படி நேருவதுண்டு. சில ஆண்டுகளுக்கு முன் பழைய ஜி. ஐ. பி. ரெயில்வே மார்க்கத்தில், மதுரா-டெல்லிப் பகுதியில், ராணுவ ஸ்பெஷலை, பாதையில் முரட்டுக் காளை ஒன்று குறுக்கே நின்று கவிழ்த்துவிட்டது.

எதிர்பாராதபடி கீழ்க் கண்டதுபோல் சில சம்பவங்கள் நிகழ்ந்ததுண்டு: ரெயில் பாதையை மேற்பார்வை பார்க்கும் ஓர் இன்ஸ்பெக்டரை டாக்காவிலிருந்து 'ட்ராலி'யில் வழக்கம் போல் இரண்டு ஆட்கள் தள்ளிக் கொண்டே வந்தார்கள். இன்ஸ்பெக்டர் ஒரு கவலையும் இல்லாமல் 'ஹாய்'யாக வந்துகொண்டிருந்தார். ஒரு திருப்பத்தண்டை வரும்போது சட்டென்று எதிரே பாதையில் நாலு புலிகள் அமர்ந்திருப்பதைப் பார்த்துவிட்டார். நாம் நேரில் இதைப் பார்க்காததால் நமக்கு இது தமாஷாகப் படலாம். ஆனால் அந்த இன்ஸ்பெக்டருக்கு எப்படி இருந்திருக்கும்? இருந்தாலும் அவர் தம்மைச் சமாளித்துக்கொண்டு 'பிரேக்' போட்டார். ஆனாலும் 'ட்ராலி'யை நிறுத்த முடியவில்லை. ட்ராலி



மூலம்: ஸெண்ட்ரல் ரெயில்வே மகஸீன் (நூற்றாண்டு விசேஷ மலர்), பம்பாய்.

யைத் தள்ளி வந்த ஆட்கள் மட்டும் இதற்குள் ஓட்டம் பிடித்து விட்டார்கள். இருந்தாலும் புலிகள் பெருந்தன்மையாக நடந்துகொண்டன. ரெயில்வே ஆட்களுக்கு மட்டு மரியாதை தெரியாவிட்டாலும் புலிகள் அப்படி இல்லை. மரியாதையாகப் பாதையை விட்டு விலகிப் போய்விட்டன. இன்ஸ்பெக்டருக்கு ஓர் ஆபத்தும் நேரவில்லை.

இன்னொரு சம்பவம்: ரெயில்வேயைப் பற்றிக் கிண்டல் செய்யும் பேர்வழிகள் இதற்குப் பின்னும் கண், மூக்கு வைத்துச் சொல்வது வழக்கம்.

ஒரு ஸ்டேஷன் மாஸ்டர் தலைமை ஆபீசுக்குப் புலித்தொல்லை பற்றி இப்படித் தந்தியடித்தாராம். "பிளாட்பாரத்தில் புலி போர்ட்டரைத் தின்றுகொண்டிருக்கிறது. மேற்கொண்டு என்ன செய்ய வேண்டுமென்பதற்கு உடனே உத்தரவை எதிர்பார்க்கிறேன்." இது மிகைப்படுத்திச் சொன்ன விஷயமாக இருந்தாலும், பொதுவாக அந்தக் காலத்தில் இப்படிப் பரபரப்பூட்டும் சம்பவங்கள் நடப்பது சகஜந்தான்.

ரெயில் பாதை போட்ட புதிதில் ஒரு விபத்து நேர்ந்தது. அதுவரை அந்த மாதிரி நேர்ந்திராததால் அந்தக் காலத்தில் எல்லாருக்குமே ஒரே திகிலாகத்தான் இருந்திருக்கும். பம்பாய்க்கு அருகில் ஜி.ஐ.பி. மார்க்கத்தில் 1865 டிஸம்பர் 26-ஆந் தேதி துல்காட் பகுதியில், 17 பெட்டிகள் கொண்ட கூட்ஸ் வண்டி ஒன்று மலைமேலிருந்து இறங்கிக்கொண்டிருந்தது. அப்போது முன் யோசனையாக 'வாகன் பிரேக்' போட மறந்துவிட்டார் டிரைவர். கடைசியில் போட்டும் பலனில்லாமற் போயிற்று; எஞ்சின், பெட்டிகள் எல்லாம் கவிழ்ந்து டிரைவர், கார்டு உள்பட ஏழுபேர் உடனே இறந்துவிட்டார்கள்.

தமாஷான சில சம்பவங்களும் நடந்திருக்கின்றன. அவைகளில் ஒன்று இது:

ஜான்ஸி பகுதியில் டிவிஷனல் ஐரோப்பிய சூபரிண்டெண்டெண்டு ஒருவர் இருந்தார். அவரிடம் ஒரு குட்டி எஞ்சின், அதற்கேற்ற பெட்டிகள், கை காட்டி, ஸ்டேஷன் எல்லாம் ஒன்று விடாமல் இருந்தன. அவர் இவைகளுக்காக ஓரளவுக்குப் பணமும் செலவழித்திருந்தார். ஒரு பித்தானை அழுத்த வேண்டியதுதான்: உடனே எல்லாம் ஒழுங்காக வேலை செய்யும். ஸ்டேஷனில் உள்ள எல்லாரையும் அழைத்து இந்த வேடிக்கையைக் காட்டுவார். எப்போதும் இதைப்பற்றியே பேசிக்கொண்டிருப்பார்.

அந்தப் பகுதியில் அவருக்குக் கீழ்ப்பட்ட இந்திய உத்தியோகஸ்தர்கள் இரண்டு பேர் இருந்தார்கள். அவர்களுக்கு இதைப் பார்த்தும் கேட்டும் சலித்துவிட்டது. ஒரு தமாஷ் பண்ணவேண்டும் என்று தீர்மானித்தார்கள். முன்னால் அந்த அதிகாரியின் மனைவியிடம் மட்டும் விஷயத்தைத் தெரிவித்துவிட்டார்கள். அவளும் அதற்கு உடந்தையாக இருந்தாள். பிறகு அவர்கள் அடுத்துள்ள சுதேச சமஸ்தான ராஜாவிடமிருந்து வந்த மாதிரி கீழ்க்கண்டபடி போலிக் கடிதம் ஒன்று எழுதினார்கள்:

"அன்புள்ள மிஸ்டர்—

எங்கள் ராஜா சாகேப் உங்களுடைய அற்புதக் குட்டி ரெயிலை நேரில் காண விரும்புகிறார். ஒரு நாள் குறிப்பிட்

டுத் தெரிவித்தால் அதை நிதானமாகப் பார்க்க அவரை நான் அழைத்து வருகிறேன்.

தங்கள்

....

அந்தரங்கக் காரியதரிசி''

அப்படியே டிவிஷனல் சூபரிண்டெண்டும் ஒரு நாள் குறிப்பிட்டு, அன்று ராஜா சாகேபை உபசரிக்க ஏற்பாடு செய்தார்; எல்லா ரெயில்வே உத்தியோகஸ்தர்களுக்கும் 'டீ பார்ட்டி'க்கு அழைப்பு அனுப்பினர். முன் சொன்ன இரண்டு உத்தியோகஸ்தர்கள்மட்டும், 'ஏதோ அவசர ஜோலி. வர இயலாததற்கு மன்னிக்கவேண்டும்' என்று எழுதிவிட்டார்கள். பிறகு அவர்களில் ஒருவர் ராஜாவாகவும் இன்னொருவர் அவருடைய அந்தரங்கக் காரியதரிசியாகவும் (குரல், நடை உடை, பாவனை எதிலும் அடையாளங் கண்டுகொள்ள முடியாதபடி வெகு சாமர்த்தியமாக) வேஷம் போட்டுக்கொண்டு 'டீ பார்ட்டி'க்கு 'விஜயம்' செய்தார்கள்; குட்டி ரெயிலையும் பார்த்துவிட்டு நிதானமாகப் புறப்பட்டுப் போனார்கள். 'ராஜா சாகேப்' இந்தியில் பேசினர். அவருடைய 'காரியதரிசி' அதை மொழிபெயர்த்து வந்தார்.

பல மாதங்கள் கழித்துத்தான் அதிகாரிக்கு விஷயம் தெரிந்தது. இருந்தாலும் அவர் நல்ல மனுஷரானதால் மனத்தில் ஒன்றும் வைத்துக்கொள்ளவில்லை.

முதல் மகாயுத்தத்துக்குப் பின் ரெயில் அதிகாரிகளைப் போல் சில பேர் நடித்ததுண்டு. ஒரு சம்பவம் ரசமாக இருக்கும்: ஜி. ஐ. பி. ரெயில் மார்க்கத்தில் நடந்தது இது: எங்களுக்குத் தெரிந்து ரெயில்வே வைத்திய இலாகாவில் இப்படி ஓர் உத்தியோகஸ்தர் இருந்திருக்கிறார். மகாயுத்தத்தில் வைத்தியப் படையில் சேர்ந்து மருத்துவம், ரணசிகிச்சை இரண்டிலும் அவருக்குச் சற்று அநுபவம் உண்டு. இதனால் அவரைப் பொதுவாக டாக்டர் என்றே எல்லாரும் எண்ணிவந்தார்கள். ஒரு சமயம் ஜில்லா மெடிகல் ஆபீஸர் பதவி ஒன்றுக்கு ஆள் தேவையாக இருந்தது. அப்போது இவர் யாருடைய சர்ட்டிபிகேட்டையோ வாங்கிக்கொண்டு அந்தப் பதவிக்கு மனுப்போட்டார் அதுகிடைத்தது.

ஜி. ஐ. பி. பெரிய ஆஸ்பத்திரி ஒன்றில் மருத்துவம், ரண சிகிச்சை இரண்டும் செய்து வர வேண்டியிருந்தது. கட்டிகளை அறுப்பது, காயத்துக்குக் கட்டுப் போடுவது இந்தமாதிரி சில்லறை விஷயங்கள் அவருக்குத் தெரியுமே யொழியப் பெரிய 'ஆபரேஷன்' செய்யத் தெரியாது. அந்த மாதிரி சமயங்களில் ஏதாவது சாக்குப் போக்குச் சொல்லி நழுவிவிடுவார். தம்கீழ் உத்தியோகம் பார்த்துவந்த டாக்டர்களைக் கொண்டே காரியத்தைச் சாதித்துக்கொள்வார். இப்படி அந்த ஆசாமி எத்தனையோ நாள் சால்ஜாப்புச் செய்து வந்தார்.

மனிதனுக்குப் பரீட்சை

துன்பத்தைப் பெரும்பாலான ஜனங்கள் தாங்கிக்கொள்வார்கள். ஒரு மனிதனின் உண்மையான தன்மையை அறிய வேண்டுமானல், அவனுக்கு அதிகாரத்தைக் கொடுத்துப் பாருங்கள்.

—ராபர்ட் இங்கர்ஸால்

கார்ட்டூன் கதம்பம்



''புற்றில் இருப்பது எறும்பல்ல; பாம்பு, பண்டிட்ஜி'' என்கிறார் ராஜாஜி.

—'ஃபில்மிண்டியா'

டாலர் பீரங்கிக்குள் பாகிஸ்தான் தலைவர்கள் புகலடைகிறார்கள்.

—'ப்ளிட்ஸ்'

அணுச் சக்தி (அட்டாமிக் பவர்) முன்னேறி வரும் காட்சி.

—'ஸண்டே டைம்ஸ்'



ராஜாஜி—ஈ. வே. ரா. ஊஞ்சல்.

—'சங்கர்ஸ் வீக்லி'

அதுவே வியாதியல்ல; வியாதியுடன் போராடும் சின்னம்.

குழந்தைக்கு ஜுரம் வந்தால்?

டொராத்தி வி. விப்பன்

குழந்தைக்கு ஜுரம் என்றவுடனேயே ஏதாவது செய்து உடல் உஷ்ணத்தை இயற்கை நிலைக்குக் கொண்டு வந்து விடவேண்டும் என்றுதான் அநேகம் தாய்மார்கள் எண்ணுகிறார்கள். 103, 104 டிகிரி ஜுரம் அடித்தால், எந்தத் தாய்க்குத்தான் பயமாய் இராது? ஆனல் குழந்தைக்கு நிஜமாய் உடம்பில் ஏதாவது கோளாறு இருந்தால், ஜுரம் வராதிருப்பதைவிட ஜுரம் வருவதே நல்லது.

ஜுரம் அடிக்கும் இரண்டு குழந்தைகளை எடுத்துக்கொள்வோம். ஒரு குழந்தைக்கு 104 டிகிரி ஜுரம். மற்றொரு குழந்தைக்கு 99 டிகிரிதான். எந்தக் குழந்தைக்குச் சீக்கிரம் உடம்பு குணமாகும்? 104 டிகிரி ஜுரம் அடிக்கும் குழந்தையே, 99 டிகிரி அடிக்கும் - அதாவது 'அநேகமாய் ஜுரமே இல்லாத - மற்றக் குழந்தையைவிடச் சில சமயம் வேகமாய்க் குணமடைந்து எழுந்துவிடும் என்று சொல்லலாம். இதற்குக் காரணம், 'அதிக ஜுரம் அடிக்கும் குழந்தை வியாதியை எதிர்த்துப் போராடுகிறது; குறைந்த ஜுரமுள்ள குழந்தை அவ்வாறு செய்யவில்லை' என்பதுதான்.

'ஜுரம் என்றால் என்ன? அது வந்தால் என்ன செய்யவேண்டும்? என்ன செய்யக் கூடாது? இதையெல்லாம் தாய் தெரிந்து கொள்ள வேண்டும். நோயில்லாத உடம்பில் ஏதாவது கோளாறு ஏற்பட்டால், அதை ஜுரம்தான் நமக்கு அறிவிக்கிறது. ஏதாவது தொத்து நோய் பற்றிக்கொள்ளும் போது ஜுரம் வருவதே மிகவும் நல்லது. வியாதிக் கிருமி ஒன்று குழந்தையின் உடலைப் பற்றியவுடன் குழந்தைக்கும் கிருமிக்கும் போர் தொடங்குகிறது. இந்தப் போர் நடந்துகொண்டே இருக்கும்போதுதான் குழந்தை நோயுறுகிறது. உடம்பில் தனக்குச் சௌகரியமான இடத்தில் வியாதிக்கிருமி போய்த் தொத்திக் கொண்டு ஒன்றுக்கு நூறாக விருத்தியாகிறது. சில கிருமிகள் அதிவேகமாய் விருத்தியாகிக் குழந்தையின் உடல் முழுவதும் பரவி விடுகின்றன. வேறு சில கிருமிகள் கொஞ்சகாலம் உடம்பிலேயே இருந்து பிறகு திடீரென்று ஒரே அடியாக விருத்தியாகின்றன. நன்றாய்ப் பற்றிக் கொண்டு அவை வேலை செய்யத் தொடங்கியதும், உடம்பில் உடனே தானாகவே ஒரு மாறுதல் ஏற்படுகிறது. நோய் வரப் போகிறது என்பதற்கு அடையாளமாகக் குழந்தைக்குச் சோர்வும் அமைதியின்மையும் உண்டாகும். குழந்தை வழக்கம்போல் ஓடியாட விருப்பமில்லாமல், சோர்ந்து படுத்துக் கொள்ளும்; ஆகாரம் உட்கொள்ள மறுக்கும். அதற்குப் பசி இல்லா

காப்பிரைட்: பேரெண்ட்ஸ் மகஸீன் (ஆங்கிலம்). சிக்காகோ.

மல் இருந்தாலும் தாகம் மட்டும் அதிகமாக இருக்கும். இதிலிருந்து குழந்தைக்குத் தெரியாமலே அது வியாதியை எதிர்ப்பதற்குத் தயாரா கிறது என்று தெரிந்துகொள்ள லாம்.

புஷ்டியுள்ள குழந்தையாக இருந்தால் வியாதியைப் பலமாக எதிர்த்துப் போராடும். நாடி வேக மாக அடிக்கத் தொடங்கியதும், ஜுரமும் ஏறும். உடல் முழுவதும் அதிக ரத்த ஓட்டம் ஏற்படுகிறது. வ்யாதிக்கிருமிகள் அதிவிரைவாக விருத்தி யாகும்போது, ரத்தக் குழாய்களிலிருந்து பிரத்தியேக மான ரத்த அணுக்கள் (ப்ளட் ஸெல்ஸ்) வெளிக் கிளம்பிக் கிருமி களை அழித்து விடுகின்றன. உடம் பில் ரத்த ஓட்டம் துரிதமாவ தோடு வியாதிக் கிருமிகளை அழிக் கும் ரத்த அணுக்களும் அதிகமாக உற்பத்தியாகின்றன. ரத்தவேகம் அதிகரித்திருக்கும் அளவை நாடி யிலிருந்து டாக்டர் அறிந்து கொண்டவுடன், எவ்வளவு பலத் துடன் வியாதியைக் குழந்தை எதிர்த்துப் போராடும் என்று தெரிந்துகொள்ளுகிறார். வியா தியை எதிர்ப்பதற்கு உதவியாக உடனே நோயுற்ற குழந்தையைப் போர்த்துப் படுக்க வைக்கவேண் டும். உணவைக் குறைத்து நிறையத் தண்ணீர், ஆரஞ்சு ரசம் இவை களைக் கொடுக்கவேண்டும். வெளிக் குச் சரியாகப் போயிற்றா என்று கவனிக்கவேண்டும். இவை யாவும் வியாதியை எதிர்ப்பதற்கு வேண் டிய சக்தியைக் குழந்தைக்கு அளிக் கும்.

ஜுரம் வந்திருக்கும் சமயத்தில் குழந்தை இங்கும் அங்கும் ஓடி அலையும்படி விட்டால், உடம்பில் சக்தி குறைந்து போகும். வியாதிக் கிருமிகள் விருத்தியாகாமல் தடுக்க உடம்பில் அதிக ரத்த ஓட்டம் தேவையாக இருக்கும்போது, அலைச்சலினால் சோர்வு உண்டாகி ஜீரண சக்தி குறைவுபடும். ஆகை யால்தான் நோயுற்ற குழந்தை உணவு உட்கொள்ள விருப்பமில்லா திருக்கிறது. தாயைவிடக் குழந் தையே இந்த விஷயத்தில் அதிக புத்தியோடு நடந்துகொள்ளு கிறது என்று கூறலாம். "ஜானி உணவைக் கண்ணெடுத்துப் பார்த்து மூன்று நாளாகிவிட் டதே" என்று அங்கலாய்க்கும் எத்தனையோ தாய்மார்களைப் பார்த்திருக்கிறோம் இல்லையா? எப்போதும் ஆரோக்கியமுள்ள குழந்தை என்றால், நோயுற்றிருக் கும்போது உணவை விரும்பாது. அதற்குப் பதில் குடிக்கத் தண்ணீர் தான் அதிகமாகக் கேட்கும். ஜுரம் வந்திருக்கும் சமயத்தில், தண்ணீர் நிறையக் குடிப்பது மிக வும் நல்லது. உடம்பிலுள்ள தோஷத்தைச் சிறுநீர்ப் பை வழி யாய் வெளியே அகற்றிவிடுவதற்கு அது உதவி செய்யும்.

ஜுரம், வேகமான மூச்சு, பசியின்மை, தாகம் ஆகியவைகளே குழந்தைக்குப் பக்க பலமாக இருக் கின்றன. இவைகளை அநுசரித்துத் தான் வியாதிக்குச் சிகிச்சை செய்ய வேண்டும்.

குழந்தையை அலைய விடுவது, விருப்பம் இல்லாதிருக்கும் போது வற்புறுத்திச் சாப்பிடச் செய்வது, டாக்டரிடம் குழந்தை யைக் காண்பிக்காமலே ஜுரத்தை இறக்குவதற்கு மருந்து கொடுப் பது இவையெல்லாம், குழந்தை வியாதியுடன் போராடிச் சமா ளிக்க முடியாமற் செய்துவிடும்.

தற்காலத்தில் விஷ ஜுரங்களை அகற்றச் சிறந்த மருந்துகள் கண்டு பிடித்திருக்கிறார்கள். பெனிஸிலின், ஆரோமைஸின், டெர்ராமைஸின் போன்ற மருந்துகள் உடனே வியாதிக்கிருமிகளை நாசம் செய்துவிடுகின்றன. சில மருந்துகள் கிருமிகளை உடனே அழித்துவிடுகின்றன. சில மருந்துகள் கிருமிகளைப் பலவீனப் படுத்திவிடும்; உடனே கிருமிகள் தாமாகவே சுலபமாய் அழிந்துவிடுகின்றன. எந்தக் கிருமியினால் உண்டான வியாதி என்பதைக் கண்டுபிடித்து அதற்கேற்ற மருந்தைக் கொடுக்க வேண்டும். அதி விரைவாய் வியாதியைக் கண்டிக்கும் மருந்துகள் அநேகம் தற்காலத்தில் இருக்கின்றன. மருந்தைத் தேர்ந்தெடுத்துக் கொடுத்தால் நோய் வெகு சீக்கிரமே குணம் அடையலாம். துரதிருஷ்டவசமாய் அநேகம் வியாதிகளுக்கு இன்னும் தகுந்த மருந்துகள் கண்டு பிடிக்கப்படவில்லை. இத்தகைய வியாதிகள் வந்தால், முற்காலத்தில்போல் நோயாளி தானே எதிர்த்துப் போராடும்படி விட வேண்டியிருக்கிறது.

சில சமயம் ஜுரம் 104, 105 டிகிரிக்கு மேலேகூடப் போவதுண்டு. அப்போது குழந்தை அமைதியாய்ப் படுத்துக்கொண்டிருக்க முடியாமல் கஷ்டப்படும். டாக்டர் உடனே உடல் உஷ்ணத்தை 102 டிகிரிக்குக் கொண்டு வர முயலுவார். ஜுரம் சற்றுக் குறைந்ததும் குழந்தை அமைதியாய்த் தூங்கும். ஆனால் டாக்டர் அடியோடு ஜுரத்தை இறக்குவதற்கு முயற்சி செய்யக்கூடாது; ஜுர வேகத்தைக் கொஞ்சம் தணிக்க வேண்டும்; அவ்வளவு தான்.

யந்திர மனிதன் சிருஷ்டி

தன்னைப் போலவே மற்றொரு யந்திர மனிதனைச் சிருஷ்டிக்கும் யந்திர மனிதப் பதுமை (ரொபாட்) ஒன்றை அமைக்க, பெல் டெலிஃபோன் கம்பெனியார் திட்டமிட்டிருக்கிறார்கள். ப்ரின்ஸ்டன் யூனிவர்ஸிட்டியைச் சேர்ந்த ப்ரொஃபஸர் ஜான் வான் ந்யூமான் என்ற கணித நிபுணர் இதற்குரிய மாடல் யந்திர மனிதப் பதுமை ஒன்றை இப்போதே அமைத்துள்ளார். இந்த யந்திர மனிதப் பதுமை தன் முன் குவிந்து கிடக்கும் பல சிறு பகுதிகளைப் பொறுக்கித் தன்னைப் போலவே மற்றொரு பதுமையைப் படைக்கும். உடனே அந்த இரண்டாவது பதுமை தன்னைப் போலவே மற்றொன்றை அமைக்கும் வேலையில் இறங்கிவிடும்!

—'ஹெல்த் வேஸ்'

நிபுணரின் யோசனை

நியூஸிலண்ட் வாசியான 99 வயதுக் கிழவர் ஹென்ரி மிக்' டெர்மாட் என்பவர் சொல்வது இது:

"நெடுங்காலம் வாழ்வதற்கு ஒரே ஒரு வழி உண்டு. நெடுங்காலத்துக்கு முன் பிறந்திருக்க வேண்டும்; அவ்வளவு தான்."

—'திஸ் வீக்'

ராஜபாளையம் நாய்

மா. கிருஷ்ணன்

சில நாடுகளில் அரிய வேட்டை நாய் ஜாதிகள் உண்டு. நம் தமிழ் நாட்டில் பெயர் பெற்றது இந்த ஜாதி. இதற்கு இலங்கையில் நல்ல மதிப்பு இருக்கிறதாம்.

இந்தியாவுக்குச் சொந்தமான நாய்களெல்லாம் இரண்டே வகுப்புகளைச் சேர்ந்தவை. ஆனால் திபேத் பிரதேசத்தையும் இமய மலைச் சாரலையும் நீக்கியே இப்படிச் சொல்ல முடியும்; அங்குள்ள சில ஜாதிகள்மட்டும் தோற்றத்திலும் குணத்திலும் தனிப்பட்டவை.

இமயமலை அடிவாரத்திலிருந்து கன்னியாகுமரிமட்டும் அங்கங்கே உள்ளூர் நாய்களில் பல ஜாதிகள் இருக்கின்றன. அநேகமாய் அவை ஆங்கிலத்தில் 'பறை நாய்' என்று குறிப்பிடும்இனத்தைச் சேர்ந்தவை. இடத்தையும் கிடைக்கும் உணவையும் பொறுத்து அவை அளவில் வித்தியாசப்பட்டிருக்கலாம்; மயிர்ப் போர்வையின் நீளம், அடர்த்தி, வர்ணம் இவைகளிலும் வித்தியாசமாக இருக்கலாம்; ஆனால் எல்லாம் ஓரினத்தைச் சேர்ந்தவையே. இதே இனத்தைச் சேர்ந்த இடையர் நாய்களை வேறு தேசங்களிலும் காணலாம். அங்கு அவைகளை வெகு காலமாகச் சிரத்தையுடன் விருத்தி செய்து மிகவும் சிறந்த சில ஜாதிகளையும் அடைந்திருக்கிறார்கள். ஜெர்மனியில் உதித்த 'அல்ஸேஷியன்,' வேல்ஸ் தேசத்துக் 'கார்கி,' ஆஸ்திரேலியா



மூலம்: விஞ்ஞானி (தமிழ்: ஜனவரி '54), யாழ்ப்பாணம்.

விலுள்ள 'கோல்பி' போன்ற ஜாதிகளை இதற்கு உதாரணமாகச் சொல்லலாம். இந்தியாவில் இந்த இனம் அபிவிருத்தி அடையவில்லை; இதிலிருந்து உயர்ந்த ஜாதிகளை எவரும் உற்பத்தி செய்யவில்லை.

இருந்தாலும் இந்தியாவிலும் அங்கங்கே சில சிறந்த ஜாதிகளைக் காணலாம். இவை 'பறை நாய்' வகுப்பைச் சேர்ந்தவையல்ல. வேட்டை நாய் வகுப்பைச் சேர்ந்தவை; அதிலும் மோப்பம் பிடித்து வேட்டையாடும் கிளை வகுப்பைச் சேராமல் கண் பார்வையைக் கொண்டு வேட்டையாடும் கிளை வகுப்பு நாய்கள். சில இடங்களில்தான் இவை போன்ற வேட்டை நாய்களைக் காண முடியும். வட இந்தியாவில் 'ராம்பூர்' நாயும், தக்காணத்தில் 'முதோல்' நாயும், தென்னிந்தியாவில் 'சிப்பிப் பாறை', 'கோம்பை', 'ராஜபாளையம்' ஜாதிகளும் இந்திய நாய்களுள் சிறந்தவை. இவைகளுக்குள் அளவில் பெரியது ராம்பூர் நாய்; தோற்றத்திலும் குணத்திலும் சிறந்தது ராஜபாளையம் நாய்.

அளவில் பெரிதாக இல்லாவிட்டாலும் ராஜபாளையம் நாய் பலமான உடலமைப்புக் கொண்டது. சில வேட்டை நாய்கள் விரைந்தோடுவதில் மிகவும் சாமர்த்தியம் உடையவை. நாய்ப் பந்தயங்களில் ஓடும் 'க்ரே ஹவுண்ட்' ஜாதிகளையும், மான் வேட்டையாடும் பாரசிகத்து 'ஸலூகி'யையும் இதற்கு உதாரணமாகச் சொல்லலாம். மற்றும் சில நாய்கள், சளைக்காமல் நெடுந் தூரம் ஓடும் சக்தியிருந்தும், உடல் கனத்தால் அத்தனை வேகமாக ஓடுவதில்லை. பராக்கிரமமும் பலமும் இவைகளுக்கு உண்டு. தவிர, பல கூடி வேட்டையாடும் சுபாவமும் உண்டு. முன் காலத்தில் பன்றி வேட்டைக்கு உபயோகப்பட்ட 'க்ரேட் டேன்' போன்ற மேல்நாட்டு ஜாதிகள் இந்த இனத்தைச் சேர்ந்தவை. ராஜபாளையம் நாயும் இந்த இனத்தைச் சேர்ந்ததே. எத்தனையோ நூற்றாண்டுகளாகக் காவலுக்கும் மான் வேட்டைக்கும் பன்றி வேட்டைக்கும் இதை உபயோகித்திருக்கிறார்கள். தென்னிந்தியாவில் பழங்காலத்தில் நாய்களைக் கொண்டு பன்றி வேட்டை ஆடினார்கள்.

ராஜபாளையம் நாய் மிகப் பழைய ஜாதி; முற்றும் தென்னிந்தியாவுக்கே உரியது. முன் காலத்தில் இருந்த மதிப்பு இப்போது இதற்கு இல்லை. ஏனென்றால், இந்தியாவில் அயல்நாட்டு ஜாதிகளையே இப்போது மிகவும் பாராட்டுகிறார்கள். வெகு சிலரே உள் நாட்டு நாய்களின் சிறப்பை அறிந்து அவைகளை வளர்க்கிறார்கள்.

தெற்கே ராஜபாளையம் என்ற ஊரிலும், அடுத்தாற் போலுள்ள இடங்களிலும், இந்த ஜாதியைச் சுத்தமாகக் காணலாம். எற்பார் இன்றி நலிந்திருக்கும் இந்த நாய் வேண்டுவோர் அங்கே சென்று, கிடைக்கும் குட்டிகளின் தாய் தந்தைகளை நன்கு கவனித்துப் பிறகு குட்டிகளைப் பொறுக்கி எடுப்பது அவசியம். நல்ல குலத்தைச் சேர்ந்த ராஜபாளையம் குட்டிகள் விலைக்குக் கிடைப்பது அரிது; தெரிந்தவர் மூலமாகவே இவைகளைப் பெறவேண்டும்.

நன்கு வளர்ந்த ஆண் நாயின் தோள் உயரம் சுமார் 24 அங்குலம் இருக்கலாம். கனம் 60 ராத்தல்

எடை இருக்கலாம். பெண் நாய் அளவில் சிறியது; உயரத்தில் 2 அல்லது 3 அங்குலமும் கனத்தில் 20 ராத்தலும் இருக்கும். ராஜபாளையம் நாயின் தோல் அதன் ஜாதியைக் குறிக்கும். தோல் குட்டை மயிர் போர்த்து நெகிழ்ந்திருக்கும். குரல்வளையிலும் நெற்றியிலும், நாய் வளைந்து திரும்பும்போது பக்கங்களிலும் சுருங்கி மடிப்பு விழுந்திருக்கும். வாலுக் ஜாதி நாய் முதுகு மட்டத்துக்கு மேல் வாலைத் தூக்காது; வால் சற்றேனும் சுருண்டிருக்காது. வாலின் அடிப்பாகம் மட்டும் தடித்துப் பிறகு சாட்டைபோல் மெலிந்திருக்கும்; வால் சிறிது நீளமே இருக்கும்.

ராஜபாளையம் நாய், "சும்மாச் சுண்ணும்பு போல வெளுத்திருக்காதா!" என்று, அதை மெச்சும் குரலில் சிலர் சொல்லக் கேட்டிருக்கிறேன். ஒரு நாளும் உயர் குல நாய் அப்படி இருக்காது. அதன் வர்ணம் சற்றுப் பழுப்புக் கலந்த வெள்ளை; 'சிவக்கக் காய்ச்சிய' பாலின் நிறம் என்று சொல்லலாம். தலை உச்சியிலும் முதுகின் மேல்பாகத்திலும் இன்னும் பழுப்பாக, கிட்டத் தட்டக் கோதுமை நிறமாக இருக்கும். நாயை முன் பின் தெரியாத ஒருவர், இங்கு அழுக்குப் படிந்திருக்கிறது என்றெண்ணி அதைத் தேய்த்துக் குளிப்பாட்டிய பின்பே அது ஜாதிக்குரிய வர்ணம் என்று உணர்ந்தார்! தலை உச்சியின் கீழே கன்னத்தை ஒட்டிக் காது தொங்கும். மூக்குச் சதை சிவப்பாக இருக்கும். கறுத்த மூக்குள்ள நாய் ராஜபாளையம் ஜாதி இல்லை. அந்த ஜாதிக்குக் கால் நகங்களும் சிவந்தே இருக்கும்.

படத்தில் உள்ள நாய் எட்டு மாதம் வயதான ஆண்குட்டி. ஒரு வருஷத்துக்கு மேல் உயர்ந்து வளராவிட்டாலும், அதற்கப்பால் நாயின் உடல் திரண்டு பலம் அடையும். இரண்டு வயதான பின்பே முழுச் சிறப்பையும் அடையும். அப்போது, படத்தில் காட்டியதுபோல் முன்வாய் தடித்திராது; இன்னும் சற்றுக் கூம்பியிருக்கும்.

சிறு வயதிலிருந்து இந்த ஜாதியை வீட்டில் வைத்துச் சங்கிலி கொண்டு பிணைக்காமல் முழுச் சுதந்தரமும் அளித்துப் பிரியமாக வளர்த்து வந்தால், மிகவும் சிறந்ததொரு தோழனும் காவலாளுமாகும். குட்டிப் பருவத்தில் இந்த ஜாதி சற்று முரட்டுத்தனமாக இருக்கும்; தொட்டால் கடிக்கும். இதைப் பொறுமையுடன் பழக்கி வளர்க்கவேண்டும். தவிர, சீமை ஜாதிகளுக்குப் போடுவது போல் இறைச்சியும் முட்டையும் போன்ற உடல் புஷ்டி தரும் உணவுகளைப் போட்டு வளர்க்க வேண்டும். சோற்றைத் தின்று அது முன்னுக்கு வராது. வயது வந்த பின்பே அதன் உண்மைக் குணம் விளங்கும். வளர்க்கும் முறை அறியாமல் ஜாதி நாய்களைக் கட்டிப் போட்டு வளர்ப்பதால்தான் அவை நமக்கு அடங்காமல் முரட்டுச் சுபாவம் அடைந்து விடுகின்றன. ராஜபாளையம் குட்டியைக் கட்டவே கூடாது; வீட்டில் வைத்தே வளர்க்கவேண்டும். இப்படி அன்புடனும் பொறுமையுடனும் பழக்கி வளர்த்தால், கட்டாயமாக அது நம் சொற்படி நடக்கும். இரண்டு வயதான பின்பே ராஜபாளையம் நாயின் சுபாவ நலங்கள் புலப்படும்.

தினம் பல மைல்கள் திரிந்தலை வது இந்த ஜாதிக்குள்ள இயல்பு. வளர்ப்பவர் இதற்கு வேண்டிய தேகாப்பியாசம் அளிக்க வேண் டும். ஓராண்டு நிறையுமட்டும் தானாகக் குட்டி விளையாடி ஓடு வதே போதுமானது; நெடுந்தூரம் அதை நடத்தி அலைக்கக் கூடாது. வீட்டில் அடக்கி வளர்ப்பதற்கு இது தகுந்த ஜாதி இல்லை. தோட் டத்துக் காவலிலும், வீட்டுக் காவலிலும், தன் எஜமானனின் பாதுகாப்பிலும் இந்த நாய் மிகவும் ஊக்கமாக உதவும்.

திடீர்ப் பேச்சு

திடீரென்று பிரசங்கம் செய்ய நேர்ந்தால், அதற்கு இந்த ஏழு விதிகளும் உங்களுக்கு உதவியாயிருக்கும்:

1. 'சில வார்த்தை சொல்லுங்கள்' என்று கேட்டார் களானல், சில வார்த்தையே சொல்லுங்கள்; அதற்கு மேல் சொல்லவேண்டாம்.

2. தட்டிக் கழிக்க வேண்டாம். அது உங்கள் பல வீனத்தைக் காட்டும். நீங்கள் தயார் செய்துகொள்ளவில்லை என்று சபையோர் அறிந்துகொண்டுவிட மாட்டார்கள்.

3. உங்களுக்குக் கண்டிப்பாய்ப் பேச இஷ்டமில்லை என்ருல், 'முந்திப் பேசியவர் பேச்சுக்களைப் பெரிதும் ரசித் தேன்' என்று சொல்லி உட்கார்ந்துவிடுங்கள்.

4. எந்தச் சந்தர்ப்பமாக இருந்தாலும் சரி; சில நிமிஷ நேரம் பேசுவதற்கு எப்போதும் தயாராயிருங்கள்.

5. நான் பேச வேண்டிய அவசியம் நேராத நூற்றுக் கணக்கான பேச்சுக்களை என் மனத்திலே தயார் செய்திருக் கிறேன். சமயத்தில் வருந்துவதைவிட எதற்கும் தயாரா யிருப்பது மேல்.

6. சந்தர்ப்பத்துக்கு ஏற்றவாறு குறிப்பிட்ட ஒரே ஒரு கருத்து அல்லது பிரச்னையை எடுத்துக்கொண்டு, அதைச் சுருக்கமாக விளக்குங்கள்.

7. பேசும்போதே, பின்னல் சொல்ல வேண்டியதைச் சிந்தியுங்கள். கேட்பவர் மனத்தில் ஆழ்ந்து பதியக்கூடிய ஒரு வசனத்தோடோ, உங்கள் பேச்சின் சாராம்சம் அடங்கிய ஒரு வாக்கியத்தோடோ பேச்சை முடியுங்கள்.

—ஆர்த்தர் ஆர். பல்ஃபான்ஸ்

பொற் கொல்லன்

★

உலகப் பிரசித்தி பெற்ற அரபிக் கதைகளுள் ஒன்று இது. ஏ. ஜே. ஆர்பெர்ரி என்பவர் ஆங்கிலத்தில் புது மெருகுடன் இதை எழுதியிருக்கிறார்.

பர்ஷியாவில் ஒரு பொற் கொல்லன் இருந்தான். அவனுக்குப் பெண்களின்மேல் மோகம்; நல்ல மதுவகை என்றாலும் ஆசை. ஒரு நாள் அவன் தன் நண்பன் ஒருவனுடைய வீட்டுக்குப் போனான். அங்கே சுவரில், ஓர் இள நங்கையின் படம் மாட்டியிருந்தது. அவளைப்போல் பேரழகியை அவன் அதுவரை பார்த்ததேயில்லை.

அந்தப் படத்தையே வெகு நேரம் ஆவலோடு கவனித்துக் கொண்டிருந்தான். அந்த அழகியின் உருவம் அவன் உள்ளத்தைக் கொள்ளை கொண்டு விட்டது. அதே ஏக்கமாக அவன் நாளுக்கு நாள் இளைத்துத் துரும்பாகிப் படுத்த படுக்கையாகி விட்டான்.

இப்படி இருக்கும்போது ஒரு நாள் அவனுடைய நண்பன் ஒருவன் அவனைப் பார்க்க வந்தான்; "என்னடா இது? உடம்பு இப்படியாகிவிட்டதே!" என்று விசாரித்தான்.

அதற்குப் பொற் கொல்லன், "வேறொன்றும் இல்லை; ஒரு பெண்ணின்மேல் காதல்; அது தான். நம் நண்பன் இருக்கிறானே - அவன் பெயர் என்ன? - பலானவன் - அவன் வீட்டிலே மாட்டியிருக்கிறதே, அந்தப் படத்தைப் பார்த்ததிலிருந்து அதன் மேல் காதல் கொண்டுவிட்டேன்" என்று சொல்லிப் பெருமூச்சு விட்டான்.

நண்பன், "அவ்வளவுதானா நீ! சுத்த மடையனாக இருக்கிறாயே! படத்தின்மேல் யாராவது காதல் கொள்வார்களா? அதற்குக் கண் தான் தெரியுமா? காதுதான் கேட்குமா? அது பேசத்தான் பேசுமா?" என்றான்.

"அது சரி; ஆனால் யாராவது அழகியைப் பார்த்துத்தானே அந்தப் படத்தை எழுதியிருக்க வேண்டும்?" என்றான் பொற் கொல்லன்.

"சொந்தக் கற்பனையிலிருந்தே அவன் அப்படி எழுதியிருக்கலாமோ இல்லையோ?"

"அதெப்படி இருந்தாலும் இருக்கட்டும். அவள்மேல் காதல் கொண்டு சாகுமளவுக்கு வந்து விட்டேன். உண்மையாகவே அப்படி ஓர் அழகி மட்டும் இந்த உலகத்தில் இருந்தால், அவளை

ஒருதரமாவது பார்க்க வேண்டும்; ஆண்டவன் அருளால் அதுவரை நான் உயிரோடு இருந்தால் போதும்.''

பொற் கொல்லனைப் பார்த்து விட்டுப் போனவர்கள் சும்மா இல்லை. அந்தப் படத்தை எழுதின சித்திரகாரன் யார் என்று உடனே விசாரிக்கத் தொடங்கினார்கள். அவன் வேறு ஊருக்குச் சென்றிருப்பதாகத் தெரியவே அவனுக்குக் கடிதம் எழுதினார்கள். அதில் தங்கள் நண்பன் அந்தப் பெண்ணுக்காக ஏங்கி வாடி வருவதைத் தெரிவித்தார்கள். ''கற்பனையிலிருந்து அதை எழுதினீர்களா? வாஸ்தவமாகவே எந்தப் பெண்ணையாவது பார்த்துத்தான் எழுதினீர்களா?'' என்று விசாரித்திருந்தார்கள்.

சித்திரகாரனிடமிருந்து, ''அவள் காஷ்மீரில் ஒரு மந்திரி வீட்டில் இருக்கிறாள். அவள் ஒரு தாசிப் பெண்; பாடகி'' என்று பதில் வந்தது.

பொற்கொல்லனுக்கு இது தெரிந்ததும் அவன் உடனே இந்தியாவுக்குக் கிளம்பிவிட்டான். எப்படியோ சிரமப்பட்டுக் கடைசியாகக் காஷ்மீருக்கு வந்து சேர்ந்தான். அங்கே ஒரு விடுதியில் தங்கினான். சில நாள் ஆனதும் மருந்து வியாபாரி ஒருவனோடு பழக்கம் ஏற்பட்டது; அவன் பல விஷயங்களில் அநுபவப்பட்டவன்; அறிவாளி. ஒரு நாள் பொற் கொல்லன் அவனிடம் அந்த நாட்டு அரசனைப்பற்றி விசாரித்தான்.

''ஆகா! எங்கள் ராஜா எப்பேர்ப்பட்டவர் தெரியுமா? மிகவும் நேர்மையானவர். அவரைப் போற்றாதவர் இல்லை. குடிகளை ஏற்றத் தாழ்வில்லாமல் பாதுகாத்து வருகிறார். மந்திரவாதிகளையும் சூனியக்காரர்களையும் கண்டால் மட்டும் அவருக்கு ஆகவே ஆகாது. அவர்கள் ஆணாக இருந்தாலும் சரி, பெண்ணாக இருந்தாலும் சரி, தயாதாட்சிண்ணியமே பார்க்க மாட்டார்; பேசாமல் நகரத்துக்கு வெளியில் இருக்கும் குழியில் கொண்டு தள்ளி விடும்படி உத்தரவிட்டு விடுவார். அங்கேயே அவர்கள் பட்டினி கிடந்து சாக வேண்டியதுதான்'' என்றான் வியாபாரி.

''மந்திரிகள் எப்படி?'' என்று விசாரித்தான் பொற் கொல்லன்.

வியாபாரி மடமடவென்று எல்லாரையும்பற்றிச் சுருக்கமாகச் சொன்னான். கடைசியில் அந்தப் பாடகியைப்பற்றிப் பேச்சு வந்தது.

''அவளா? அவள் பலான மந்திரியின் வீட்டில் இருக்கிறாள்'' என்றான் வியாபாரி.

பொற் கொல்லன் கொஞ்ச நாள் சும்மா இருந்தான். அதற்குள் யோசித்து ஒரு முடிவுக்கு வந்தான். பிறகு ஒரு நாள் இரவு இடியும் புடையும் மழையுமாக இருந்த சமயம் பார்த்து, அந்த மந்திரியின் வீட்டை நோக்கிப் புறப்பட்டான். கூடவே கன்னக்கோல், நூல் ஏணி முதலிய கருவிகளையும் எடுத்துச் சென்றான். நூல் ஏணியைச் சுவரில் மாட்டி மந்திரியின் மாளிகை முற்றத்தில் இறங்கினான். அங்கே அடிமைப் பெண்கள் பலர் படுத்திருந்தார்கள். சலவைக் கல் படுக்கை ஒன்றில் பௌர்ணமிச் சந்திரன்போல் விளங்கும் அழகி ஒருத்தி கண்ணயர்ந்திருந்தாள். பொற் கொல்லன் அவள் தலைமாட்டில் போய் உட்கார்ந்தான். அவள் பொன்னாடை ஒன்றைப்

போர்த்திருந்தாள். தலைப் பக்கம் தங்கக் குத்து விளக்குகளில் உயர்ந்த ரக மெழுகுவர்த்திகள் ஒளிர்ந்தன. தலையணையின்கீழ் அவள் ஒரு வெள்ளிப் பேழையில் தன் நகைகளைப் பத்திரப்படுத்தி வைத்திருப்பதைக் கண்டான் பொற் கொல்லன். அவளுடைய போர்வையை விலக்கி, கையிலிருந்த கத்தியால் அவள் தொடையில் ஓர் இடத்தில் காயப்படுத்தினான். அவள் திடுக்கிட்டு விழித்துக்கொண்டாள். ஆனால் பக்கத்திலே இப்படி ஒருவன் இருப்பதைப் பார்த்ததும் அவளுக்குக் கத்தவே வாய் எழும்பவில்லை. தன்னிடம் இருப்பதை எவனோ திருடத்தான் வந்திருக்கிறான் என்று எண்ணிக் கம்மென்று இருந்தாள். பிறகு மெதுவாக, "ஐயா, என்னை ஏன் கொல்ல வேண்டும்? உன் காலில் விழுகிறேன். என்னை ஒன்றும் செய்ய வேண்டாமே? இதோ இந்தப் பெட்டியில் இருப்பதையெல்லாம் எடுத்துக்கொண்டு போய்விடு!" என்றாள்.

பொற் கொல்லன் பெட்டியை எடுத்துக்கொண்டு போய்விட்டான். மறு நாள் விடியற்காலையில் எழுந்து நல்ல உடை உடுத்துக்கொண்டு அரசனைப் பேட்டி காணச் சென்றான்.

தரையிலே சில படும்படி வணங்கி, "மகாராஜா நீடூழி வாழ வேண்டும். அடியேன் பர்ஷியா தேசத்திலுள்ள கோரஸான் என்ற இடத்திலிருந்து வருகிறேன். தங்கள் கொற்றக் கொடியின்கீழ் இனி வாழ விரும்புகிறேன்" என்றான்.

பிறகு, "நேற்று இரவு வெகு நேரங் கழித்து இந்த ஊருக்கு வந்து சேர்ந்தேன். ஆனால் நகர வாசல் தாழிட்டிருந்தது. ஆகவே, வெளியில் படுத்திருந்தேன். சற்றுக் கண்ணயர்ந்தபோது நாலு பெண்கள் அந்தப் பக்கமாக வந்தார்கள். ஒருத்தி துடைப்பக் கட்டை, இன்னொருத்தி விசிறி, இப்படிப் பல பொருள்களின்மேல் இவர்கள் ஒவ்வொருவரும் ஏறி வந்தார்கள். இதைப் பார்த்ததுமே இவர்கள் சூனியக்காரிகளாகத்தான் இருக்கவேண்டும் என்று கண்டுகொண்டேன். என் அருகில் வந்ததும் ஒருத்தி என்னை எட்டி உதைத்தாள்; தன் கையில் இருந்த நரி வாலால் ஓங்கி அடித்தாள். எனக்குக் கோபம் பொத்துக்கொண்டு வந்தது. அவள் திரும்பும்போது என் கையிலிருந்த கத்தியால் அவள் தொடையில் குத்திக் காயப்படுத்திவிட்டேன். உடனே அவள் தள்ளித் தன் கையிலிருந்த இந்தப் பெட்டியைக் கீழே போட்டுவிட்டு ஓட்டம் பிடித்தாள். அப்புறம் இதை எடுத்துத் திறந்து பார்த்தேன். விலையுயர்ந்த நகை நட்டுக்கள் இருந்தன. இதையெல்லாம் நீங்களே எடுத்துக் கொள்ளுங்கள், மகாராஜா! நானோ துறவி; ஆண்டவன் அருளை நாடிக் காடு மலையெல்லாம் திரிகிறவன். எனக்கு இதெல்லாம் எதற்கு?" என்று சொல்லி அரசன் எதிரில் அந்தப் பெட்டியை வைத்துவிட்டுப் போய்விட்டான்.

அரசன் அதைத் திறந்து பார்த்தான். அதில் தான் முன்பு மந்திரிக்கு அளித்த முத்துமாலை இருப்பதைக் கண்டான். உடனே அந்த மந்திரியை வரவழைத்தான். அவன் வந்தான்.

“இதென்ன, பார். நான் உனக்குக் கொடுத்த முத்துமாலை தானே இது?” என்றான் அரசன்.

மந்திரி அதை உடனே அடையாளங் கண்டுகொண்டான். “ஆமாம், மகாராஜா! இதை நான் என் வீட்டில் இருக்கும் தாசிப் பெண் ஒருத்தியிடம் கொடுத்தேன்” என்றான்.

“அவளை உடனே இங்கே அழைத்து வா” என்று அரசன் உத்தரவிட்டான். ஒரு நொடியில் மந்திரி அவளை அங்கே அழைத்து வந்தான்.

“சரி. இவள் தொடையில் ஏதாவது காயம் இருக்கிறதா பார்” என்றான் அரசன்.

மந்திரி அப்படியே பார்த்தான்; அங்கே கத்திக் காயம் இருந்தது. “ஆமாம், மகாராஜா” என்றான்.

“அப்படியானால் இவள் சூனியக்காரிதான். அந்தச் சந்நியாசி சொன்னது அவ்வளவும் உண்மை; சந்தேகமே இல்லை” என்றான் அரசன். பிறகு அவளை நகருக்கு வெளியே இருக்கும் படுகுழியில் தள்ளும்படி உத்தரவிட்டான். காவலாட்களும் உடனே அதை நிறைவேற்றி விட்டார்கள்.

பொழுது சாய்ந்து இரவு வந்தது. பொற்கொல்லன், தன் கையில் ஒரு பை நிறைய ஆயிரம் தங்கக் காசுகளை எடுத்துக் கொண்டு அந்தக் குழியண்டை போனான். அங்கே காவல் காத்து வந்த ஆளோடு வெகு நேரம் பேசிக்கொண்டிருந்தான். கடைசியில், “தம்பி, இந்தப் பெண் நிரபராதி; இந்த நிலைக்கு இவள் வந்ததற்கு நான்தான் காரணம்” என்று முழு விவரத்தையும் சொன்னான். பிறகு, “இந்தா, இந்தப் பையில் ஆயிரம் தங்கக் காசுகள் வைத்திருக்கிறேன். இதை எடுத்துக்கொள். இந்தப் பெண்ணை என் ஊருக்கு அழைத்துப் போய்விடுகிறேன். இவளை இங்கே தள்ளிக் காவல் காப்பதை விட இந்தக் காசு உனக்கு எவ்வளவோ உபயோகமாக இருக்கும். ஆண்டவன் அருளால் கிடைத்தது என்று எண்ணிக் கொள். நீ மகாராஜனாக வாழ வேண்டும்” என்றான்.

காவலாள், பொற்கொல்லனின் அபாரமான யுக்தியையும் திறமையையும் கண்டு வியந்தான். அந்தப் பையைப் பெற்றுக்கொண்டு தாசிப் பெண்ணை விடுவித்தான். உடனே அவர்கள் அந்த ஊரை விட்டுப் போய்விடவேண்டுமென்று மட்டும் கண்டிப்பாகச் சொல்லிவிட்டான்.

பொற்கொல்லன் மிகவும் திருப்தியோடு அவளை அழைத்துக் கொண்டு விரைவில் தன் நாடு போய்ச் சேர்ந்தான்.

வீட்டுச் செலவுக்குப் பணம்

ஒரு பெண் இப்படிச் சொன்னாள்: “வீட்டுச் செலவுக்குப் பணம் கொடுப்பதென்றால், என் கணவருக்கு என்னவோ கஷ்டமாயிருக்கிறது. சல்லி விடாமல் அவர் பணத்தை நான் பிடுங்கிக்கொள்வது போல அவருக்குத் தோன்றுகிறது. துன்பத்துக்கு ஆளான தியாகியைப் போல், வேதனையோடு பார்க்கிறார். வரி வசூலிக்கும் தண்டல்காரியோ நான் என்று அப்போது எனக்குத் தோன்றுகிறது.”

—ஸூஸன் பாண்ட்

இந்தியக் கதை:

மார்கழி இரவு

பிரேம்சந்த்

கா. ஸ்ரீ. ஸ்ரீ. மொழிபெயர்ப்பு

[பாரத நாட்டு வாழ்க்கையை, எல்லா வகையிலும் முழுமை பெற்ற கலையோவியமாகத் தீட்டிய முதல் ஹிந்தி நாவலாசிரியர் - பிரேம்சந்த். ஆவலைத் தூண்டும் வெறும் கதைப் பகுதியையே முக்கியமாகக் கொண்ட நாவல்கள் மலிந்திருந்த காலத்திலே, ஹிந்தி நாவல் இலக்கியத்தை அவர் புதுமையான வழியிலே திருப்பி அதற்குப் புதிய வேகமூட்டினார். பரந்த அநுதாபந்தான் அவருடைய சிறந்த இலக்கியப் பண்பு. சொந்த வாழ்வில் அவருடைய மனிதத்தன்மை நன்கு மலர்ந்திருந்தது. அவர், வாழ்க்கையின் எல்லா வடிவங்களிலும் அன்பு கொண்ட பரந்த உள்ளம் படைத்தவர். ஆதலால், அவருடைய இலக்கிய நிலம் மிகவும் பரந்தது. தாம் வாழ்ந்த காலத்தின் தன்மையோடு முற்றும் ஒன்றி இயங்கிய அவர், அந்த யுக வாழ்க்கைக்குத் தம் இலக்கியத்தைக் கருவியாகக் கொண்டார். அன்றாட உலகில் பயன்படும் மனிதத்தன்மையின் பெருமையே, அவருடைய வாழ்க்கைத் தத்துவத்தின் அடிப்படை.

வாசகனுடைய ஆற்றல் முழுவதையும் தூண்டி அவனுடைய சமூக உணர்ச்சியைத் தட்டி எழுப்பித் தீவிரமாக்கும் அற்புதமான வல்லமை பிரேம்சந்தின் கதைகளுக்கு உண்டு. இன்றுங்கூட ஹிந்திக் கதை இலக்கிய உலகிலே அவர் பெற்றுள்ள இடம் ஈடு இணையற்றது.]

ஹல்கூ தன் மனைவியிடம் வந்து, "ஸஹனா வந்திருக்கிறான். வைத்திருக்கிற ரூபாயைக் கொண்டு வா; அவனிடம் கொடுத்துவிடலாம். எப்படியாவது பீடை நம்மை விட்டுத் தொலைந்தால் போதும்" என்றான்.

முன்னி வீட்டைப் பெருக்கிக் கொண்டிருந்தாள். பின்னால் திரும்பி, "மூன்று ரூபாய்தானே இருக்கிறது; அதைக் கொடுத்துவிட்டால் கம்பளம் எங்கிருந்து வரும்? மார்கழி தை மாதத்து இரவிலே வயலில் எப்படி உறங்குவாய்? அவனிடம் சொல்லு, அறுவடையிலே ரூபாயைக் கொடுத்துவிடுகிறேன், இப்போது இல்லை என்று" என்றாள்.

ஹல்கூ ஒரு கணம் தீர்மானத்துக்கு வராமலே நின்றான். 'மார்கழி மாதம் தலைவாசலில் வந்து நிற்கிறது. கம்பளம் இல்லாமல் வயலிலே இரவில் எவ்விதத்திலும் தூங்க முடியாது. ஆனால் ஸஹனா கேட்கமாட்டான்; மிரட்டுவான், திட்டுவான். நாம் குளிரில் செத்தால் அவனுக்கு என்ன? கழுத்துக்கு வந்த ஆபத்து, தலையோடு போகட்டும்' என்று நினைத்தவனாய், அவன் பருமனான தன்

உடலைச் சுமந்துகொண்டு, மனைவியின் அருகில் சென்று முகஸ்துதி செய்து, "அதைக் கொண்டு வா; சனி ஒழிந்து போகட்டும். கம்பளத்துக்கு வேறு வழி பார்க்கலாம்" என்றான்.

முன்னி அவனருகிலிருந்து தொலைவில் விலகி, கண்களைச் சுழற்றியவண்ணம், "செய்தாயே வேறு வழி! சற்றுச் சொல்லு, பார்க்கலாம், என்ன வழி செய்கிறாய் என்று. எவனாவது தானமாகக் கொடுப்பானா கம்பளம்? எவ்வளவோ பாக்கிகள் கொடுக்க வேண்டும்; ஒன்றையும் கொடுக்க முடியவில்லை. நான் சொல்கிறேன்: நீ இந்த வயலை ஏன் விட்டுத் தொலைக்கமாட்டேன் என்கிறாய்? செத்துச் சுண்ணாம்பாகிறாயே! விளைந்தால் பாக்கியைக் கொடு. தீர்ந்தது சள்ளை! பாக்கியைக் கொடுக்கத்தானே நீ பிள்ளை பிறந்திருக்கிறாய்? வயிற்றுப் பிழைப்புக்கு எங்காவது போய்க் கூலி வேலை செய்யலாம். இந்தப் பயிர் வேலை செய்தது போதும். நான் ரூபாய் கொடுக்கவே மாட்டேன்" என்றாள்.

ஹல்கூ வாட்டமடைந்து, "அப்பொழுது என்னைத் திட்டு வாங்கிக்கொள்ளச் சொல்கிறாயா?" என்றான்.

முன்னி படபடப்புடன், "அவன் ஏன் திட்டுவான்? இது அவன் ராஜ்யமா?" என்றாள்.

ஆனால் இதைக் கூறியதுமே அவளுடைய நெறித்த புருவங்கள் தளர்ந்தன. ஹல்கூவின் வாக்கியத்தில் இருந்த கடுமையான உண்மை, அச்சமுறுத்தும் விலங்கைப்போல, அவளை உற்று உருட்டிப் பார்த்தது.

அவள் உள்ளே சென்று, புரையிலிருந்து ரூபாயைக் கொண்டு வந்து, ஹல்கூவின் கையில் வைத்தாள். "இப்போதிலிருந்து நீ இந்தப் பயிர்த்தொழிலை விட்டுவிடு. கூலி வேலையிலே சுகமாக ஒரு வேளைச் சோறாவது தின்னக் கிடைக்கும். எவனும் நம்மிடம் வந்து அட்டம் செலுத்த மாட்டான். நன்றாகத்தான் இருக்கிறது இந்த வேளாண்மை! கூலியிலே சம்பாதித்துக்கொண்டு வருவதையும் அதிலேயே போடுவது போக, கண்டவனிடமும் பேச்சுக் கேட்பது வேறே!" என்றாள்.

ஹல்கூ ரூபாயை வாங்கிக் கொண்டு, தன் உள்ளத்தையே எடுத்துக் கொடுப்பவன்போல, அங்கிருந்து அகன்றான். கூலிப்பணத்திலிருந்து கால் காலணாவாக மிச்சப்படுத்தி அவன் மூன்று ரூபாய் சேர்த்து வைத்திருந்தான். கம்பளம் வாங்குவதற்காக இன்று அந்தப் பணத்தை எடுத்தாயிற்று. ஒவ்வோர் அடி எடுத்து வைக்கும்தோறும் அவன் தலை வறுமையின் பளுவினால் கவிந்துகொண்டிருந்தது.

மார்கழி மாதத்து இருளடர்ந்த இரவு! வானத்திலிருந்த விண்மீன்களும் குளிரில் நடுங்குவனபோலத் தோற்றின. ஹல்கூ தன் வயலோரத்தில், கருப்பந்தோகைகளாலான ஒரு பந்தலில், மூங்கிற் கட்டிலில் துப்பட்டியைப் போர்த்துக்கொண்டு, உடல் வெடவெடவென்று நடுங்க, சுருட்டிப் படுத்திருந்தான். கட்டிலின்கீழ் அவன் தோழனான நாய் ஜபரா, வயிற்றில் முகத்தை மறைத்துக் கொண்டு, குளிர் தாங்காமல் 'கூம் கூம்' என்று குரைத்தது. அவ்

யிருவரில் ஒருவருக்காவது தூக்கம் வரவில்லை.

ஹல்கூ நாயின் முழங்கால்களைத் தன் கழுத்தோடு அணைத்துக்கொண்டு, "என்டா ஜபரா, குளிர் எடுக்கிறதா? நான் அப்பொழுதே சொன்னேனே, வீட்டுச் சாம்பலிலே படுத்துக் கிடடா என்று. இங்கே என்ன கிடைக்கும் என்று வந்தாய்? இப்போது குளிரிலே தவி; நான் என்ன செய்வது? இங்கே நான் அல்வாவும் பூரியும் தின்ன வருகிறேன் என்று நினைத்தாயா? எனக்கு முன்னே ஓடி ஓடி வந்தாயே! இப்போது அழு!" என்றான்.

ஜபரா படுத்தபடியே வாலை ஆட்டித் தன் 'கூம் கூம்' என்ற கூவலைப் பின்னும் நீட்டி, ஒரு முறை கொட்டாவி விட்டுவிட்டுச் சும்மா இருந்தது. தன் எசமானனுக்கு இந்தச் சந்தடியால்தான் தூக்கம் வரவில்லையோ என்று அதன் நாய்ப் புத்திக்குத் தோன்றியது போலும்!

ஹல்கூ கையை வெளியே நீட்டி, ஜபராவின் சில்லென்ற முதுகைத் தடவிக் கொடுத்து, "நாளையிலிருந்து என்னோடு வராதே; வந்தால் செத்துப் போய்விடுவாய். பாழாய்ப் போன இந்தக் காற்று எங்கிருந்தோ பனியைக் கொண்டு வந்து கொட்டி வீசுகிறது. எழுந்து ஒரு பீடியாவது பற்ற வைக்கலாம். எப்படியாவது இரவைக் கழிக்க வேண்டுமே! எட்டுப் பீடி குடித்தாயிற்று. இதுதான் பண்ணைத் தொழிலிலே இன்பம். எத்தனையோ பாக்கியவான்கள் இருக்கிறார்களே; குளிர் அவர்களிடம் போனால், சூட்டுக்குப் பயந்துகொண்டு ஓடி வந்துவிடும்! பருமன் பருமனாக மெத்தைகள், தலையணைகள், கம்பளங்கள்! குளிர் அங்கே போய் என்ன செய்யும்? இதெல்லாம் அவரவர் செய்த பாக்கியம்! கூலி வேலை நாம் செய்வது; மற்றவர்கள் சுகமாகத் தூங்குகிறார்கள்!" என்றான்.

அவன் எழுந்து, பள்ளத்திலிருந்து கொஞ்சம் நெருப்பெடுத்து, பீடியைப் பற்ற வைத்தான். ஜபராவும் எழுந்து உட்கார்ந்தது.

அவன் பீடி பிடித்துக் கொண்டே, "உனக்கு வேண்டுமா, ஜபரா? இதனாலே குளிர் துளியும் போகாது; சும்மா மனசுக்கு ஒரு தெம்புதான்!" என்றான்.

ஜபரா அவன் முகத்தை அன்பு ததும்பும் கண்களோடு பார்த்தது. "இன்றைக்கு எப்படியாவது இந்தக் குளிரைப் பொறுத்துக் கொள். நாளையிலிருந்து நான் இங்கே சுள்ளி, குச்சி, சருகு எல்லாம் கொண்டு வந்து போட்டு வைக்கிறேன். அதில் நுழைந்து கமுக்கமாகக் குந்திக்கொண்டால், உனக்குக் குளிரே தெரியாது" என்றான் ஹல்கூ.

ஜபரா தன் முன்னங்கால்களை அவன் முழங்கால்மீது வைத்து அவன் முகத்தினருகே தன் முகத்தைக் கொண்டு போயிற்று. அதன் வெப்பமான மூச்சு அவன்மேல் பட்டது.

அவன் பீடி குடித்த பின்பு, 'என்ன ஆனாலும் இனிமேல் தூங்கவேண்டியதுதான்' என்ற தீர்மானத்தோடு படுத்துக்கொண்டான். ஆனால் ஒரு கணத்துக்கெல்லாம் அவனது உள்ளத்தில் நடுக்கம் உண்டாயிற்று. இப்படியும் அப்படியுமாய்ப் புரண்டான். குளிர் பிசாசைப்போல, அவன் மார்பை அழுத்தியது.

எவ்வகையிலும் பொறுக்க முடியாமல் போனபோது அவன் ஐபராவை மெதுவாகக் கிளப்பி, அதன் தலையைத் தட்டித் தன் மடியில் தூங்க வைத்தான். நாயின் உடலிலிருந்து ஏதோ ஒரு நாற்றம் அடித்தது; ஆயினும் அவன் அதைத் தன் உடலோடு பொருத்திக்கொண்டு, பல மாதங்களாகத் தனக்குக் கிடைக்காத விந்தையான இன்பத்தை நுகர்ந்து கொண்டிருந்தான். ஐபராவுக்கு அதுதான் சொர்க்கம் என்று தோன்றிற்று. ஹல்கூவின் தூய ஆன்மாவோ, அந்த நாயிடம் துளியும் வெறுப்பு மணத்தை உணரவில்லை. தனக்கு நெருங்கிய நண்பனோ தம்பியோ வந்திருந்தாலும், ஹல்கூ அவனையும் இவ்வளவே பரிவுடன் தன் கழுத்தோடு அணைத்துக்கொண்டிருப்பான். தன்னை இந்த நிலைக்குக் கொணர்ந்த வறுமைக்காக அவன் வருந்தவில்லை. அது மட்டுமன்று; இந்த விந்தையான நட்பு அவனுடைய ஆன்மாவின் எல்லாக் கதவுகளையும் திறந்துவிடவே, அதன் ஒவ்வோர் அணுவும் ஒளியில் மிளிர்வதுபோலத் தோற்றியது அவனுக்கு.

திடீரென்று ஐபராவுக்கு ஏதோ ஒரு விலங்கின் காலடிச் சப்தம் கேட்டது. ஹல்கூவின் அந்தத் தனி நட்பு, நாயினிடம் புதியதோர் ஊக்கத்தை உண்டாக்கிவிட்டது. பனியை வீசும் காற்றலைகளை அது துச்சமாக எண்ணியது. அது பாய்ந்தோடி, பந்தலுக்கு வெளியே சென்று குரைத்தது. ஹல்கூ பல தடவை 'சூ சூ' என்று அதை அழைத்தான்; ஆனல் அது அவனிடம் வரவில்லை. வயலில் ஓடியோடிக் குரைத்தது. ஒரு கணம் அவனிடம் வந்தாலும் மறுகணமே அது ஓடிவிடும். பொங்கும் பேரலைபோல அதன் உள்ளத்திலே கடமையுணர்ச்சி எழும்பியது.

பின்னும் ஒரு மணி நேரம் கழிந்தது. இரவு குளிர் காற்றைக் கொண்டு கடுமையாகியது. ஹல்கூ எழுந்து உட்கார்ந்து, இரு முழங்கால்களையும் மார்போடு பொருத்திக்கொண்டு, அதில் தலையை மறைத்துக்கொண்டான். ஆயினும் குளிர் குறையவில்லை. ரத்தம் முழுவதும் தோய்ந்து விட்டது போலவும், நரம்புகளில் ரத்தத்துக்குப் பதிலாகப் பனி ஓடுவது போலவும் இருந்தது, அவனுக்கு. அவன் குனிந்தபடியே, இரவு இன்னும் எவ்வளவு பாக்கி இருக்கிறதென்று வானத்தைப் பார்த்தான். ஸப்தரிஷி மண்டலம் இன்னும் வானத்தில் பாதிக்குக்கூட வரவில்லை. அது மேலே வரும்பொழுதுதான்போது விடியும். இரவு இன்னும் ஒரு ஜாமத்துக்குமேல் இருக்கிறது.

ஹல்கூவின் வயலிலிருந்து துப்பாக்கி ரவை போய்ப் பாயக்கூடிய தொலைவில் மாந்தோப்பு ஒன்று இருந்தது. இலையுதிர் காலம் தொடங்கியிருந்தது. தோப்பில் சருகுகள் குவியல் குவியலாக விழுந்து கிடந்தன. 'போய் அவற்றைத் திரட்டி வந்து கொளுத்திக் குளிர் காயலாம். இரவில் நான் சருகுகளைத் திரட்டுவது கண்டு எவனுவது பேய் பிசாசென்று பயப்படுவான். அங்கே என்ன பூச்சி பொட்டு இருக்குமோ? ஆனல் இனிமேல் சும்மா உட்கார்ந்திருக்க முடியாது' என்று அவன் நினைத்தான்.

அருகில் இருந்த துவரைக் கொல்லைக்குச் சென்று, சில செடிகளைப் பறித்து வந்து, அவற்றை ஒரு துடைப்பமாகக் கட்டி எடுத்துக்கொண்டு, எரியும் வறட்டியைக் கையில் பிடித்தவண்ணம், அவன் தோப்புக்குச் சென்றான். ஜபரா அவன் போவதைக் கண்டதும் அருகில் வந்து வாலை ஆட்டியது.

"இனிமேல் பொறுக்க முடியாது, ஜபரா! வா, தோப்புக்குப் போய்ச் சருகுகளைத் திரட்டிக் கொண்டு வந்து குளிர் காயலாம். கொஞ்சம் சூடு ஏறினதும் வந்து தூங்கலாம். இன்னும் இரவுப் பொழுது நிரம்ப இருக்கிறது" என்றான் ஹல்கூ.

ஜபரா அவன் பேச்சைக் 'கூம் கூம்' என்று ஆமோதித்து, அவனுக்கு முன்னால் தோப்புக்குள் போயிற்று.

தோப்பில் கும்மிருட்டாக இருந்தது. அந்த இருளில் இரக்கமற்ற காற்று, இலைகளை மிதித்துக்கொண்டு சென்றது. கிளைகளிலிருந்து பனித் துளிகள் டப் டப் என்று கீழே சொட்டின.

காற்றின் ஓர் அலை மருதோன்றிப் பூக்களின் மணத்தைத் தாங்கிக்கொண்டு வந்தது.

"எவ்வளவு நல்ல மணம் வீசுகிறது, ஜபரா! உன் மூக்கிலே ஏதாவது வாசனை அடிக்கிறதா?" என்றான் ஹல்கூ.

ஜபராவுக்கு எங்கோ தரையில் கிடந்த எலும்புத் துண்டு ஒன்று கிடைத்துவிட்டது. அது அதைக் கடித்துக்கொண்டிருந்தது.

ஹல்கூ நெருப்பைக் கீழே வைத்துவிட்டு, சருகுகளைத் திரட்டினான். சிறிது நேரத்தில் சருகுக் குவியல் சேர்ந்தது. அவன் கைகள் உதறி நடுங்கின. செருப்

பில்லாத வெறுங் கால்கள் மரத்துப் போயின. அவன் சருகுகளை மலைபோலக் குவித்தான். இந்தத் தீயில் அவன் குளிரை எரித்துச் சாம்பலாக்கிவிடுவான்.

சற்று நேரத்தில் தீப் பற்றியது. அதன் ஜ்வாலை, மேலே மரத்திலிருந்த கிளைகளைத் தீண்டிக் கொண்டு பரந்தது. நிலையற்ற அந்த ஒளியில், தோப்பிலிருந்த பிரம்மாண்டமான மரங்கள், ஆழங்காணாத அந்தகாரத்தைத் தம் தலைமேல் தாங்குவன போல் நின்றன. முடிவற்ற இருட் கடலிலே அந்த ஒளி ஒரு படகைப் போல் அசைந்தாடுவதாகத் தோற்றியது.

ஹல்கூ தீயின் முன்பு உட்கார்ந்து குளிர் காய்ந்துகொண்டிருந்தான். கணப் பொழுதில் துப்பட்டியை எடுத்து அக்குளில் அழுத்திக்கொண்டு, "குளிரே, இனி உனக்கு இஷ்டமானதைச் செய்!" என்று குளிரை அறைகூவி அழைப்பவன் போல, இரண்டு கால்களையும் நீட்டிவிட்டான். குளிரின் எல்லையற்ற வல்லமையை வென்றுவிட்ட அவனால், அந்த வெற்றிப் பெருமிதத்தைத் தன் உள்ளத்தில் அடக்கிக்கொள்ள முடியவில்லை.

"என் ஜபரா, இப்போது குளிர் விடவில்லையே?" என்று அவன் ஜபராவைக் கேட்டான்.

ஜபரா, 'இனிமேல் குளிராவது, அடிப்பதாவது!' என்று சொல்வது போலக் 'கைம் கைம்' என்றது.

"முதலிலேயே இந்த உபாயம் தோன்றவில்லை. இல்லாவிட்டால் இவ்வளவு குளிரை என் பொறுத்துக்கொண்டு இருந்திருப்போம்?"

ஜபரா வாலை ஆட்டியது.

"சரி, வா. இந்தத் தீயைத் தாண்டிக் குதித்து யார் அந்தண்டை போகிறார், பார்க்கலாம்! உனக்குத் தீப் பட்டுவிட்டால் நான் வைத்தியம் செய்ய மாட்டேன்!"

ஜபரா அந்தத் தீக் குவியலை அச்சமுற்ற கண்களோடு பார்த்தது.

"முன்னியிடம் நாளைக்குச் சொல்லிவிடாதே, இல்லாவிட்டால் அவள் சண்டை பிடிப்பாள்" என்று சொல்லிவிட்டு, அவன் ஒரே குதியாக அந்தத் தீயைத் தாண்டிக் குதித்தான். கால்களில் கொஞ்சம் தீப் பட்டது; ஆனால் அது ஒன்றும் பிரமாதமில்லை. ஜபரா நெருப்பைச் சுற்றி வந்து அவனருகில் நின்றது.

"சரி, நீ இதற்கு நேராக வர வேண்டாம். அந்தப் பக்கமாக மேலே குதித்து வா, உம்!" என்றான் ஹல்கூ. அவன் மீண்டும் குதித்து, தீயைத் தாண்டி இந்தப் புறம் வந்தான்.

சருகுகள் எரிந்து போயின; தோப்பில் மீண்டும் இருள் கவிந்தது. சாம்பரின் கீழே கொஞ்சம் மறைந்திருந்த நெருப்பு, காற்றுப் பட்டதும் சற்றுக் கிளம்பும். ஆனால் கணப் பொழுதிலே மீண்டும் அவியும்.

ஹல்கூ மறுபடியும் துப்பட்டியைப் போர்த்துக்கொண்டு, சூடான சாம்பலினருகே உட்கார்ந்து, ஒரு பாட்டை முணுமுணுக்கலானான். அவன் உடலில் சூடு ஏறியிருந்தது. ஆனால் குளிர் கடுமையாக ஆக, சோம்பல் அவனை அழுத்தியது.

ஜபரா உரக்கக் குரைத்துக் கொண்டே வயலை நோக்கி ஓடி

யது. விலங்குகளின் கூட்டம் ஒன்று தன் வயலில் வந்திருப்பது போல அவனுக்குத் தோற்றியது. ஒருவேளை அது நீலமான்களின் கூட்டமாய் இருக்கலாம். அவை குதித்து ஓடும் சத்தம் நன்ருகக் காதில் விழுந்தது. அவை வயலை மேய்வதுபோல அவனுக்கு மீண்டும் புலப்பட்டது. அவை 'சர்சர்' என்று தானியத்தைத் தின்னும் ஓசை அவனுக்குக் கேட்டது.

'இராது; ஜபரா இருக்கும் போது எந்த விலங்கும் வயலில் வர முடியாது. அது எந்த விலங்கையும் வரவொட்டாமல் மேலே பாய்ந்து பிருண்டிவிடும். ஏதோ எனக்குப் பிரமை! எங்கே? இப்போது ஒன்றும் காதில் விழவில்லையே? ஏதோ ஏமாந்தேன்!' என்று அவன் நினைத்தான்.

"ஜபரா, ஜபரா!" என்று உரக்கக் கூப்பிட்டான்.

ஜபரா குரைத்துக்கொண்டு இருந்தது; அவனிடம் வரவில்லை.

மீண்டும் வயலில் ஏதோ மேயும் சத்தம் கேட்டது. இப்போது அவன் தன்னை ஏமாற்ற முடியவில்லை. தான் இருந்த இடத்திலிருந்து அசைவது அவனுக்கு விஷமாக இருந்தது. குளிர் பொறுக்காமல் அவன் அடங்கி ஒடுங்கி உட்கார்ந்திருந்தான். அந்தக் குளிரில் வயலுக்குப் போவதும், விலங்குகளின் பின் ஓடுவதும் பைத்தியக்காரத்தனமான வேலை என்று அவன் நினைத்தான். தான் இருந்த இடத்தை விட்டு அவன் அசையவில்லை.

"லிஹோ! லிஹோ! லிஹோ!" என்று அவன் உரக்கக் கூவினன்.

ஜபரா மறுபடியும் குரைத்தது. விலங்குகள் வயலை மேய்ந்துகொண்டிருந்தன. அறுவடைக்குத் தயாராக இருந்தது வயல். ஆனல் அந்தக் கொடிய விலங்குகள், செழித்த அழகிய பயிரை நாசம் செய்துகொண் டிருந்தன.

ஹல்கூ திடமான தீர்மானத்துடன் எழுந்து இரண்டு மூன்று அடிகள் எடுத்து வைத்தான். ஆனல், உடனே அவன்மேல் வீசிய குளிர்ந்த காற்று, அவனை ஆயிரம் ஊசிகள் கொண்டு குத்துவது போலவும் தேள் கொட்டுவது போலவும் இருந்தது. அவன் திரும்பவும் அணையும் தீயினருகில் வந்து உட்கார்ந்து சாம்பலைக் கிளறி, தன் குளிர்ந்த உடலுக்குச் சூடேற்றலானுன்.

ஜபரா தொண்டை கிழியக் கத்தியது. நீல மான்கள் வயலை அழித்துக்கொண் டிருந்தன. ஹல்கூ சூடான சாம்பலின் அருகில் அமைதியாக அமர்ந்திருந்தான். சோம்பல், கயிற்றைப் போல, அவனை நாலு பக்கத்திலிருந்தும் பிய்த்துக்கொண் டிருந்தது.

அதே சாம்பலின் அருகே சூடான தரையில், துப்பட்டியைப் போர்த்துக்கொண்டு அவன் தூங்கி விட்டான்.

காலையில் அவன் தூக்கம் கலைந்தபோது, நாலு புறமும் வெயில் பரவியிருந்தது. முன்னி, "இன்றைக்கெல்லாம் உறங்கிக் கொண்டுதான் இருப்பாயா? நீ இங்கே வந்து சுகமாகப் படுத்து விட்டாய்; அங்கே வயல் முழுவதும் நாசமாகிவிட்டது!" என்று சொல்லிக்கொண் டிருந்தாள்.

அவன் எழுந்து, "நீ வயலுக்குப் போய்த்தான் வருகிருயா?" என்று கேட்டான்.

அவள், "ஆமாம், பயிர் முழுவதும் நாசமாகிவிட்டது! இப்படி

யும் ஒருவன் தூங்குவானு? நீ இங்கே பந்தல் போட்டுக்கொண்டதால் என்ன பிரயோசனம்?'' என்ருள்.

''நான் இரவு செத்துப் பிழைத்தேன். நீ என்னவோ வயலைப் பற்றிப் பேசுகிருய்! வயிற்றிலே என்ன வலி, என்ன வலி! இரவெல்லாம் பட்டது எனக்கு அல்லவா தெரியும்!'' என்று அவன் பாசாங்கு செய்தான்.

இருவருமாக வரப்பின் அருகே வந்தார்கள். பார்த்தால், பயிர் முழுவதும் நசுங்கிப் பாழாகிக் கிடந்தது. ஜபரா பந்தலின் கீழே, உயிரே போய்விட்டதுபோல, அசையாமல் உறங்கியது.

இருவரும் வயலின் நிலையைப் பார்த்தார்கள். முன்னியின் முகத்தில் சோர்வு படர்ந்திருந்தது; ஆனல், ஹல்கூ மகிழ்ச்சியோடு இருந்தான்.

அவள் கவலையோடு, ''இனிமேல் கூலி வேலை செய்துதான் வரி கட்டவேண்டும்!'' என்ருள்.

ஹல்கூ மகிழ்ச்சி பொங்கு குரலில், ''இரவிலே குளிரில் இனிமேல் இங்கே தூங்கவேண்டியிராதே?'' என்ருன்.

க்விஸ் விடை

(1) மட்டை உரிக்காத கெற்றுத் தேங்காயை உலர்ந்த இடத்தில் வைத்திருந்தால், 20 முதல் 30 வருஷம் வரையில்கூட அழுகாதிருக்கும். (2) முடியாது. ஒரு கன அடி பெட்ரோலின் நிறை 6.3 பவுண்டு; நீரின் நிறையோ 8 பவுண்டு. நீரைவிடப் பெட்ரோல் லேசாயிருப்பதால், அதில் மிதக்கும் அளவுக்கு வேகமாய் மனிதன் நீந்த முடியாது. (3) படுத்தபடி தூங்காது; நின்றபடிதான் தூங்கும். (4) இல்லை. பிரிட்டிஷ் அங்குலத்தைவிட நாற்பது லட்சத்தில் ஒரு பங்கு அதிக நீளம் அமெரிக்க அங்குலம். (5) சுமார் 12 நிமிஷம். (6) சுமார் 1,400 மைல் நீளம். வெளி மங்கோலியாவில் உலவிய நாடோடி ஜாதியாரின் படையெடுப்பைத் தடுக்கவே கட்டினுர்கள். (7) உணராது. (8) ஸெனேட் சபையின் அங்கீகாரத்தோடு ஜனதிபதியே மந்திரிகளை நியமித்துக்கொள்கிருர். (9) ரைஃபிள். (10) 4. (11) 'பெத்' என்பது ஹீப்ரு பாஷையில் 'பி' என்ற ஓர் எழுத்துப் பரம். அதற்கு வீடு என்று பொருள். 'பெத்லஹேம்' என்பதற்கு 'ரொட்டி வீடு' என்று அர்த்தம். (12) 1,800, 2,000 இரண்டுக்கும் இடையே இருக்கும். (13) நெருப்புக் கோழி. (14) 'மெட்டாலிக் பொட்டாஸியம்' நீர் ஊற்றியதும் 'குப்' என்று தீப் பிடிக்கும். 'மெட்டாலிக் ஸோடியம்' பெரும்பாலும் இப்படித் தீப் பிடிக்கும். (15) சுமார் 1,800 வருஷத்தில் பாதி மதிப்பிழக்கும் (16) சுமார் ஒன்றரை காலன். (17) இருதயம். (18) 420.

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM, FOR MANJARI AT THE M. L. J. PRESS, MADRAS-4.
MANAGING EDITOR: T. J. RANGANATHAN.

உத்தியோகத்துக்குச் சிபார்சு

லிங்கன் அமெரிக்க ஜனாதிபதியானதும், ஒரு நாள் ஏராளமான வாலிபர்கள் புற்றீசல்களைப் போல அவரிடம் வேலைக்குப் போட்டியிட்டுக்கொண்டு வந்தார்கள். ஒவ்வொருவரிடமும் கட்டுக் கட்டாக யோக்கியதா பத்திரங்களும் நீள நீளமான சிபார்சுக் கடிதங்களும் இருந்தன. அவர் தம் அறையை விட்டு வெளிக் கிளம்ப முடியாதபடி பெருங்கூட்டம் நின்றது. ஈஸாப்பு கதை தோற்றுவிடும்படியாக ஓர் அற்புதமான கதையை லிங்கன் அப்பொழுது சொன்னார்:

"ஓர் ஊரில் ஓர் அரசன் இருந்தான். அவன் வேட்டைக்குப் போக விரும்பி, தன் மந்திரியை அழைத்து, 'இன்றைக்கு மழை பெய்யுமா?' என்று கேட்டான். 'அதெல்லாம் பெய்யாது. வேட்டையாட இது சரியான பருவம்' என்றான் மந்திரி.

"அரசன் வேட்டைக்குப் புறப்பட்டான். வழியில் ஒரு குடியானவன் கழுதைமேல் ஏறி எதிரே வந்தான். 'அரசே, மழை பெய்யப் போகிறது; ஆதலால் நீங்கள் அரண்மனைக்குத் திரும்பிவிடுங்கள்' என்று அவன் சொன்னான். அரசன் அவன் பேச்சைக் கேளாமலே காட்டுக்குப் போனான்.

"சிறிது நேரத்துக்கெல்லாம் மழையான மழை பிடித்துக்கொண்டது. எல்லாரும் தெப்பமாக நனைந்து ராஜதானிக்குத் திரும்பினார்கள். அரசன் அந்த மந்திரியை வேலையிலிருந்து நீக்கிவிட்டுக் குடியானவனைக் கூப்பிட்டான். 'மழை பெய்யுமென்று உனக்கு எப்படி முன்னாலேயே தெரிந்தது?' என்று கேட்டான். 'எனக்குத் தெரியாது, அரசே! என் கழுதைக்குத்தான் அது தெரியும். மழை பெய்யப்போவதாக இருந்தால் அது தன் காதை முன்னால் நீட்டிக்கொள்ளும்; வெயில் காய்வதாக இருந்தால் காதைப் பின்னுக்கு இழுத்துக்கொள்ளும்' என்றான் குடியானவன்.

"அரசன் குடியானவனை அனுப்பிவிட்டு, அந்தக் கழுதையை மந்திரியாக்கினான்.

"அரசன் செய்த பெரிய தவறு இதுதான்" என்று சொல்லி, லிங்கன் கதையை நிறுத்தினார்.

"அது எப்படி?" என்று கேட்டார்கள், சுற்றி இருந்தவர்கள்.

"அன்றையிலிருந்துதான் ஒவ்வொரு கழுதையும் உத்தியோகம் பெற விரும்புகிறது!"

—ஸ்டப்ஸ், 'கனெக்டிகட் பார் ஜர்னல்.'

February '54 Regd. No. M. 497

மஞ்சரி

விஜய - மாசி

ஊரும் உலகமும்		1
புதுவருஷப் பலன்கள்	அஸ்ட்ரலாஜிகல் மகஸீன்	3
அஜாமிலன்		6
க்விஸ்		10
ஊர் சுற்றும் பாங்க்	ஸ்போர்ட் அண்டு பாஸ்டைம்	11
கூரை ஓடு		13
பிரான்ஸில் மிதமிஞ்சிய குடி	யு. எஸ். நியூஸ்	15
பல்வலி போக்கும் பச்சிலை	மேழிச்செல்வம்	17
எறும்பின் திறமை		19
பாபுராவ் பதில் சொல்லுகிறார்	ஃபிலிமிண்டியா	23
உபநிஷத்தில் பெண்கள்	கர்மவீர்	25
காற்றிலிருந்து சக்தி		28
அரசரா? ராணியின் கணவரா?		33
மாறிய பட்டணம்	சங்கர்ஸ் வீக்லி	37
ஜப்பானியப் பெண்	ஜப்பான் டைஜெஸ்ட்	41
மரச்சிற்ப ஆலயம்	ஸ்ரீலங்கா	44
விஞ்ஞானி அளித்த மந்திரம்	ஸர்வோதயம்	47
கிறிஸ்துவபுரி	ரா. ஸ்ரீ. தேசிகன்	49
என்னைக் கேளுங்கள்	காப்டன் சேஷாத்திரிநாதன்	57
அமெரிக்கா - பாகிஸ்தான் ஒப்பந்தம்	முஸ்லிம் முரசு	62
ரெயில்வே விநோதம்	ஸென்ட்ரல் ரெயில்வே மகஸீன்	65
கார்ட்டூன் கதம்பம்		68
குழந்தைக்கு ஜுரம் வந்தால்?	பேரெண்ட்ஸ் மகஸீன்	70
ராஜபாளையம் நாய்	விஞ்ஞானி	73
பொற் கொல்லன் (அரபிக் கதை)		77
மார்கழி இரவு (இந்தியக் கதை)	பிரேம்சந்த்	81
உத்தியோகத்துக்குச் சிபார்சு		(3-ஆம் அட்டை)